# வில்லுக் குளத்துப் பறவை



# வில்லுக்குளத்துப் பறவை

(உண்மைக் கதைகள் தொகுதி - 2)

இது:

தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீட்டுப் பிரிவின்

வெளியீடு.

வில்லுக்குளத்துப் பறவை
( உண்மைக் கதைகள் தொகுதி - 2 )

வெளியீடு
வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

முதற்பதிப்பு
ஆடி 1995

அட்டை வடிவமைப்பு
ஒலிவர்

அன்பளிப்பு
ரூபா 60/-

# உள்ளே...


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | iv |
| ☆ | வில்லுக்குளத்துப் பறவை | 1 |
| ☆ | தெருவெல்லாம் சுடுகாடாய் | 13 |
| ☆ | சமயோசிதம்! | 23 |
| ☆ | ஓயாத கால்கள் | 29 |
| ☆ | இது ஒரு தொடர்கதை | 39 |
| ☆ | அப்பா இன்னும் இருக்கின்றார்...! | 47 |
| ☆ | பிரிவு | 61 |
| ☆ | காவல் | 67 |
| ☆ | சாகாத பிணங்கள் | 73 |
| ☆ | வெறுப்புக் கோலங்கள் | 85 |
| ☆ | நிதானம் | 97 |
| ☆ | எங்கள் கடல் செந்நீராகிறது... | 105 |
| ☆ | நீ புலிதான் | 117 |
| ☆ | உணர்வு | 133 |
| ☆ | பாடம் | 139 |
| ☆ | துணை | 143 |
| ☆ | குடிசைகளின் உயிர்நரம்பை அறுத்தவர்கள் | 149 |

# பதிப்புரை

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்ட அவலங்களையும், சிறீலங்கா இராணுவக் கொடூரத்தையும் சித்திரிக்கும் 'உண்மைக் கதைகள் - தொகுதி ஒன்றை' அம்மாளைக் கும்பிடுறானுகள்...! என்ற பெயரில், ஏற்கெனவே வெளியிட்டிருந்தோம்.

வில்லுக்குளத்துப் பறவை என்ற பெயரிலான 'உண்மைக் கதைகள்-தொகுதி இரண்டை', தற்போது உங்கள் கரங்களில் சேர்ப்பிக்கிறோம்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் உண்மை நிகழ்வுகளே கதைவடிவில் - உணர்வு பூர்வமாக - இங்கு பதிவு பெற்றுள்ளன. ''அமைதிப் படை'' ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் - போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்......

எல்லாமே, நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன. அண்மைய வரலாறு கலையுடன் பிணைந்து உருவான இப்படைப்புக்கள், தமிழிற்குப் 'புதிய வரவுகள்' என்று சொல்லத்தக்கவை.

இந்நூல் தொடர்பான கருத்துக்களைத் தந்துதவுமாறு, தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

– தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டுப் பிரிவு
07. 07. 1995

''வெளியே வா......!''

யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்,

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

''ஐயோ எண்ட பிள்ளைகளே!'' என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள்...... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும் .....

# வில்லுக்குளத்துப் பறவை

சறோ அக்கா முற்றத்திற்கு வந்தாள்......

வாசலில் துப்பாக்கியும் கையுமாக இந்தியப் படை வெறியர்கள்.

" நட முகாமுக்கு " என்று கத்தினான் ஒரு முரடன்.

அக்கா நடந்தாள்.

பிள்ளைகள் வாய்விட்டு அழத் தொடங்கியபோது, "ஏன் பிள்ளையள் குழறுறீங்கள்...... எதையோ கேட்கிறத்துக்குத்தானே கூட்டித்துப் போறானுவள். விட்டுவானுகள் " என்று தேற்றினாள் அவள்.

கொஞ்ச நேரத்தில் ஊரே கூடிவிட்டது.

"பாவம்......இவளை எதுக்குத்தான் கொண்டு போறானுவளோ......" என்று படபடத்தார் பக்கத்து வீட்டுக் கிழவர்.

* * *

சம்பூர் நூல்நிலையத்தை இந்தியப் படை முகாமாக மாற்றியிருந்தார்கள். கிராம மக்களுக்கு அறிவூட்ட, ஒரு காலத்தில் ஊர்ப் பெரியவர்களால் அந்த நூல்நிலையம் அமைக்கப்பட்டது. இன்று வல்லாளுமை வெறியர்களின் கொடிய அடக்குமுறையை ஒரு வரலாற்றுப் பாடமாக, சம்பூர் மக்கள் இங்கே படிக்கிறார்கள். அன்றாடம் சித்திர வதைகள் - பெண் வதைகள் - கொலைகள்......

முகாமின் - முற்றத்தில் நின்ற சறோ அக்கா நினைத்துப் பார்த்தாள்...... இந்த முகாமை ஒட்டினாற்போல் சம்பூர் வில்லுக்குளம். குளத்திற்கு மறுபக்கத்தில் - தூரத்தில் கூனித்தீவும் - அவள் வீடும். வீட்டில் பிள்ளைகள் என்ன செய்யுமோ......?

இரவாகி......உலகம் இருண்டுபோய்க் கிடந்தது. துப்பாக்கிகளோடு படை வெறியர்கள் அங்கும் இங்குமாக......

அப்போதுதான்......

அந்தக் கொடிய சிரிப்பை அவள் கேட்டாள். அறையிலிருந்து வெளியே எட்டிப்பார்த்த இந்தியப் படை மேஜர், அவளை உள்ளே வருமாறு அழைத்தான்...... பின்பு அவளுக்குத் தெரியும் - அவன்தான் மேஜர் 'கோர்'.

உள்ளே நடுங்கிக்கொண்டே போனாள் சறோ அக்கா. சாராயத்தின் நெடி மூக்கைத் துளைத்தது.

"சூடைக்குடா ராயப்பு யேசுராஜாவின் சாவீட்டுக்குப் போனாயா......?"

யாரோ ஒருவன் மேஜர் கோரின் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்தான்.

அக்காவிற்கு இப்போது நிலைமை தெளிவாயிற்று. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவள் யேசுராஜாவின் சாவீட்டிற்குப் போய் வந்தாள். யேசுராஜா விடுதலைப் புலி அல்ல - ஆனால் இந்தியப் படையால் தேடப்பட்டவன். கொடுமையான சித்திரவதையின் பின்பு அவனைக் கொன்று பிணமாக வீசினார்கள். அண்மையில் திருமணமானவன் யேசுராஜா - மனைவிக்குச் சின்ன வயது. போய் அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூறவேண்டும் போல், சுறோ அக்காவுக்குத் தவிப்பாய் இருந்தது. ''யேசுராஜாவின் சாவீட்டிற்கு யாரும் போகக்கூடாது'' என்று இந்தியப் படை போட்ட தடையையும் மீறி, அவள் அங்கே போனாள். அந்தப் பெண்ணின் கண்ணீரை முடிந்தவரை துடைத்து, ஏதோ ஒரு மன அமைதியோடுதான் அவள் வீடு திரும்பினாள். அதற்குள்......

''ஓம்...... போனநான்தான்...... சாவீடு எண்ட படியாத்தான் போனநான்......''

அக்கா ஒப்புக்கொண்டாள்.

மேஜர் கோர் இன்னொரு முறை அதிர்ந்து சிரித்தான் பின்பு -

அறையிலிருந்த மற்ற இந்தியப் படை ஆட்களை வெளியே போகச் சொல்லிவிட்டுக் கதவைப் பூட்டினான் அவன்.

அக்காவை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிக் கையால் காட்டிவிட்டு, முன்னால் ஒட்டினாற்போல் இன்னொரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தான் மேஜர்.

விலங்குத் தனத்தின் இறுக்கமான பிடி...... கொடிய வெறியின் திணிப்பு...... மனிதத் தன்மையின் சமாதி......

அந்த இரவு கொடுமையானது.

எங்கே ஓட முடியும்?

காலையில் கதவு திறக்கப்பட்டதும் - ''நீ போகலாம்'' என்று சொன்னான்...... கோர்.

அக்கா தெருவுக்கு வந்தாள்.

சினத்தோடு காறித் தெருவில் துப்பினாள்.

''இவனுவள் என்னதான் செய்தாலும் எண்ட தமிழீழ உணர்வை அழிக்க முடியாது'' என்று உறுமினாள் அவள்.

* * *

கூனித்தீவில் தண்ணீர்த்தாங்கிக்குப் பக்கத்தில்தான் சறோ அக்காவின் வீடு. இரண்டு அறைகளும் பாதி முன் மண்டபமும். வீட்டிற்குப் பின்னால் அழகான அந்த வில் லுக்குளம்.

தாயகத்தோடு ஒன்றிப்போன உணர்வுகள் - கணீரென்ற மிடுக்கான பேச்சு - கள்ளம் கபடமில்லாத சிரிப்பு - துணிச் சல் - கூனித்தீவில் அக்கா நிழல்மரம்.

'' வாங்க ஆச்சி...... இருங்க...... சங்கத்து வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதுதானே? எப்படி அண்ணன் பானைகளை சூளையில வச்சிட்டீங்களா? கேள் புள்ளை .... சிங்கள 'ஆமி'க்காரனுகள் நம்மட பொம்புளையள படுத்துகிற பாட்டை கட்டுரையாக எழுதி வெளி உலகத் துக்குத் தெரியப்படுத்த வேணும்......''

வீட்டில் எல்லோரும் நிறைந்துபோய் இருப்பார்கள். அக்காவின் குரல் 'கணீர்' என்று ஒலிக்கும் மட்பாண்டச் சங்கத் தலைவி - மாதர் சங்கத் தலைவி - அன்னையர் முன்னணித் தலைவி - சைவ மங்கையர் கழகத் தலைவி - மக்கள் குழு உறுப்பினர் என்று கூனித்தீவில் எல்லாமே அக்காதான் என்பதால், அக்கா வீடு கலகலப்பாகவே இருக் கும்.

1984 இல் அக்காவுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகமானார்கள் புலேந்திரன், சந்தோஷம், கணேஸ் - போன்ற திருகோணமலை மாவட்டப் புலிகள் தலைவர்கள் அக்காவை அடிக்கடி சந்தித்த நாட்கள்...... அக்கா புலிகள் இயக்கம் அல்ல - அனால் புலிகளின் பெரிய விடுதலை வேட்கையும் ஈடிணையற்ற வீரமும் - அவர்களின் மாபெரும் உயிரிழப்புக்களும் அவள நெஞ்சைத் தொட்டன.

சறோ அக்காவுக்கு 42 வயது. கணவனோடும் 7 பிள்ளைகளோடும் அவள் வாழ்க்கை. மூத்தவளுக்கு வயது 18. கடைசிப் பெடியன் இப்போதுதான் 6 வயதைத் தாண்டிக் கொண்டிருக்கிறான். இந்த நீண்ட வாழ்வில் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றை அவள் நன்கு அறிவாள். தமிழர் போராட்டத்தில் இயலாமைகள் - போலித்தனங்கள் - தொய்வுகள் எல்லாம் நிறைந்துபோன ஒரு காலத்தில் தான், விடுதலைப் புலிகள் தோன்றினார்கள். அவர்கள் வாழ்க்கை எத்தனை பெரியது......!

தொலைவில் - எங்கோ காட்டில் நீண்ட ஒதுக்குப்புற வயல் வெளிகளில் அவர்கள் புல்லோடு புல்லாகப் படுத்திருப்பார்கள். அக்கா சோறும், கறியும் சமைத்துக்கொண்டு போய்க் கொடுப்பாள்.

" நீங்கள் எண்ட புள்ளையளைப்போல - இல்லையில்லை ...... நீங்கள் எண்ட புள்ளையள் " என்பாள் அக்கா. வீட்டிலும் இப்படித்தான்...... அடுப்பில் எப்போதும் ' தேநீர்ப் பானை ' கொதித்துக்கொண்டேயிருக்கும்.

காயப்பட்ட விடுதலைப் புலிகள் பலதடவை அக்கா வீட்டில் மருந்து கட்டியிருக்கிறார்கள். புலிகளுக்கு மட்டுமல்ல கூனித்தீவுக்கே அக்காவீடு ஒரு மருத்துவ நிலையம் போலத்தான். சிறீலங்காப் படைகள் வெறிக்கூத்தாடிய 1985- 86- 87 களில். சறோ அக்காவைச் சிங்களப் படைகள் வெறிகொண்டு தேடின. அப்போது சிலகாலம் தலை

மறைவாக அவள் வாழநேர்ந்தது. ''உன்னுடைய பிள்ளை யளுக்காக நீ மறைந்து வாழத்தான் வேண்டும்'' என்று யாரோ அவளுக்கு அறிவுரை சொன்னபோது, அக்கா திருப்பிக் கூறினாளாம் - ' பெற்ற பிள்ளைகளுக்காக மட்டு மல்ல மற்றப் பிள்ளைகளுக்காகவும்தான் நான் தலைமறை வாகிறேன்.''

ராஜீவ் - ஜே . ஆர். உடன்படிக்கையைத் தொடர்ந்து, சறோ அக்கா வெளிச்சத்துக்கு வந்தாள். விடுதலைப் புலி களின் மேடைகளில் மக்கள் அவளைப் பார்த்தார்கள். திலீ பனின் இரங்கல் கூட்டங்களில் அவள் குரல் இடியாய் முழங் கியது.

அக்கா இந்தியப் படைக்கும் 'றோ' வின் கைக்கூலி களுக்கும் அடிவயிற்றில் நெருப்பானாள்.

* * *

13. 07. 89 தான் அந்த நாள்.

காலையில் படுக்கை விட்டெழுந்ததும் சறோ அக்கா வழமைபோல் சுறுசுறுப்பானாள்.

எத்தனை துன்பங்கள்.

87 ஒக்ரோபர் 10 இல் இந்தியப் படைக்கும் புலிகளுக் கும் போர் தொடங்கிய நாளிலிருந்து, இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் அவளை இந்தியப் படை வெறியர் கள் முகாமுக்குக் கொண்டுபோய், என்ன பாடெல்லாம் படுத்தவிட்டார்கள்.

அக்கா நெருப்பில் நனைந்து நிற்கிறாள்.

எப்போதும் போல அடுப்பில் தேநீர்ப் பானை கொதிக் கிறது.

மனைவியின் துன்பங்கள் - அவளுக்கு ஏற்பட்ட கொடு மைகள் - எல்லாவற்றையுமே அமைதியோடு தாங்கிக் கொண்ட கணவனுக்கு ஆசையோடு தேநீர் போட்டுக்

கொடுத்துவிட்டு, ஐந்தாவது பெண் மனாவைக் கூப்பிட்டு மடியில் வைத்துக் கொஞ்சினாள் அக்கா.

மனாதான் அக்காவுக்குச் செல்லப் பெண்.

நடுப்பகல் ஆயிற்று.

சாப்பிட உட்கார்ந்த அக்கா சொன்னாள் - "காட்டிலையும் மேட்டிலையும் பிள்ளையள் என்ன பாடு படுகுதோ......?"

எப்போதும் அக்காவுக்குப் புலிகளின் நினைவுதான்.

விடுதலைப் புலி லிங்கம் அடிக்கடி அக்கா வீட்டுக்கு வந்து போவான். அண்மையில்தான் இந்தியப் படையின் கைக்கூலிகள் அவனைப் பிணமாகப் போட்டார்கள். புலிகளின் மருந்துப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவன் லிங்கம். அவன் அக்காவிடம் எப்போதும் சொல்லுவான் "கண்ட கண்ட ஆட்களையெல்லாம் வீட்டுக்குள்ள எடுக்காத அக்கா..... யார் நல்லவன் - யார் கள்ளன் என்று கண்டுபிடிக்க முடியாத காலம்.

உண்மைதான்......

அக்காவின் வீட்டில் - நன்றாகப் பழகி சோறுண்டு சென்றவர்களில் - இந்தியப்படையின் கையாட்களும் இருக்கவே செய்தார்கள்.

துரோகம் எங்குதான் இல்லை? விடுதலைப் புலிகளின் பெரிய உயிரிழப்புக்களையும் - வீரத்தையும் கண்முன் கண்டும் அவர்களைக் காட்டிக் கொடுக்கும் தலையாட்டிகள் எத்தனை பேர்......?

கொடிய உலகம்...... கொடிய மனிதர்கள்......

பின்னேரம் அக்கா அழகான அந்த வில்லுக்குளத்துக்குக் குளிக்கப்போனாள்...... பச்சைப் புற்கள்...... 'தளதள' என்ற தண்ணீர்...... கொக்குகள்...... மீன்......

ஒரு தொல்லையும் இல்லாமல் - முழு விடுதலையைச் சுவைத்தபடி - வெள்ளைச் சிறகை நீள விரித்து - வானத்தில் பறந்த பறவையை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே இருந்தாள் அக்கா

இரவு ஆயிற்று.

* * *

ஓ...... !

அந்த இரவு கொடியது.

7 மணி இருக்கும்.

சாவு அக்காவின் படலையைத் தட்டிய முரட்டுத்தன மான மணித்துளிகள்.

மனா அம்மாவின் சேலையைப் பிடித்துக்கொண்டிருந் தவள் பதற்றத்தோடு கடப்படியைப் பார்த்தாள்...... இருளில் ஆட்களின் முகம் தெரியவில்லை ......ஆனால் ......நான்கைந்து பேர்.

''வெளியே வா ........! ''

யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்.

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

''ஐயோ எண்ட பிள்ளைகளே!'' என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள் ...... முன்னால் நின்றவர் களின் கைகளில் கத்தியும் கோடரியும் ......

ஒருவன் அக்காவின் கையை முரட்டுத்தனமாகப் பிடித்து - தெருவில் 'கொறகொற' என்று இழுத்தான்.

பதறி அடித்துக்கொண்டு தெருவுக்கு ஓடிவந்த பிள்ளை களையும் கணவனையும்...... '' யாரும் வெளியே வரக்கூடாது - தெரியுதா?'' என்று ஒரு தடித்த குரல் எச்சரித்தது.

''ஐயோ ...... மனா மனா ...... '' என்று ஏங்கிக் கத்தினாள் அக்கா.

ஊர் மூலையில் நாய்களின் ஊளை ......

அக்காவின் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளினாற்போல - அதே தெருவில் - அவள் உடலின்மீது கத்தி வீசப்பட்டது.

''நீயாடா பாவி ......? '' என்று அக்கா கூச்சலிட்டதைத் தெருவில் நின்றவர்கள் கேட்டார்கள். அறிமுகமானவர்களுக்கு அவன் முகம்கூடத் தெரிந்தது.

இந்தியப் படையின் அந்தக் கைக்கூலியை கூனித்தீவு முன்பே அறியும். அக்கா வீட்டுச் சோறுகூட அவன் உடலில் தசையாய் ...... செந்நீராய் ......

கத்திகளாலும், கோடரியாலும் அக்கா மாறிமாறி விறகுகட்டை போல் பிளக்கப்பட்டாள்.

நொடிப் பொழுதில் - அந்தத் தாய் ஓவியம் தெருவில் கிழிந்து கிடந்தது.

அக்கா போய்விட்டாள்! ○

நெருப்பு
ஐப்பசி: 1989

''வயிறு நோகுதப்பா... என்னால தாங்க முடியுதில்லையே......''

பழைய வேட்டி ஒன்றைக் கிழித்து வந்து உழவு வண்டியில் வெள்ளைக் கொடி கட்டி விட்டு - வீட்டின் உள்ளே போய் மனைவியைக் கை கொடுத்து நடந்தது போலவும் தூக்கியது போல வுமாக அழைத்து வந்து, உழவுப்பொறியின் பின் புறம் இருந்த பெட்டியில் மெதுவாக ஏற்றி, சாய்ந்து படுக்கவைத்தான். துடித்து அலறிக் கொண்டிருந்தவள், அவன் படும் பாட்டைப் பார்த் துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். வண்டி கிளம் பிற்று.

# தெருவெல்லாம் சுடுகாடாய்

பனை மரங்கள் அசைவற்று நின்றன.

ஒரு மரங்கொத்தி பட்ட மரத்தை அலகால் குத்திப் பொந்து போட்டுக்கொண்டிருந்தது.

“வயிறு நோகுதப்பா...என்னால தாங்க முடியுதில்லையே......”

விம்மிக்கொண்டே கண்ணீர் தலையணையை நனைக்க, பாயில் புரண்டு துடித்தாள் அவள்.

பிள்ளைப் பேறு,

ஊரெல்லாம் வீட்டுச் சுவருக்குள்ளே அடைபட்டுக் கிடந்த அந்த 1987 கார்த்திகையில், அவன் வெளியே எட்டிப் பார்த்தான் - வானம் இருண்டு கிடந்தது.

எங்கோ பத்து வீடு தள்ளி இந்திய வெறிப்படையின் பீரங்கிக் குண்டு விழுந்து வெடித்தபோது எழுந்த பேரோசையில் நடுங்கியவனாய், மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தான். வயிற்றைப் பொத்திப் பிடித்தபடி அவனை அண்ணாந்து பார்த்து ''ஓ'' என்று அழுதாள் அவள்.

புத்தூரில் இருந்து யாழ்ப்பாணம் மருத்துவ நிலையத்துக்கு பத்துக் கட்டை போயாக வேண்டும். இந்த நேரத்தில் எப்படிப் போவது? எவன் காரை வாடகைக்கு விடப் போகிறான்? வழி நெடுகிலும் இந்தியப் படை வெறியர்கள் நிற்கிறார்களாம் யாழ்ப்பாண மருத்துவ நிலையம் கூட இப்போது அவர்கள் கையில்தானாம், தலை சுற்றி, முகமெல்லாம் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

புத்தூரில் அது புதுக் குடும்பம். இதுதான் அவளுக்குத் தலைப்பிள்ளைப் பேறு. அறுவடை நேரத்தில் நெற்பயிர் ஒன்று கதிர் கருகிவிடும் போல - சுருண்டு வளைந்து துடித்துப் போராடுகிறது. தமிழீழம் முழுவதையும் எரித்துக் கொண்டிருக்கும் நெருப்பின் அலைகள் ஓங்கி வீசுகின்றன.

புலிப்படை பழையபடி தலைமறைவு இயக்கமாகி விட்டதாம். இந்தியப் படைக்கு நல்ல அடியாம். நூற்றுக் கணக்கில் இந்தியப் படை வெறியர்களின் பிணங்கள் விமானங்களில் போகின்றனவாம். இந்தியப் படைபோடும் வெறியாட்டத்துக்கு புலிகள் வேறு எப்படித்தான் பரிசு கொடுப்பார்கள்? பெண்களை எல்லாம் அம்மணம் ஆக்கி - கெடுத்து - கணவன்மார்களைக் கொன்று - மொத்தத்தில் மகாத்மா காந்தியையே இந்தியப் படை கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

புத்தூரில் தெரிந்த நாலு 'கார்க்' காரர்களை அணுகி 'அவளுகக்கு நோவு தொடங்கிற்றுது பாருங்கோ - யாழ்ப்பாணம் போகவேணும்...'' என்று கலங்கிய கண்களோடு கெஞ்சினான் அவன், எல்லோரும் துடித்தார்கள் - ஆனால் உதவுவதற்கு அவர்கள் மனம் விரும்பினாலும், விட்டுவிட்டு

அதிரும் அந்தத் துப்பாக்கிகளின் கொடுமையான வேட்டோசை... பாவம்... அவர்களும் மனிதர்கள்...

"இந்த நேரத்தில் எப்படியப்பா" என்று முனகினார் ஒரு கிழவர்.

அவன் தொங்கிய தலையோடு வீடு திரும்பினான்.

வாசலை நெருங்கும்போதே அலறல் ஓசை கேட்டது. அவள் துடிக்கிறாள்... துடியாய்த் துடிக்கிறாள்... யாழ்ப்பாணத்துச் செம்பாட்டு மண்ணைப் போல் முகமெல்லாம் சிவந்தது.

பெட்டியோடு சிற்றுழவுப் பொறி ஒன்று தோட்டத்துக்குப் பக்கத்தில் நின்றது. 'லான்ட் மாஸ்டர்' என்ற பெயரில், உழவுக்கு ஒரு காலத்தில் சிறீலங்கா அரசு அறிமுகப்படுத்திய உழவு வண்டி அது. மனைவியை இதில் ஏற்றிக்கொண்டால் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்து விடலாம். ஓடிப் போய் அதில் ஏறி, அவனே வண்டியை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினான். அவனுக்கு அதை ஓட்டத் தெரிந்திருந்தது. பழைய வேட்டி ஒன்றைக் கிழித்து வந்து உழவு வண்டியில் வெள்ளைக் கொடி கட்டி விட்டு - வீட்டின் உள்ளே போய் மனைவியை கைகொடுத்து நடந்தது போலவும் தூக்கியது போலவுமாக அழைத்து வந்து, உழவுப் பொறியின் பின்புறம் இருந்த பெட்டியில் மெதுவாக ஏற்றி, சாய்ந்து படுக்கவைத்தான். துடித்து அலறிக் கொண்டிருந்தவள், அவன் படும் பாட்டைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். வண்டி கிளம்பிற்று.

வீட்டுக்குப் பக்கத்தில் ஆடுகள் தெருவோரத்தில் காய்ந்துபோய்ப் படுத்துக் கிடந்தன. ஆடுகளுக்குப் பலா இலைச் சருகு பொறுக்கிப் போடும் கிழவர் எங்கே போனாரோ தெரியவில்லை. யார்தான் தெருவில் இருக்கிறார்கள்......? மனிதர்களே இல்லாத 'வெறிச்' சென்ற பாலை வனம் தெருவாகிக் கிடக்கிறது.

போன ஓர் ஆண்டு காலத்தில் இந்தத் தெருவால் அவனும் அவளும் பலமுறை பயணம் போயிருக்கிறார்கள். அது புலிகள் கையில் யாழ்ப்பாணம் இருந்த காலம். திருமணம் ஆகி குனிந்த தலை நிமிராமல் இதே தெருவால் தானே அவள் போனாள்... ஒருமுறை, சிங்களப் படைவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட விடுதலைப் புலித்தளபதி லெப். கேணல் ராதாவின் வீர உடல் இதே தெருவால் ஊர்வலம் போனபோது, அவள் தெருவில் நின்று கண் கலங்கியிருக்கிறாள். அப்போது அவளைப் பார்த்துச் சொன்னது அவனுக்கு நினைவிருக்கிறது.

''நமக்குப் பக்கத்துலை இந்தியா இருக்கிறதைச் சிங்களவன் மறந்திட்டான்... இந்தியப் படை ஒரு நாள் இங்கே வந்து நம்மை எல்லாம் காப்பாத்தும்... இருந்து பார் !''

பெரிய வெடிகுண்டு ஒன்று எங்கோ அதிர்ந்து வெடித்தது. உழவு வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தவன் அசைந்து திரும்பிப் பார்த்தான் - அவள் காதைப் பொத்தியபடி பெட்டியில் நடுங்கிக் கொண்டிருந்தாள். ''இந்தியப் படை சுடுகுது போலை... பயமா இருக்குதப்பா. ஐயோ வயிறு நோகுதே... !'' அவளின் ஓலம் வண்டி இரைச்சலிலும் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

ஒரு கட்டை தூரத்தை வண்டி தாண்டி ஆயிற்று. தொலைவில் காக்கி உடைகளின் நடமாட்டம் தெரிவதை இப்போது அவன் கவனித்தான். இந்தியாப்படை தடை போட்டிருக்கிறதுபோலத் தெரிகிறது. வேகத்தை மெல்ல மெல்ல நத்தையைப்போல் வண்டியைச் செலுத்தினான். என்ன நடக்கும் ? உடல் படபடக்கத் தொடங்கிற்று

''ஸ்ராப் !'' ஆங்கிலத்தில் யாரோ கத்தினார்கள்.

வண்டியை நிறுத்தினான். துப்பாக்கிகளோடு நாலு திசைகளிலும் இருந்து நூற்றுக் கணக்கில் திடுதிடு என்று

இந்தியப் படை வெறியர்கள் ஓடிவருவது தெரிந்தது. இத்தனை பேர் யாழ்ப்பாணத்திலா? ஒரு மீசைக்காரன் துப்பாக்கி முனையை நேரே மார்பில் வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டான். என்ன செய்வது? தளதளத்த குரலில் அவன் முனகினான்...

''இவள் கர்ப்பிணி ஐயா... பிள்ளைப் பேறு... யாழ்ப் பாணம் ஆசுபத்திரிக்குப் போக வேணும்...''

ஒரு முரடன் ''ஓ!!'' என்று வாய் கிழியச் சிரித்தான்.

அவர்கள் எல்லோரும் உழவுப் பொறியின் பின்னால் இருந்த பெட்டியை மொய்க்கத் தொடங்கினார்கள்.

வெறிபிடித்த காக்கி சட்டைக்காரன் ஒருவன் அவள் மார்பைக் கையால் இழுத்துப் பிடிக்க, அடுத்தவன் அவள் முகத்தைத் தடவத் தொடங்கினான்.

''அம்மா'' என்று கத்திக்கொண்டே மயங்கி விழுந் தாள் அவள். அவனும் கூடவே 'அம்மா!'' என்று கூச்சலிட்டான்.

அமைதி நிலவிற்று.

தோய்த்துக் கசக்கிப்போட்ட துணியைப் போல் அவள் சுருண்டு கிடந்தாள்.

நெஞ்சில் இருந்த துப்பாக்கியைத் தளர்த்தி அவனைப் பார்த்து, ''சரி, நீ போகலாம்'' என்று கட்டளையிட்டான் மீசைக்காரன்.

மெதுவாக வண்டி தடை தாண்டி நகரத் தொடங் கிற்று.

''இது என்ன கொடுமை!''

வண்டியை ஓட்டியவன் கண்களில் ஆறாக நீர் பொங் கிப் பாய்ந்தது.

ஒரு கட்டை தூரம் தாண்டித் தெருவோரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, பக்கத்து வீட்டில் போய் தண்ணீர் வாங்கி வந்து அவள் முகத்தில் தெளித்தான் அவன் - மெதுவாகக் கண்களைத் திறந்தவள், வயிற்று நோவால் மீண்டும் ''ஓ'' என்று அலறத் தொடங்கினாள். தண்ணீர் கொடுத்த வீட்டுக்காரர் குடும்பம் வீட்டுக்கு வெளியே வராமல், வேலிக்கு உள்ளேயே நின்று இரங்கி முனகியது.

''பல்லைக் கடிச்சுத் தாங்கிக்கொள்ளு... எப்படியோ யாழ்ப்பாணம் போயிரலாம்......'' என்று தலையை வருடிவிட்டான் அவன்.

''வேணாமப்பா... வீட்டுக்கே போயிடுவம்...இந்த மிருகங்களை இன்னொரு தடவை பார்க்கக்கூடாது... ஐயோ!''

வயிற்றைப் பொத்திக்கொண்டு அவள் மீண்டும் கத்தினாள்.

அவன் அவள் பேச்சைக் கேட்கவில்லை.

அவளுடைய உடல்நிலை அவனுக்குத் தெரியும் யாழ்ப்பாணத்தை நோக்கி வண்டியைச் செலுத்தினான். முரட்டு வேகத்தில் வண்டி இயங்கிற்று. ஆற்றலுக்கு மேலே வண்டியின் சில்லுகள் சுழன்று கதறின.

தொடர்ந்து வந்த மூன்று தடைகளையும் அவர்கள் நெருப்பைக் கடப்பது போலவே தாண்டினார்கள். ஒரு தடையில் அவள் வயிற்றைத் தடியன் ஒருவன் விரல்களால் அமுக்கிப் பார்த்தபோது. அவள் இரண்டாவது தடவை மயங்கி விழுந்ததைக் கண்டு அவன் விம்மிவிம்மி அழுதான்.

இம்முறை அவள் தானாகவே மயக்கம் தெளிந்தாள்.

ஐந்து கட்டைத் தூரத்தை எப்படியோ கடந்து, கோப்பாயை இப்போது அவன் வண்டி நெருங்கிக்கொண்டிருந்தது.

பாதிவழிப் பயணம் முடிந்தாயிற்று.

கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு நன்றாக உற்றுப் பார்த்தான். - தூரத்தில் தெளிவாகத் தெரிந்தது. மீண்டும் வேகத்தைத் தொடங்கினான்... இங்கே என்ன நடக்கும்? முந்திய தடைகளில் கண்ணுக்கு முன்னாலேயே மனைவிக்கு நிகழ்ந்த கொடுமைகள் நெஞ்சை உலுக்கி எடுத்தன, புயலை நோக்கி அவன் வண்டியைச் செலுத்துகிறானா? தெரு ஓரத்தில் ஒரு சொறிநாய் படடப்பகலில் மாறிமாறி ஊளையிட்டது. தடைமுகாமுக்குப் பக்கத்தில் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினான் அவன்.

ஆங்கிலமும் - இந்தியும் ஏதேதோ கூச்சலுமாய் அந்தக் கொடிய விலங்குகள் பாய்ந்து வருவதை இபபோது அவர்கள் பார்த்தார்கள்.

இந்திய வெறிப்படை தன் வழமையான காட்டுமிராண்டித்தனத்தில் இறங்கிற்று.

வானத்தை நோக்கி ஒரு முரடன் துப்பாக்கி வேட்டுக்களை மளமளவென்று தீர்த்தான்.

கூட்டமாக அவர்கள் வண்டியை மொய்த்துக்கொண்டார்கள்.

''பாரத் மாதா கீ ஜெய்!''

வானத்தை இடித்த முழக்கத்தோடு ஒருவன் துப்பாக்கியால் ஓங்கி முகத்தில் அடிக்க - கீழே விழுந்த கணவனைப் பார்த்து, ''அவரை அடியாதீங்கோ!'' என்று முழு வலிமையையும் திரட்டிக் கூச்சலிட்டாள் அவள்.

சண்டாளர்கள் அவள் பக்கம் திரும்பினார்கள்.

கையைக் கொடுத்து, ஒருவன் அவளை வெறித்தனமாகப் பெட்டியில் இருந்து கீழே இறக்கினான்.

''அவள் கர்ப்பிணி பாருங்கோ - அவளைத் தொடாதீங்கோ!''

நிலத்தில் - இரத்தம் தோய்ந்த முகத்தோடு கிடந்து கத்திய அவன் குரலை, யாருமே பொருட்படுத்தியதாய்த் தெரியவில்லை.

''சேலைக்குள்ளே குண்டு இருக்குதா?''

ஒரு வெறியன் குடிபோதைச் சிரிப்போடு, அரைகுறைத் தமிழில் அவளைப்பார்த்துக் கேட்டான்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

''சேலையை உயர்த்து!'' என்று கத்தினான் ஒருவன்.

''பாவிகளே! ஐயோ! ஐயோ?'' என்று அவள், தலையில் அடித்து ஓலமிட்டாள்.

எல்லாம் முடிந்துவிட்டது,

வதைகளைச் சுமந்த சடலமாய் அவள் வானத்தை விறைத்துப் பார்த்த கண்கள் மூடாமல் - அசைவற்றுக் கிடந்தாள்.

முகத்தைக் கைகளால் பொத்திப் பிடித்துக்கொண்டு, ஒரு சின்னஞ்சிறு பள்ளிக்கூடச் சிறுவனைப் போல் அவன் தேம்பித்தேம்பி அழுதான்.

தெருவில் உழவு வண்டி நெருப்பில் எரிந்துகொண்டிருந்தது.

''ஐயா, சவத்தை ஊருக்குக் கொண்டுபோகவேணும்''

இந்தியப்படை அதிகாரி ஒருவரைப்பார்த்துக் கெஞ்சினான், அவன்.

வாயில் இருந்த சுங்கானை அவர் வெளியே எடுத்தார்.

''அதெல்லாம் முடியாது - தெரு ஓரத்தில் எரி - போ!''

அவன் அவளைத் தூக்கிச் சென்று தெருவோரத்தில் நின்ற நெடிய பனை மரத்துக்குக் கீழே கிடத்தினான். பட்ட பனைமரத்தின் கட்டைகளைத் தூக்கிவந்து அவள் உடலின் மேல் போட்டான்.

நெருப்பு வைத்த நேரத்தில், அவன் காதில் இந்தியப் படை வெறியர்கள் கூட்டமாகச் சந்தியில் நின்று பாடிய அந்தப் பாடல் தெளிவாகவே கேட்டது!

அவர்கள் கூத்தாடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள்

''ஜன கண மன அதி
நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா!''

தமிழீழம்
பங்குனி 1988

மக்கள் மனதில் இருந்த பதற்றம், பீதி தீவிரமடைந்தது.

நவீனரக ஆயுதங்களுடன் இந்திய இராணுவம் ...

'கிரனேட்'டுகளுடன் ஒரு விடுதலைப் புலி......

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப் போகிறது?......

அங்கு நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் இந்தக் கேள்வி.

## சமயோசிதம்!

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் ஒதுக்குப்புறமான கிராமம்.

அன்றும், வழமைபோல்...... அதே விடியல்.

இந்திய வல்லாதிக்கக் கரங்களில் இருந்து, அந்த இயந்திரத் துப்பாக்கிகளின் சடசடத்த குமுறல் அக்கிராமத்து மக்களைத் துயிலெழுப்புகின்றது.

ஆனால் ...... எங்கும் மயான அமைதி.

அந்தக் காலைவேளையிலும்,

சேவல் கூவவில்லை ......

காகம் கரையவில்லை ......

கீச்சிடும் குருவிகள் இரைதேடிப் பறக்கவில்லை ......

மறைவிடம் ஒன்றில் இருந்து, எமது வீரன் ஒருவன் சேதி அறிந்துவர வீதிக்கு வருகின்றான் ...... வீதி வெறிச் சோடிக் கிடக்கின்றது. ஒரு தெரு நாயைக்கூட வீதியில் காண முடியவில்லை.

எமது தோழன் சுற்றுமுற்றும் அவதானித்துவிட்டு, சந்திக்கடையடிக்கு மெல்ல நடக்கலானான்.

கடையடியில் ஓரளவு ஜனசந்தடி காணப்பட்டது.

ஆனால் ஒவ்வொருவருடைய முகத்திலும் பயம் இழை யோடியிருந்தது. அதிகாலையிலும் கேட்ட வெடிச்சத்தங் கள் ஏற்படுத்தியிருந்த பதற்ற நிலை, சற்றும் தணியாமல் இருந்தது.

எமது தோழன் கடைக்குள் சென்று, கடைக்காரரிடம் ''அண்ணை! என்னவாம் உங்கால சத்தம்...... ? ஆரையாம் சுட்டவங்கள் ... ? '' என்று கேட்கவும், வேகத்துடன் கூடிய இரைச்சலுடன் வந்த ஒரு ஜீப் சந்தியடியில் நிற்கவும் சரியாக இருந்தது.

அந்த ஜீப்பிற்குள் ......

இந்திய வல்லாதிக்கத்தின் ஆறேழு கவசத் தொப்பி களும், இந்திய ஆக்கிரமிப்பாளனுக்கு அடிமைச் சேவகம் செய்யும் சில தேசத்துரோகிகளின் வெள்ளை உடைகளும் தெரிந்தன.

மக்கள் மனதில் இருந்த பதற்றம், பீதி தீவிரமடைந் தது.

நவீனரக ஆயுதங்களுடன் இந்திய இராணுவம் ......

'கிரனேட்'டுகளுடன் ஒரு விடுதலைப் புலி ......

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப் போகிறது ?......

அங்கு நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் இந்தக் கேள்வி.

ஜீப்பில் இருந்து திடுதிப்பெனக் குதித்த இராணுவத்தினர் அவ்விடத்தில் நின்றவர்களைப் பிடித்து வரிசையாக நிறுத்திச் சோதனையிட ஆரம்பித்தனர்.

நிலைமை மோசமடைந்துகொண்டிருப்பதை எமது தோழன் உணர்ந்து கொண்டான் அவனது கைகள் இடுப்பிலிருந்த குண்டுகளையும் கழுத்தில் தொங்கிய குப்பியையும் தொட்டுப் பார்க்கின்றன.

அவன் சிந்திக்கிறான். முடிவில் ஒரு தீர்க்கமான முடிவெடுக்கின்றான். என்னைச் சோதனையிடவும் ஒரு ஆக்கிரமிப்பாளன் வருவான். அப்போது 'கிரனேட்'டுக்களை வீசித் தாக்கிவிட்டுத் தப்பி ஓடிவிடலாம்.

அப்போது, இராணுவத்தினர் கடையை நோக்கி வரவும் ஆறுதலாக வந்துகொண்டிருத ஒரு சைக்கிள் கடைக்கு முன்னால் நிற்கவும் சரியாக இருந்தது.

சைக்கிளில் இருந்த பெரியவர் கடைக்குள் பார்த்தார். அவருக்கு நிலைமை புரிந்துவிட்டது. திடீரென......

''எட தம்பி! உன்னையல்லோ சீனி வாங்க அனுப்பினனான்... இஞ்ச வந்து ஏமிலாந்திக் கொண்டு நிக்கிறாய் ......? வா! வந்தேறு சைக்கிள்ள வீட்டை போவம் '' என்றார், அந்தப் பெரியவர்.

பெரியவர் சொல்லியதன் 'அர்த்தத்தைப்' புரிந்து கொண்ட எமது தோழன், சைக்கிளில் ஏறிக்கொள்கிறான்.

மெதுவாக நகர்ந்த சைக்கிள் அடுத்த வளைவு திரும்பி சில மீற்றர் தூரத்தில் நின்றது.

அப் பெரியவர்......

''தம்பி, நாங்கள் வயதுபோன கிழடுகள்தான். ஆனாலும் நாட்டுக்காகச்சாகிறவங்களுக்கு எங்களால் ஏலக்கூடியதைச் செய்வம். கவனம்! உது வழிய வருவாங்கள். பார்த்துப் போமோனை!''

சொல்லிவிட்டு பெடல் கட்டையை மிதித்தார்.

சைக்கிள் மெதுவாக நகரத் தொடங்கியது. ○

தமிழீழம்
சித்திரை 1989

தளபதி கேட்டார் -

''என்ன மாஸ்ரர்'' இங்கே நிற்கிறீங்கள்...?''

''நீங்கள் எங்கே நிற்கிறீங்களோ - அங்கே தான் நானும் நிற்கிறேன்.''

பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தளபதியைப் பார்த்தார் 'மாஸ்ரர்'.

தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.

ஆங்கிலத்தில் எம். ஏ. படித்தவர் 'மாஸ்ரர்'.

## ஓயாத கால்கள்

## 18. 11. 1987

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' குளித்துவிட்டு முன்மண்டப நாற்காலியில், அவருக்கே உரிய சிரிப்போடுஉட்காரும்போது, இரவு ஏழு மணி.

மனைவி கொண்டுவந்த தேநீரைக் குடித்துவிட்டு அவர் சொன்னார் -

''உலகத்திலை ஒரு பெரிய படையான இந்தியப் படையை மோதுறதெண்டு புலிகள் முடிவெடுத்ததே ஒரு பெரிய வெற்றிதான்.''

கிளிநொச்சியில் 'மாஸ்ரர்' புதிதாகக் கட்டிய வீடு அது. மகிழ்ச்சியாக அந்த வீட்டை அனுபவித்து அவர்

இன்னும் வாழவில்லை. அது அவர் நோக்கமும் இல்லை. தமிழீழ விடுதலைப் போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட புலிகளோடு அவர் இரண்டறக் கலந்து, நீண்ட காலமாகிறது.

'மாஸ்ரருக்கு' தமிழீழ மண்ணின் ஒவ்வொரு அங்குல மும் வீடுதான். எந்த மணித்துளியில் அவர் எங்கு நிற்பார் என்று சொல்ல முடியாது.

நீண்ட வயல் வெளிகளின் நடுவில் - குறுகிய செம்மண் பாதைகள் ஊடாக - நடு இரவில் அவர் மிதிவண்டி, விடு தலைப் புலிகளை ஏற்றிப்பறக்கும்.

மேற்கே வன்னேரிக் குளம் தொடக்கம் கிழக்கே விசு மடுவரை......

எத்தனை சந்து பொந்துகள்...... எத்தனை வயல் வரப் புகள்......

முள் குத்தி, சில்லு காற்றிழந்துபோக - மிதிவண்டியை 'மாஸ்ரர்' நெடுந்தூரம் உருட்டி அலைந்த நாட்களும் உண்டு.

அளவான உயரம் - இறுக்கமான உடற்கட்டு - பொது நிறம் - மிடுக்கான மீசை - கலகலப்பான பேச்சு - ஆனந்த ராஜா 'மாஸ்ரருக்கு' நாற்பத்திமூன்று வயதுதான்.

கிளிநொச்சியில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு கலங் கரை விளக்கமாய் இருந்தவர் 'மாஸ்ரர்'. மாணவர்களின் எதிர்காலம் - தன்னில் அல்ல - தமிழீழத்திலேயே தங்கி யுள்ளது என்பதைத் தெரிந்துகொண்டு, விடுதலைப் புலி களுக்கு உறுதுணையானார் அவர். 'மாஸ்ரர்' அடிக்கடி சொல்லுவார் -

"விடுதலைப் புலிகள் எப்படியெல்லாம் அலைகிறார் கள்...... அவர்கள் நடக்க என் காலைப் பயன்படுத்து கிறேன்."

* * *

கிளிநொச்சியை ஒட்டினாற்போல் நெடிய தென்னந் தோப்புக் கிடந்தது.

சடைத்து வானத்தைத் தழுவி - பச்சைக் காடாக நிலத்தை மூடிய தென்னைகள்.

1985 இல் இத்தோப்பு வரலாற்றில் தன்னை ஆழப் பதித்துக்கொண்டது.

விடுதலைப் புலிகள், முதியவர்களுக்கு இங்கே தற்காப் புப் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்கள். பதினைந்து நாட்கள் ஒரு மணித்துளியும் ஓய்வில்லாத பயிற்சி.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' என்றைக்குமே அந்த நாட் களை மறப்பதில்லை.

துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடப் பழகிய காலம்...... சில முதிர்ந்த நண்பர்களோடு அவரும் ஒருவராக......

யாழ்ப்பாணத்தில் கிழட்டுப் பனைகள் சூறைக் காற்றில் ஆடி நிமிர்ந்து நிற்குமே....... அப்படி...... போர்க்காலத்தின் கட்டாயம்......

இரவு நேரங்களில் புலிகளின் தலைவர்களோடு உட் கார்ந்து அவர்கள் மனம்விட்டுப் பேசுவார்கள்.

பழைய தமிழீழ அரசியல் - அந்தக் கால அறப்போர் - தன்னலவாதிகள் சிலர் அரசு ஓய்வூதியம் பெற்றுக்கொண்டு போராட்டத்துக்கு வந்த கதைகள் - இவையெல்லாம் அல சப்படும்,

புலிகள் விடுதலைப் போரில் தாங்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை தெளிவாக விளக்குவார்கள்.

காற்று இதமாக வீசும்.

ஓரிரு காய்ந்த தென்னை ஓலைகள் உதிர்ந்து விழும். மின்மினிப் பூச்சிகள் விளக்குத் தூக்கித் திரியும்.

* * *

1987 ஒக்ரோபர் 10

தமிழீழ விடுதலைப் புலிகள் மேல் இந்தியப் படை போர்ப் பிரகடனம் செய்த நாள்.

குண்டுவீச்சு விமானங்களும் - 'ஹெலிக்கொப்ரர்' களும் வானத்தில் உறுமிப் பறந்தன.

'ஷெல்' கள் - பிணக்குவியல்கள் - மரண ஓலங்கள். இந்திய வல்லரசின் கொடிய பற்கள் யாழ்ப்பாணத்தைக் கடித்துக் குதறத் தொடங்கிய காலம்.

விடுதலைப் புலிகளின் பொறுப்புவாய்ந்த தளபதிகளில் ஒருவர் களத்தின் முக்கிய பகுதிக்கு வந்தார்.

விடுதலைப் புலிகள் துப்பாக்கியும் கையுமாக எதிரியைத் தேடிப் பறந்துகொண்டிருந்தார்கள்.

ஒரு களத்தில் போராடிவந்த சில புலிகள் அடுத்த களத்துக்குப் புறப்படுவதற்கு முன்பு, அவர்களுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தார் ஆனந்தராஜா 'மாஸ்ரர்'.

தளபதி கேட்டார் -

''என்ன 'மாஸ்ரர்' இங்கே நிற்கிறீங்கள்...... ?''

''நீங்கள் எங்கே நிற்கிறீங்களோ - அங்கேதான் நானும் நிற்கிறேன்.''

பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தளபதியைப் பார்த்தார் 'மாஸ்ரர்'.

தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.

ஆங்கிலத்தில் எம். ஏ.படித்தவர் 'மாஸ்ரர்' விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கப்டன் பண்டிதர் உயிரோடு இருந்த காலத்தில் - மேஜர் மாறனால் இயக்க வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டார். 'மாஸ்ரர்' விடுதலைப் புலி அல்ல. ஆனால் விடுதலைப் போரில் தங்

களை அழித்துக்கொள்ளுகிற புலிகளுக்கு, எப்போதும் உறு துணையாக இருக்க வேண்டும் என்றே விரும்பினார்......

அந்த நோக்கோடுதான் புலிகள் வழங்கிய தற்காப்பு பயிற்சிக்கும் அவர் போனார்...... போரில் இறங்கிய புலி களை அழிக்க வந்த அந்நிய ஆக்கிரமிப்பாளனை நினைக்க நினைக்க அவருக்குக் குருதி பொங்குகிறது......

''மாஸ்ரரை' அன்போடு நெருங்கினார் தளபதி. அவர் சொன்னார் -

'மாஸ்ரர்...... கிளிநொச்சி மக்களுக்கு உங்களைப் போல ஆதரவானவங்க இப்ப பக்கத்துலை இருந்தா நல்லா இருக்கும். நீங்கள் அங்கேதான் போகவேணும். போறது தான் நல்லது.''

கிளிநொச்சிக்கு 'மாஸ்ரர்' அன்றே கிளம்பிவிட்டார். புலிவீரர்களின் சொற்கள் மதிக்கப்பட வேண்டியவை.

தூய - அப்பழுக்கற்ற - நெஞ்சின் வேரில் அவை துளிர்க் கின்றன.

* * *

கிளிநொச்சி பரபரப்பாயிற்று.

போரின் அடையாளங்கள் கிளிநொச்சியில் தலை காட்டத் தொடங்கின.

இந்தியத் துருப்புக்களை ஏற்றிப்பறக்கும் 'ஹெலிகொப் ரர்கள்.

உறுமிக்கொண்டு தெருவில் இந்தியப்படை 'ட்றக்' வண்டிக்கள் ஓடும்.

யாழ். நகரில் கடுமையான குண்டு வீச்சாலும் 'ஷெல்' தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட பெண் அகதிகள் கூட்டம் ஒன்று கிளிநொச்சிக்கு வந்தத.

கண்ணீரும் கம்பலையுமாக வந்த அவர்கள், இந்தியப் படையின் கைக்கூலிகள் 'குழு' ஒன்றிடம், தெரியாமல் மாட்டிக் கொண்டார்கள்.

அந்தக் 'குழு' பெண் அகதிகளைக் கொண்டுபோய் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உட்காரவைத்தது.

குளுமாடுகளின் குழு.

அவர்களோடு தமிழ்ப் பெண்கள்.

விலங்குத்தனத்தின் வெறியாட்டமும் - இழிவுகளும் - தொடங்குவதற்கு முன்பு அந்தப் பெண்களை எப்படியோ காப்பாற்றிவிடவேண்டும் என்று நினைத்தார் ஆனந்தராஜா 'மாஸ்ரர்'

நேரே அவர் மகாவித்தியாலயத்துக்குள் நுழைந்தார்.

எத்தனையோ ஆண்டுகளாக 'மாஸ்ரர்' பாடம் கற்றுக் கொடுத்த பள்ளிக்கூடம் அது.

அவர் எழுதிய கரும்பலகைகள். அவர் உலாவிய வகுப்பறைகள். அதே மேசைகள் - நாற்காலிகள்.

எத்தனை மாணவர்கள் இந்தப் பள்ளிக்கூடத்தில் மானமுள்ள வீரர்களாய் உருவாக்கியிருக்கிறார் 'மாஸ்ரர்'.

என்றுமே நீதிகளாலும் அறங்களாலும் பண்பாடுகளாலும் நிறைந்து போயிருந்த அந்த மகாவித்தியாலயத்தில் சேட்டைகளும் - அசிங்கங்களுமா...? மாஸ்ரரால் நினைத்துப் பார்க்கவே முடியவியவில்லை.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' தலையிட்டார். பெண் அகதிகளை மகாவித்தியாலயத்திலிருந்து வேறோர் இடத்துக்கு அழைத்துச் சென்றார். வெறியர்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றினமாதிரித்தான்.

ஒரு 'குளுமாடு' பள்ளிக்கூட வாசலில் மாஸ்ரரை முட்டி மோதிக்கொண்டு போயிற்று.

இந்த முரட்டுத்தனங்கள் எல்லாம் 'மாஸ்ரருக்கு' இப்போது பழகிப்போனவை.

கடலில் இறங்கிவிட்ட படகா அலைகளைப்பற்றிக் கவலைப்படும்.

'மாஸ்ரருக்கு' நன்றாகவே தெரிந்தது - இந்தக் 'குழுக்களுக்கு' கொலைதான் கொள்கை.
ஆனால்......

தனக்குள்ளேயே அவர் சொல்லிக்கொண்டார்; நான் எதற்கும் ஆயத்தமாகவே இருக்கிறேன்.

* * *

தெருவில் ஒரு நாய் ஊளையிட்டுக் கொண்டு ஓடிற்று.

எங்கோ தூரத்தில் அதிர்ந்து வெடிக்கும் 'ஷெல்களின்' இடியோசை.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் மெதுவாக எழுந்து வானொலியை முறுக்கிவிட்டார். சேதிகள்.........

'இந்திய அரசையும் சிறிலங்கா அரசையும் துதிபாடும் வழமையான அதிகார வழிபாடு.'

வானொலியை ஆத்திரத்தோடு திடீரென்று நிறுத்தினார் 'மாஸ்ரர்'.

''பொய்ச்சேதிகளாலை விடுதலைப் புலிகளை அழிக்க முயலுகினம்... செய்திகளைமறைச்சா - உண்மைகளை மறைச்சா - புலிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் அழிச்சா - தமிழீழ விடுதலைப் போர் ஓய்ந்துபோகும் எண்டு நினைக்கினம் ...''

தன்பாட்டில் உறுமினார் அவர்.

மனைவியைப் பார்த்து 'மாஸ்ரர்' சொன்னார்-

''எத்தனை விதமான ஆபத்துக்குள்ளையும், பொய்ப் பிரச்சாரங்களுக்குள்ளையும் இந்தப் பிள்ளைகள் நிண்டு போராடுகினம் பார்த்தியே......!''

அப்போதுதான் -

புத்தம்புதிய 'மாஸ்ரரின்' வீட்டுக் கதவை உடைத்து விடுவதுபோல் யாரோ தட்டினார்கள்......

''யார் அது......''

கதவை அவர் மெதுவாகத் திறந்தார்.

அங்கே -

வெறி பிடித்த அந்தக் 'குழு' தான் காத்திருந்தது

முரட்டுத்தனமாக 'மாஸ்ரர்' வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.

மனைவியின் ஓலம் காற்றைக் கிழித்தது .....

அவளுக்குத் தெரியும்......

இனி அவர் திரும்பமாட்டார்.

* * *

அடுத்த நாள் -

கிளிநொச்சி மகா வித்தியாலயம் நெருப்பாயிற்று.

மாணவர்கள் கிளர்ந்து எழுந்தார்கள்.

ஒவ்வொரு மாணவனின் கண்களிலும் நீர் தேங்கி மணிகளாய் உருண்டது......

''எங்கள் நெஞ்சில் நிறைந்த 'மாஸ்ரரை' எங்கள் கையில் ஒப்படை!''

''கொலைகாரர்களே! ஆசிரியர்களைக் கொல்லவா குழு அமைத்தீர்கள்?''

''மாற்றானை மகிழ்விக்க சொந்த நாட்டானைக் கொல்லாதே!''

கிளிநொச்சித் தெருவெல்லாம் சுவரொட்டிகளாய்......

ஒரு மாணவன் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் முன் உருக்கமாகப் பேசினான்.

''நண்பர்களே!''

நெஞ்சில் நிறைந்த நம் ஆசிரியர் இனி வரமாட்டார் ஆனால் அவர் வருவார் என்று நாம் காத்திருப்போம்!

அவர் குரலை இனி நாம் கேட்க மாட்டோம்-ஆனால் அவர் பேசுவார் என்று நாம் எதிர்பார்ப்போம்!''

நெருப்பு
கார்த்திகை 1989

பெண்களை தலைமுடியில் பற்றி வீட்டுக்குள் இழுக்கின்றனர். பொறுமையின் எல்லையையே கடந்தாயிற்று. கிழவனார் அவர்களைத் திட்டியபடியே நடுநடுங்கியபடி கத்தியை ஓங்கினார். ஆனால் எதிர்நின்ற சிப்பாயின் கால் வலிமைக்குத் தாக்குப் பிடிக்காமல் சுருண்டு விழுகிறார். பெண்களின் அலறல் வானைப் பிளக்கிறது.

## இது ஒரு தொடர் கதை

யாழ். மாவட்டத்தில் சிறுப்பிட்டி என்னும் கிராமம். யாழ். குடா நாட்டின் மிகப்பெரிய இராணுவ முகாமான பலாலி முகாமுக்கு அண்மையில் உள்ளது. சிறீலங்கா இராணுவத்தினரின் வெளியேற்றம் போராளிகளின் இரத்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டு, முகாங்களெல்லாம் இராணுவத்தினருக்கு சிறைக்கூடமாக மாறியிருந்தன. முகாமிலிருந்து ஏவப்படும் ''ஷெல்'' மட்டுமே இக் கிராமத்துடன் தொடர்புடையதாகவிருந்தது.

சண்டையின்போது இராணுவக் காலடிகள் படாத இக்கிராமத்தில், சமாதானம் என்ற பெயரால் வந்தவர்களின் வாகனங்களும், பட்டாளங்களும் பரவத் தொடங்

கிய காலம். அன்றொரு நாள் அதிகாலை, ஒலிபெருக்கி அங்குள்ளவர்களைத் துயிலெழுப்பியது. விடுதலைப் பாடல் களையும் வீரமரணம் எய்திய போராளிகளின் அஞ்சலி யாம் சோக கீதத்தையும் இசைக்கும் ஒலிபெருக்கியாக அது இருக்கவில்லை. அபாய அறிவிப்பு அது. அண்மையில் உள்ள ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் ஆண்கள் அனை வரும் வந்து சேரவேண்டுமென்ற கடுமையான உத்தரவைப் பிறப்பித்தது - எல்லைச் சண்டைகளில் நடமாடும் யுத்த டாங்கிகள் சிறுப்பிட்டியின் கொல்லைகளில் காணப்பட்டன.

இந்த யுத்த டாங்கிகள் தமது சங்கிலிகளின் கோரப் பற்களினால் கொக்குவில், யாழ். நகரம் போன்ற இடங் களில் எமது மக்களின் உடல்களைத் துவசம் செய்து, இப் போது தனது கைவரிசையைக் காட்டத் தமது கிராமத் திற்கே வந்துவிட்டன என்பதை நினைக்க, அக்கிராமத் தவர்களுக்குக் கலக்கம் உண்டாயிற்று. உயிரைப் பற்றி அச்சப்படாத கன்னியர், தம் கற்பைப் பற்றிக் கவலைப் பட்டனர். ''நேசக் கரங்கள்'' என நினைத்தவை 'மோசக் கரங்களாகி' கதறக்கதற எமது சகோதரிகளைக் கசக்கிப் பிழிந்ததை அறிந்திருந்தமையால், ஒவ்வொரு வினாடியும் அவர்கள் அச்சம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. தமது சகோதரிகளை, மனைவியை விட்டுச் செல்ல முடியாத ஆண்கள், ''இனி சாணென்ன முழமென்ன'' நடப்பது நடக்கட்டும் என்று வீட்டிலேயே தங்கினர். வேலிகளுக்குள் ளால் நிலைமைபற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன.

மீண்டும் ஓர் அறிவிப்பு!

''பாடசாலைக்கு வராத ஆண்களெல்லாம் விடுதலைப் புலிகளாகக் கணிக்கப்படுவர்.''

அதைத் தொடர்ந்து வேட்டுக்கள். வேட்டொலி கேட்ட பெண்களெல்லாம் அழுது குழறி எல்லா ஆண் களையும் பாடசாலைக்கு அனுப்பினர். உள்ளத்தை வீட் டில் இருத்தி, உடல்கள் நகர்ந்தன.

பெண்கள் யாவரும் கலங்கி நிற்கின்றனர். முற்றிப் பழுத்தவர் ஒருவர் தனது மூன்றாவது காலின் உதவியுடன் (ஊன்றுகோல்). தள்ளாடித் தள்ளாடி முற்றத்தை நோக்கி வருகிறார். ஒரு கையில் மீன் வெட்டும் பெரிய கத்தி. கலங்கி நிற்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அயலவர்களை அழைக்கின்றார்.

''நீங்கள் பயப்படாமல் நில்லுங்கோடி, வீட்டுக்குள் அவர்கள் எதையாவது தேடட்டும். இந்தக் கள்ளப்படை கொண்டு போறதைக் கொண்டு போகட்டும். வேறு ஏதாவது சோதிக்க வந்தால் இந்தக் கத்திக்குப் பதில் சொல்லட்டும்.''

இந்தக் கிழவனாரின் வார்த்தைகளைக் கேட்ட பெண்கள் சிறு நம்பிக்கை பெற்றவர்களாக, அவரின் அருகே வந்து நிற்கின்றனர். இதேவேளை அடுத்த வீட்டில் ஒரு பாட்டியும் பேத்தியும். கிழவரோடு சேர்ந்து சில பெண்கள் நிற்பதைக் கண்ட பேத்தி, அவருடன் போய் நிற்போம் எனப் பாட்டியை அழைக்கிறாள். கூட்டமாக நிற்பது பாதுகாப்பாக இருக்கும் என அவள் கருதினாள். '' நீ போய் அங்கேநில்லம்மா. நான் கிழவிதானே? என்னை என்ன செய்துவிட முடியும்'' என்று கேட்டாள், அந்த 70 வயதுப் பாட்டி.

இதேவேளை 10, 15 பேர் கொண்ட குழுக்களாக வீடு வீடாகத் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றனர் பாரதப் படையினர். கிழவனாரும், பெண்களும் நிற்கும் இடத்தையும் நெருங்குகின்றனர் நடக்கவிருக்கும் விபரீதங்களை எண்ணி பெண்கள் குழு ஓலமிட ஆரம்பிக்கிறது. கிழவர் அவர்களை அடக்கி அமைதியாக்குகிறார்.

''பாம் வைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டபடியே பெண்கள் மீது தமது அங்க சேஷ்டைகளை ஆரம்பிக்கின்றனர் இந்திய இராணுவத்தினர்! கிழவனாரின் கடுமையான வார்த்தைகளை எருமை மாட்டில் மழை பெய்வது போல எடுத்துக்கொள்கின்றனர்.

பெண்களை வீட்டிற்குள் வரும்படி இராணுவத்தினர் உத்தரவிடுகின்றனர். ''வீட்டைச் சோதனை இடுவதானால் சோதனையிடுங்கள். எதை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லுங்கள். எங்களை மட்டும் ஒன்றும் செய்துவிடாதீர்கள்'' என அழுது புலம்பினர். இதற்கெல்லாம் மசியக் கூடியவர்களா அவர்கள்? அவர்கள்தான் 'உலகின் நான்காவது பெரிய' இராணுவமாயிற்றே! பெண்களை தலை முடியில் பற்றி வீட்டுக்குள் இழுக்கின்றனர். பொறுமையின் எல்லையையே கடந்தாயிற்று. கிழவனார் அவர்களைத் திட்டியபடியே நடுநடுங்கியபடி கத்தியை ஓங்கினார். ஆனால் எதிர்நின்ற சிப்பாயின் கால் வலிமைக்குத் தாக்குப் பிடிக்காமல் சுருண்டு விழுகிறார். பெண்களின் அலறல் வானைப் பிளக்கிறது. சத்தம் கேட்ட உயர் அதிகாரி அங்கே விரைகிறார்.

''என்ன நடந்தது. ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்?''

பாதிக்கப்பட்டவர் மீதே பாய்ந்து விழுந்தார். பாரத இராணுவ உயர் அதிகாரி!

நீதிபதி ஸ்தானத்தில் ஒருவர் கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கை ஒளியில், நடந்ததை விவரிக்கின்றனர் பெண்கள். இராணுவத்தினரை நோக்குகிறார் அதிகாரி.

''நாங்கள் கோழி பிடிக்க முயன்றோம். கோழிக்கு எறியும்போது இவர்கள்மீது பட்டுவிடுமே என்று உள்ளே போகச் சொன்னோம்'' என்று சிரித்தபடியே மழுப்புகின்றனர் சிப்பாய்கள்.

நடந்தவற்றையும் நடக்க இருப்பதையும் புரிந்து கொண்ட அதிகாரி ஒன்றும் புரியாததுபோல் பாவனை செய்தார். ''போகச் சொன்னால் போவதுதானே! என்று பெண்கள் மீது பாய்ந்து விழுந்துவிட்டு அங்கிருந்து நகருகிறார். அவரும் சிப்பாய் என்ற நிலையிலிருந்து இப்படியான செயலகள் மூலம் பதவியுயர்வு பெற்றவர்போலும்! ''ஏன் நான் இடைஞ்சலாக இருப்பான்'' என எண்ணித்தான் அங்கிருந்து சென்றிருப்பார்.

இராணுவத்தின் ''தேடுதல்''கள் முடிவடைந்ததும் பாட்டி நோக்கி விரைகிறாள் பேத்தி. வீட்டில் தனியே இருந்த பாட்டி அலங்கோலமான நிலையில் மயங்கிக் கிடக்கிறாள். ''பெருமை மிக்கதாம்'' பாரதப் படையின் தேவைக்கு பாட்டிகூடத் தப்பவில்லை. புரிகிறது பேத்திக்கு. பாட்டியின் முகத்திற்கு தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவிக்கின்றனர். மெதுவாகத் தூக்கி உட்கார வைக்கின்றனர். ஆதரவாக விசாரிக்கின்றனர். தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு தான் பதில் சொல்லச்சொல்ல, சொக்கில் கிள்ளியும் மற்றும் பல சேட்டைகளையும் அவர்கள் புரியவே தான் மயங்கி விட்டதாகவும், பின் என்ன நடந்தது என்று தெரியாது என்றும் பாட்டி சொல்கிறாள்.

இதேவேளை பாடசாலைக்குச் சென்ற ஆண்கள் திரும்பி வருகின்றனர். தங்கள் கணவன்மார்கள், தங்கள் பிள்ளைகள் திரும்பி வருகிறார்களா என ஏக்கத்துடன், ஒவ்வொரு பெண்ணும் நோக்குகின்றாள். எதிர்பார்ப்பவர்களைக் காணாதவர்கள் தேம்புகின்றனர். சிலர் எட்டப்பர்களாலும் பாரதப் படையாலும் தாக்கப்பட்டு விடுவிக்கப் பட்டிருக்கின்றனர். வேறு சிலர் மின் அதிர்ச்சிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். சிலர் கைப் பெருவிரலில் கட்டித் தொங்க விடப்பட்டுத் தாக்கப்பட்டதாகவும், ஒரு சிலரே முக மூடி அணிந்தஅந்த மர்ம மனிதர்களின் ''கடாட்சத்தினால்'' அசம்பாவிதமின்றி வெளியே வந்ததாகவும் கூறுகின்றனர். அவர்களுக்கு சிகிச்சையளிக்க பெண்கள் தயாராகின்றனர்.

''பாரதப்படை இன்னும் எத்தனை நாளைக்கோ'' - எல்லோர் வாயும் இதையே முணுமுணுக்கிறது. ஏனெனில் இது ஒரு தொடர்கதைதான் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தூரத்தில் எங்கிருந்தோ பாரதப் படையின் பெருமைகள் பற்றி, முன்னாள் ''முற்போக்காளர் ஜெயகாந்தனின்'' குரல் ஒலிக்கிறது ! ○

தமிழீழம்
ஆனி 1988

யாழ்ப்பாணம் அவன் எண்ணங்களில் - கனவுகளில் எப்போதுமே நிறைந்திருந்தது.

சின்ன வயதில் விளையாடி மகிழ்ந்த செம்பாட்டு மண் - கூட்டமாக நிற்கும் பனை மரங்கள் - குடாநாட்டுக்கு வெளியே தொடங்கும் அடர்ந்த பச்சைக் காடு - இரண்டு இரண்டாகப் புல்தரையில் மேயும் மைனாக்கள் - கோயிலடியில் பனங்கிழங்கு விற்கும் கிழவி - பழைய காலத்து ஏ - 40 'கார்'கள், தவில் வித்துவான்களின் இனிய மேளக்கச்சேரி - உயிரான தமிழீழம்!

# அப்பா இன்னும் இருக்கின்றார்...!

**24 . 10 . 87** *காலை 10 மணி.*

*யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்குக் ' கார் ' புறப்படுகிறது.*

*'ஷெல்' களுக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் நடுவில் ஒரு பயணம்.*

*சிறீவரதராஜா, மனைவி நீலாம்பிகை, குழந்தைகள் தர்சன், தர்மலா, கிரிஷன், மாமா, மாமி, சகோதரி ரஜனி மற்றும் ஓர் உறவினர் காரை அடைத்தாற்போல் உட்கார்ந்திருக்கிறார்கள்.*

*நல்லூர்க் கோயிலடியில் இந்தியப் படையின் முதல் தடுப்பு நிலையம் குறுக்கிடுகிறது.*

நிற்கிறார்கள்.

காக்கியுடைக் கும்பல் ஒன்று 'காரை' மொய்க்கிறது.

"உங்களை எல்லாம் சுட்டுக் கொல்லவேணும்...... We Will Shoot You"

ஒரு வெறியன் கூச்சலிடுகிறான்.

எல்லோரையும் கீழே இறக்கி 'காரின்' ஒவ்வொரு பகுதியாக உருட்டிப் புரட்டிவிட்டு, மற்றொரு இந்தியப் படைக்காரன் அவர்களைப் பார்த்து முரட்டுத்தனமாக உறுமுகிறான் -

"புலி யாரும் இருக்கிறதா?"

சிறீவரதராஜா பக்கவாட்டில் தலையை அசைக்கிறான். குழந்தைகள் மிரளுகின்றன. மூன்று வயது தர்மலா அம்மாவின் சேலையில் முகத்தைப் புதைக்கிறாள்.

"சரி போ ..... போ......"

காலையிலேயே முகமெல்லாம் வியர்த்துக்கொட்ட வெலவெலத்துப்போய் ஓட்டுநர் இருக்கையில் உட்காருகிறார்.

'கார்' புறப்படுகிறது.

"அப்பா உவங்கள் எதுக்கு எங்களை மிரட்டுறாங்கள் ......? சுட்டுப் போடுவாங்களே அப்பா?"

ஆறு வயது தர்சன் அப்பாவைக் கேட்கிறான்.

வெளியே மரங்கள், மின்கம்பங்கள் எல்லாம் ஓடிக் கொண்டிருப்பது கிரிஷனுக்குக் கொள்ளை மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு வயதுக் குழந்தை அவன்.

'கார்'க் கண்ணாடியை இழுத்துவிட்டு - உள்ளே வந்த காற்றை உறிஞ்சி சிறீவரதராஜா பெரிதாக மூச்சு விடுகிறான்.

தலை சுற்றுகிறது.

"நாம் எல்லாம் தமிழனாய் பிறந்ததால இப்படி அனுபவிக்கிறம்டா தம்பி......"

சிறீவரதராஜாவின் சொற்களைக் கேட்டு ஓட்டுநர் சிரிக்கிறார். சினத்தின் வெளிப்பாடு.

"உவங்கள்தான் எங்களைக் காப்பாத்த வந்தவங்களே.....?"

சிறீவரதராஜாவின் மனைவி நீலாம்பிகை முனகுகிறாள்.

"கொஞ்சம் கூட மனுசத் தன்மை இல்லாமப் பாய்ஞ்சு விழுகினம்."

"அதுதான் தங்கச்சி நினைச்சாச் சரியான கவலையாக் கிடக்குது. சிங்களவன் சுட்டானெண்டால் தாங்கிக் கொள்ளலாம்...... அவன் எங்களை அழிக்கிறதுக்கு என்றே இருக்கிறவன்...... உவங்கள் காப்பாத்த அல்லே வந்தவங்கள்! ஊர் ஊராக் கொல்லுகினம்."

ஓட்டுநர் நீலாம்பிகை சொன்ன கருத்துக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

தூரத்தில் இந்தியப் படை 'ட்றக்' வண்டி வருவது தெரிகிறது.

"உவங்கள் வாறாங்கள்."

தர்சன் விரலை நீட்டிக் காட்டுகிறான்.

எல்லோரும் அமைதியாகிறார்கள்.

"ஏதும் செய்யமாட்டினமே?"

எல்லோரும் அமைதியாகிறார்கள்.

"ஏதும் செய்யமாட்டினமே?"

மாமிக்கு நடுக்கம் பிடிக்கிறது.

"காருல வெள்ளைக் கொடி கிடக்குது அம்மா...... பயமில்லாம இருங்கோ"

ஓட்டுநர் தெம்பூட்டுகிறார்.

பாம்பு ஒன்று மின்னல் வேகத்தில் பக்கத்தாலேயே சீறிக் கொண்டு பாய்வது போல, 'ட்றக்' வண்டி நொடியில் 'காரை'க் கடந்து மறைகிறது.

சிறீவரதராஜா பழையபடி காரின் ஜன்னல் வழியாகக் காற்றை உறிஞ்சி மூச்சு வாங்குகிறான்.

" நம்முடைய தெருவில நாமே நடமாட முடியாத நம்முடைய நாடு''

வயிற்றெரிச்சல் அவன் வாயிலிருந்து சொற்களாய்விழ, ஓட்டுநர் மீண்டும் சிரிக்கிறார் - அதே சினத்தின் வெளிப்பாடு.

லண்டனில் வாழ்ந்தவர்கள் அவர்கள்.

மகாராணி எலிசபெத்தின் மண்ணாக இருந்தாலும் தாயகம் ஆகிவிடுமா என்ன? லண்டனில் தமிழீழம் பற்றிய கூட்டங்கள் நடக்கும்போதெல்லாம் மண்டபத்தின் முன் வரிசையில் சிறீவரதராஜா தாகத்தோடு உட்காந்திருப்பான்.

யாழ்ப்பாணம் அவன் எண்ணங்களில் - கனவுகளில் எப்போதுமே நிறைந்திருந்தது.

சின்ன வயதில் விளையாடி மகிழ்ந்த செம்பாட்டு மண் - கூட்டமாக நிற்கும் பனை மரங்கள் - குடாநாட்டுக்கு வெளியே தொடங்கும் அடர்ந்த பச்சைக் காடு - இரண்டு இரண்டாகப் புல்தரையில் மேயும் மைனாக்கள் - கோயிலடியில் பனங்கிழங்கு விற்கும் கிழவி - பழைய காலத்து ஏ - 40 'கார்'கள், தவில் வித்துவான்களின் இனிய மேளக்கச்சேரி - உயிரான தமிழீழம்!

" அப்பாவுக்கு உடல் நலம் இல்லை - நோய்கடுமையாக இருக்கிறது."

ஊரில் இருந்து வந்த தந்தியைப் படித்தபோது, சிறீ வரதராஜா உடைந்து போனான்.

அப்பா கண்முன் அப்படியே தோன்றினார்......!

நீளவிழிகளும் அடக்கமான சிரிப்பும் தோளில் சால்வை யும் கைத்தடியும்......

அப்பா.... அவனுடைய அன்பான அப்பா...... அப்பா சாகுமுன் அவரை ஒரு முறை பார்த்துவிட வேண்டும்......

"நீலா, அப்பா என்னை நினைக்காம இருக்கமாட் டார் தெரியுமே?"

கண்கலங்க மனைவி நீலாம்பிகையிடம் சொன்ன சிறீ வரதராஜா, அடுத்த மணித்துளியே தர்மலாவைத் தூக்கி மார்போடு அணைத்தபடி தளதளத்த குரலில் சொன் னான் -

"மகளே...... நாம அப்பாவைப் பார்க்கப் போறம்."

"மெய்யே அப்பா...... உண்மையாகத்தான் சொல்லு றீங்களே......?"

தர்சனுக்கு ஒரே கொண்டாட்டம் - அப்பப்பாவின் நோயைப்பற்றி ஒன்றும் பெரிதாகக் கவலைப்படத் தெரி யாத வயது. அவன் கூத்தாடத் தொடங்கிவிட்டான்.

தங்கை தர்மலாவிடம் இரண்டு நாட்கள் தர்சன் கதை கதையாகக் கூறிக்கொண்டே இருந்தான்.

"யாழ்ப்பாணத்துக்கு 'பிளைட்டுல' போறதாம்...... பேந்து அப்பப்பா 'சொகளேட்' வாங்கித் தருவாராம்.... பேந்து விக்கிச் சித்தப்பா கடற்கரைக்குக் கூட்டிற்றுப் போவாராம்......"

தர்மலா வானத்தில் மிதந்தாள்.

ஏற்பாடுகள் முடிந்து விமானம் புறப்படும் நாள் வந்த போது, எல்லோரும் 'ஹீத்றோ' விமான நிலையத்துக்கு வந்தார்கள்.

தர்சனின் மகிழ்ச்சி எல்லை தாண்டி இருந்தது.

விமானம் புறப்படுமுன்பு, லண்டன் நகரை நோக்கிக் கைகளை அசைத்து அவன் கூறினான்.

"குட்பை ரு லண்டன்"

சிறீவரதராஜா 5. 10. 87 இல் கொழும்பு வந்து இறங்கிய போதே தமிழீழத்தில் இரத்த மழைக்கான முகில்கள் குவியத் தொடங்கிவிட்டன.

விடுதலைப் புலிகளின் மாபெரும் தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 விடுதலைப் புலிகள் பலாலி படைமுகாமில் 'சயனைட்' அருந்தி உயிரிழந்த சேதி, கொழும்பில் காட்டுத்தீயாகப் பரவிக்கொண்டிருந்தது.

எங்கும் பதற்றம்.

உணர்ச்சிவசப்பட்ட தமிழர்கள் அடுத்த ஓரிரு நாட்களில் கிழக்கில் சிங்களவர்களைப் பெருமளவில் கொன்று குவிப்பதாகக் கொழும்பில் பரபரப்போடு பேசப்பட்டது. சிங்களவர்களின் அந்த நகரில் வீடுகளை விட்டுத் தமிழர்கள் வெளியில் இறங்கவில்லை.

தெருக்களில் "பற தெமள" முழக்கங்கள் கேட்பதாகவும் - தமிழர்கள் ஓரிரு இடங்களில் தாக்கப்பட்டதாகவும் - சேதிகள் அடிபட்டன.

வாடகைக் கார் ஒன்றை வைத்துக்கொண்டு சிறீவரதராஜா கொழும்பை விட்டுப் புறப்பட்டு, உடனடியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான்.

"அப்பா சாகுமுன் அவரை ஒருமுறை பார்த்துவிட வேண்டும்......"

இந்தியப் படை தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பது என்ற முடிவோடு, ஒக்ரோபர் 9 ஆம் தேதி தாக்குதலைத் தொடங்கிற்று.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலு திசைகளையும் பாரதப் படையின் 'ஷெல்'கள் நொறுக்கிக் கொட்டின.

எங்கும் பிணவாடை - இரத்த வெள்ளம் - மனித அவதிகள் - கண்ணீர்......

துப்பாக்கி வேட்டோசை கேட்டபோதெல்லாம் காக்கைகள் வானத்தில் எழுந்து கூச்சலிட்டன.

யாழ்ப்பாணத்தில் மருத்துவமனைகள் நிரம்பி வழிந்த நாட்கள் அவை.

சிறீவரதராஜா, தனியார் மருத்துவமனை ஒன்றில் இருந்த அப்பாவைக் குடும்பத்தோடு போய்ப் பார்த்தான்.

அப்பாவின் கண்களில் வெள்ளம் பொங்கிற்று.

''சாகிறதுக்கு முன்னாலை உன்னைப் பார்க்க முடியுமோ இல்லையோ என்று கவலையாக இருந்தது மோனே... வந்து சேர்ந்திட்டாயே...!''

குழந்தை போல விம்மி அழத்தொடங்கினார் அப்பா.

தர்சன் கட்டிலில் உட்கார்ந்து அப்பப்பாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருநதான்.

''ஆசுப்பத்திரியிலை எத்தனை இளசுகள் காயத்தோடயும் - இரத்தத்தோடயும் வருகுதுகள் தெரியுமே? இந்தியப் படை இப்படி நடக்கும் என்று யார் நினைச்சது?''

முனகி முனகி அப்பா மூச்சு விட்டார்.

சிறீவரதராஜா அப்பாவைத் தேற்றினான்.

''உதையெல்லாம் பற்றி யோசியாதேயுங்கோ அப்பா - புலிகள் விட மாட்டினம்.''

அப்பாவுக்கு நோய்ப்படுக்கையில் கவலை எதுவும் இருக்கக்கூடாது என்பதுதான் சிறீவரதராஜாவின் கவலை.

யாழ்ப்பாணத்தில் - தம்பி விக்கினேஸ்வரன் வீட்டில் தங்கி ஒவ்வொருநாளும் அப்பாவைப் போய்ப்பார்த்தான் அவன்.

தர்சனும் தர்மலாவும் இரண்டு வாரங்கள் விக்கிச் சித்தப்பா வீட்டில் படாத பாடு பட்டார்கள்.

சிறிய பந்துகளை எடுத்துக் கூடையில் போட்டு ''ஆசுபத்திரியில இருக்கிற அப்பப்பாவுக்குத் தோடம்பழம் கொண்டு போறதாம்''என்று ஒரு விளையாட்டு.

தர்சன் முன்மண்டபத்தில் கிடந்த நீள நாற்காலியில் படுத்திருந்தான். தர்மலா பென்சிலை எடுத்து அவன் கையில் ஊசி போடுவதுபோலக் குத்தினாள்.

''நீதான் அப்பப்பாவாம்...... நான் தான் டொக்ர ராம்......''

தலைவாரிக்கொண்டிருந்த நீலாம்பிகை பிள்ளைகளைப் பார்த்து ''என்ன இதெல்லாம்?'' என்று கேட்டாள்.

''மருந்து குடுக்காட்டி அப்பப்பா செத்துப் போயிடு வார் - இல்லையா அம்மா?'' என்றான் தர்சன்.

திடீரென்று பக்கத்தில் கேட்பதுபோல இந்தியப்படை 'ஷெல்' எங்கோ அதிர்ந்து வெடித்தது.

''மருந்து குடுத்தும் காப்பாத்த முடியாம எத்தனையோ உயிர்கள் செத்துக்கொண்டிருக்குதடா தம்பி'' என்றான் சிறீவரதராஜா.

குழந்தைகளுக்குப் புரியவில்லை.

இரண்டு வாரங்கள் இப்படித்தான்......

புரிந்தும் புரியாததுமான பேச்சுக்கள்..... நிகழ்வுகள்......

வீட்டில் மட்டுமல்ல - வெளியிலுந்தான்...... இந்தியப்படை ஏன் தமிழர்களைக் கொல்கிறது? எவருக்கும் புரியவில்லை. சிறீவரதராஜாவுக்கு மட்டும் ஒரு பெரிய மன அமைதி.

அப்பா சாகுமுன் ஒருமுறை அவரைப் பார்த்துவிட வேண்டும் என்று ஒரு தவிப்பு இருந்ததே - பார்த்தாயிற்று.

24 ஆம் தேதி காலை வழக்கம்போல் அப்பாவை அவன் மீண்டும் பார்த்தான்.

அப்பா உடல்நிலை தேறிக் கலகலப்பாகவே இருந்தார். சிறீவரதராஜா பூரித்துப்போனான்,

தர்சன் பையில் கொண்டு வந்திருந்த பழங்களை வாங்கிக் கொண்டு ''பழமா? பந்தா?''என்று கேட்டார் அப்பப்பா.

எல்லோரும் சிரித்தார்கள்.

''ஒரு வாரம் கிளிநொச்சியில் தங்கிவிட்டு வாறன் அப்பா'' என்றான் சிறீவரதராஜன்.

பயணம் தொடங்கிற்று.

மருத்துவமனைக்கு வெளியே வந்து காரில் ஏறியபோதே 'ஷெல்'களின் வேட்டோசை காதைப் பிளிந்து எடுத்தது.

விமானங்கள் உறுமி இரைந்தன.

அப்பாவோடு பேசிய மகிழ்ச்சி தீர்ந்து போயிற்று.

கொடுமையான பயணம்.....

யாழ்ப்பாண வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன - ஓட்டுநர் எண்ணிப் பெருமூச்சு விடுகிறார்.

''றோட்டு'க்கூடச் செத்துப்போய்க்கிடக்குது......''

வானத்தில் மாரிகால முகிலின் இருள்... ஓரிரு மழைத் துளிகள்.

தெருவுக்குக் குறுக்கே நீளமாகப் படுத்துக் கிடந்த மாடுகள் எழுந்து நகர்கின்றன.

பொதுமக்கள் ஆசையோடு தெருவோரத்தில் நிறுத்தி வைத்த விடுதலைப் புலிகள் தளபதி லெப். கேணல் பொன்னம்மானின் ஓவியத் தட்டி, இந்தியப்படைத் துப்பாக்கிகளால் சுட்டுக் கிழிக்கப்பட்டு நொருங்கிக் கிடக்கிறது.

''விடுதலைப் புலிகளின்ர படத்துக்குக்கூட உவை பயப்படுகினம்''

சிறீவரதராஜா மனக்குமுறலைக் கொட்டுகிறான்.

''பொன்னம்மானுடைய படத்தை உடைக்கிறதால உந்த வீரனுடைய புகழை அழிக்க முடியுமே?'' என்கிறார் ஓட்டுநர்.

கார் பள்ளத்தில் விழுந்து தளம்பி நகர்கிறது.

''உது ஒரு விடுதலைப் போராட்டம் பாருங்கோ - இந்தியப்படை என்ன - உலகத்துல இருக்கிற எந்த வல்லரசின்ர படை வந்தாலும், தமிழீழ மக்களின்ர போராட்டத்தை ஒடுக்க முடியாது. உண்மையிலேயே உவை படங்களோடுதான் போராடுகினம்.''

சிறீவரதராஜா உறுமுகிறான்.

''பேசாதீங்கோப்பா......உங்கின அவை நிற்கிறமாதிரித் தெரியுது......''

நீலாம்பிகை பதட்டமடைகிறாள்.

கோயில் வீதியும் ஆடியபாதம் வீதியும் கூடும் சந்தியில் ஒரு கும்பல் - நல்லூர்க் கோயிலடிக் கும்பலைப் போலவே துப்பாக்கிகளோடு -

'காரை'த் தடுத்து நிறுத்துகிறார்கள்.

இந்தியப்படை வெறியன் ஒருவன் துப்பாக்கியை நீட்டிக்கொண்டே 'காரை' நோக்கிப் பாய்கிறான்.

''அப்பா...... உவங்கள் சுட்டுப்போடுவாங்களே .....?''

நடுங்கிக்கொண்டே தர்சன் அப்பாவைக் கேட்கிறான்.

குழந்தைகளின் முகங்களை மாறி மாறிப் பார்த்துவிட்டு ''ஓ!'' என்று வாய் கிழியச் சிரிக்கிறான் ஒரு நீள மீசை அதிகாரி.

''சரி நீங்க போகலாம்......''

ஓட்டுநர் முகத்தில் வடிந்த வியர்வையை வழித்துவிட்டுக் 'காரை'' எடுக்கிறார்.

கார் நூறு யார் போகவில்லை......

'டுமில் டுமில்' என்று துப்பாக்கிகளின் கொடிய உறுமல்.

''அம்மா...... ஐயோ......''

கார் ஆடி அசைந்து சாய்கிறது.

தொடர்ந்து துப்பாக்கிகளின் வெறிமுழக்கம்.

குருதி பாய நிலத்தில விழுந்த ஓட்டுநர் அரைகுறைக் காயங்களோடு எதிரே இருந்த சந்து வழியாக ஓடித் தப்பு கிறார்.

''போகச் சொல்லிப்போட்டுச் சுடுகிறான்களே சண்டா ளனுகள்......''

ஓட்டுநரின் கதறல் கேட்கிறது.

இன்னொரு ''வீர்'' என்ற சின்னஞ்சிறிய பிஞ்சின் அழுகுரல்...... 'காரின்' உள்ளே...... காயங்களோடு.

அதுதான் சிறீவரதராஜாவின் கடைசிக் குழந்தை கிரிஷன்.

மற்றவர்கள்......?

கதை முடிந்துவிட்டது! ○

தமிழீழம்
தை 1989

கைகூப்பி விடை பெற்றபோது மகாகவி பாரதி நினைவுக்கு வந்தான்.

''தழல் வீரத்தில், குஞ்சென்றும் முப்பென்றும் உண்டோ......

# பிரிவு

ஓர் அமைதியான அதிகாலை. அன்றைய காலை மட்டும் ஏனோ ஓர் மயான அமைதியாய் .........

விடியலில், வேலைக்காகப் புறப்பட்ட பாதங்கள் மீண்டும் தத்தம் வீடுகளிலேயே விரைவுடன் புகலிடம் தேடிக்கொள்கின்றன.

அண்மைக்காலமாக வேட்டுக்களுடன் கண்விழிக்கும் சாவகச்சேரி நகர் அன்றுமட்டும் ...... இரைதேடி வந்த ''அமைதிக்'' கும்பலினால், ஓசையின்றி முற்று கையிடப்பட்டது. முற்று முழுதான முற்றுகை.

சப்பாத்துக்களின் சீரான ஓசை. அவரம் கேட்டு விழித்த நாய்கள் பச்சைத் தொப்பிகளைக் கண்டதும் அமர்க்களமாகக் குரைக்கத் தொடங்கின. மக்கள் கிலி

கொண்டு வீடுகளினுள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். அமைதிகாக்க வந்தவர்களினால் அன்றும் அமைதி சூறை யாடப்பட்டது.

முற்றுகையில் அகப்பட்ட மூன்று விடுதலைப் புலிகள், பாய்வதா பதுங்குவதா என யோசித்தார்கள்; பாது காப்பிடம் ஒன்றில் தயார் நிலையில் பதுங்கியிருந்தனர்.

மதிய வேளையாகிக் கொண்டிருந்தது:

திடீரென்று, சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத் தங்கள். அதைத் தொடர்ந்து மக்களின் பீதி நிறைந்த ஓலம். அந்த நேரத்தில் ......

''தம்பி ......'' ஓர் குரல்.

'இந்த நேரத்தில் யார்?'

ஓர் எச்சரிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் சிறிது நேரம் காத்திருந்தவர்கள், மெதுவாக எட்டிப் பார்த் தார்கள். யாரையும் காணவில்லை. ஆனால் சிறிய தோர் பானையில் குத்தரிசிப் 'புக்கை' மட்டும் இருந்தது.

புரிந்துகொண்டனர். பசிக்களை தீர்ந்தது.

இடைக்கிடை கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங் களையும், மனித வதையின்போது கேட்ட ஓலங்களை யும் தவிர இப்போது வேறு ஓசையில்லை.

பொழுது சாயும் நேரம் மீண்டும் —....

''தம்பி ...''

அதே குரல்.

''அவங்கள் போட்டாங்கள்''

ஒரு வித ஆவலுடன் எட்டிப் பார்த்தபோது...... ஓர் முதியவர்.

''தம்பியவை சாப்பிட்டியளோ...? குறை விளங்காதே யுங்கோ. என்னால ஏலக்கூடியது இவ்வளவுதான் ராசா.

கண்கள் பனிக்க......

''குறையோ ! என்ன ஐயா இது... ?''

கைகூப்பி விடை பெற்றபோது மகாகவி பாரதி நினைவுக்கு வந்தான்.

''தழல் வீரத்தில், குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ......''

தள்ளாடும் வயது வரினும் மனிதநேயமும் விடுதலை உணர்வும் மறைந்திடுமா என்ன ? ○

தமிழீழம்
பங்குனி 1989

ரசித்தபடி நடக்கிறான்.

மீண்டும்......

''சூய்......சூய்......சூய்......சூ......ய்''

மிகவும் நெருங்கிய நிலையில் அந்தச் சத்தம்.

உன்னிப்பாக அவதானிக்கிறான்.

# காவல்

வன்னிக் கிராமங்களுக்கே உரித்தான ரம்யமான விடியல் ஒன்று. சூரியனின் மஞ்சள் கதிர்கள் வெண்பனி படர்ந்த பச்சைப் புல்மீது பட்டுத் தெறிக்கின்றன.

கிராமங்களின் செல்வங்களான கால்நடைகள் ஒழுங்கையை நிரப்பிக்கொண்டே, ''உங்களுக்கு எல்லா நேரமும் வழிவிட முடியாது'' என, முரண்டு பிடிப்பதுபோல் நின்று கொண்டிருந்தன.

மாடுகளின் முதுகில் வாஞ்சையுடன் தட்டியபடி, தனக்கிட்ட வேலையை எப்படிச் சுலபமாகச் செய்து முடிக்கலாம் என்று சிந்தித்தபடி, எமது தோழன் ஒருவன் சென்று கொண்டிருக்கிறான்.

'' சூய்...... சூய்...... சூய்...... சூய்''

சற்றுத் தள்ளி ஒரு, பெண்ணின் ஆடு மேய்க்கும் சத்தம்.

சத்தம் வந்த திசையைப் பார்க்கிறான்.

ஆடுகளையோ ...... மாடுகளையோ காணவில்லை. வேலிக்கப்பால் இருந்து ஆடு மேய்க்கும் சத்தம் விட்டு விட்டுக் கேட்கிறது.

ஜனசந்தடி மிக்க நகர்ப்புறத்தில் பிறந்து வளர்ந்த அந்தத் தோழனுக்கு இவை எல்லாம் சுக அனுபவங்கள்.

இயற்கையை ஒட்டிய மனிதனின் வாழ்க்கை அந்த நகர்ப்புற இளைஞனுக்கு சுகந்தமான காட்சி.

ரசித்தபடி நடக்கிறான்.

மீண்டும்......

''சூய்......சூய்......சூய்......சூ......ய்''

மிகவும் நெருங்கிய நிலையில் அந்தச் சத்தம்.

உன்னிப்பாக அவதானிக்கிறான்.

அடைக்கப்படாமல் கிடந்த அலம்பல் வேலிக்கு மேலால் ஒரு 'ஆச்சி' தெரிந்தாள். தன்னுடைய அம்மாவை நினைத்துக்கொண்டு கேட்டான்.

''என்ன ஆச்சி! ஆடோ கலைக்கிறியள்?''

''சூய் சூய் சூய்சூய்......சூய்''

இப்பொழுது, அந்தக் குரலில் ஒரு பதற்றம் தெரிந்தது.

அந்தச் சத்தத்துக்கூடாக ஒரு செய்தி அனுப்பப்படுகிறதா எனச் சந்தேகித்தவாறு, நடையை நிறுத்துகிறான். ஆச்சியினுடைய முகம் ஏதோ ஒன்றைச் சொல்ல அவசரப்படுகின்றது.

தன்னுடைய தலையைத் தடவுவதுபோல் பாசாங்கு செய்துகொண்டு கையைப் பின்புறமாகக் காட்டி 'ஆமி' என வாயசைத்தாள்.

நிலைமையைப் புரிந்துகொண்ட எமது தோழனின் கண்கள் பாதையைத் துழாவுகின்றன.

சற்றுத் தள்ளி இருந்த பாலை மரத்துக்குப் பின்னால் நிலை எடுத்துக் கிடக்கும் இந்திய இராணுவத்தின் இரும்புத் தொப்பி தெரிகின்றது.

நிதானமாகத் திரும்பி வந்த வழியே நடக்கிறான்.

''சூய் .... சூய்..... ய் .. சூ .... ய்''

இப்போது ஒரு புதிய இராகத்துடன் ஒலிக்கும் அந்தக் குரலில், ஓர் ஆத்ம திருப்தி தென்படுகின்றது! ○

உணர்வு

தமிழீழத்தில் .....

மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்ததுபோல்......

நவசோதி அழுதுகொண்டே இருந்தாள்.

# சாகாத பிணங்கள்

**1987 ஒக்ரோபர் 19.**

காலை 10 மணிக்கு ராசம்மா தண்ணீர் அள்ளிவரக் கிணற்றடிக்குப் போனவள், 12 மணி ஆகியும் இன்னும் திரும்பவில்லை.

வீட்டிலிருந்து 150 யார் தூரத்தில்தான் தோட்டக் காணி - அங்கேதான் கிணறு.

வெளியே வரமுடியாதவராய் வேலி மறைப்பில் நின்றபடியே, சொக்கலிங்கம் ஐந்து பத்துத் தடவைகள் வீதியை எட்டிப் பார்த்தார் - அவள் இல்லை.

முற்றத்தில் நவசோதி விசும்பி அழுவது கேட்கிறது.

"சும்மா இரடி புள்ள...... உங்கின இந்திய ஆமிக்கார னுகளைப் பார்த்துட்டு அம்மா ஆரின்ர வீட்டுக்குள்ளயா வது போய் இருப்பா."

மகளையும் தேற்றி - தன்னையும் தேற்றிக்கொண்டார் சொக்கலிங்கம்.

ஆனாலும் -

நெஞ்சு அடித்துக்கொண்டது. வெளியே இந்தியப் படை யின் 'ஜீப்' வண்டிகள் உறுமிப் பறந்தன. மிருகத்தனமான துப்பாக்கிகளின் வேட்டோசை கேட்டது.

பனை மரங்களைப் போலவே காலம்காலமாய் யாழ்ப் பாணத்தில் வேரூன்றிய தமிழ்க் குடும்பம் அது.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் தெருவில் வீடு.

இரண்டு பெண்பிள்ளைகள்.

மூத்தவள் நவசோதிக்கு 26 வயது.

திருமணம் ஆகாத நவசோதிக்கும் தங்கச்சிக்கும், அப் பாவும் அம்மாவும்தான் உலகம். அடக்கமான பெண்கள். அம்மாவையும், அப்பாவையும் சுற்றிக்கொண்டே இருப் பார்கள்.

நவசோதி அம்மாவைப் பார்த்துச் சொல்வாள்: "இந்த உலகத்திலை எங்களுக்கு எதுவுமே தேவையில்லை அம்மா...... நீயும் அப்பாவும் எங்களின்ர வீட்டில இருந் தாப் போதும்."

சொக்கலிங்கமும் ராசம்மாவும் குளிர்ந்துபோவார்கள்.

காலையில் வீடுவாசல் பெருக்கி கோப்பி போடுவது முதல் - பின்பு நடுப்பகலும் இரவும் சமையல் முடித்து, தட் டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஆனைக்கோட்டை நல் லெண்ணெய் ஊற்றிச் சோறு பரிமாறுகிற வரை, எல்லாமே நவசோதியின் வேலைதான்; தங்கச்சியும் கூட உதவுவாள். 'இப்படியும் ஒரு குடும்பம்!' என்று ஊரே பொறாமைப் பட்டது.

பூவின் இதழ்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு பக்கத்திலேயே நெருக்கமாக இல்லையா? அப்படி ஓர் உறவு.

எத்தனை மகிழ்ச்சியான பொழுதுகள்...... நிகழ்வுகள்......!

இரவில் -

அப்பா முற்றத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொள்வார்.

பழைய காலத்தில் அவருடைய அப்பா அம்மாவோடு வாழ்ந்த வாழ்க்கை - பழைய கோயில் திருவிழாக்கள் - பழைய அரசியல் - பழைய யாழ்ப்பாணம் - எல்லாமே பழைய நினைவுகளாய் உதிரும்.

கோயில் திருவிழாக்களில் அந்தக் காலத்தில சின்ன மேளம், கூத்து நடக்குமாம். ஓவியக் கலையின் எழில் சிரிக்க திருவிழாக்காரர்கள் வானை முட்டும் 'சிகரங்களை' எழுப்புவார்கள். காவடி ஆட்டத்தில் மேனி சிலிர்க்கும். சின்ன வயதிலேயே மறைந்து போன தவில்மேதை தட்சணா மூர்த்தியின் மேளத்தைப்பற்றி அப்பா சொல்லுவார்.

பழைய தமிழ்க் கலைகளைப் பற்றியெல்லாம் விளக்கி - யாழ்ப்பாணத்தின் பெருமைகளைக் கூறிக்கொண்டே வரும் போது அப்பா, அவரைப்பெற்ற மண்ணோடு முழுமையாக ஒன்றிப் போவார்.

பொழுது போவதே தெரிவதில்லை.

அப்பாவோடு பிள்ளைகள் முற்றத்தில் உட்கார்ந்தால் அம்மா சமையலறைக்குப் போய்விடுவாள். சுடச் சுட அம்மா அவித்துக்கொண்டு வரும் பனங்கிழங்கை, அப்பாவோடு முற்றத்தில் உட்கார்ந்து சாப்பிடும் இன்பமே தனி!

நவசோதி 26 வயது ஆகியும் இன்னும் குழந்தையாகவே இருந்தாள்.

விளக்கை அணைத்துப் படுக்கைக்குப் போனால்கூட அம்மாவுக்குப் பக்கத்திலேயே சுருண்டு கொள்வது வழக்க மாகிவிட்டது.

எல்லோரும் கலகலப்பாகவே இருந்தார்கள்.

ஆனால்......

அம்மாவுக்கு எப்போதும் கவலைதான்.

நவசோதியின் திருமணத்தை நடத்துவது எப்படி? தங் கச்சிக்கு வயது வேறு ஏறிக்கொண்டு போகிறது. பிள்ளை களைப்பற்றியே இரவும் பகலும் அம்மா பேசிக்கொண்டி ருப்பாள்.

சீதனக் கொடுமையால் யாழ்ப்பாணம் அழுகிக் கிடக் கிறது எத்தனையோ பெண்கள் நாற்பது - நாற்பத்தைந்து வயதுவரை திருமணத்துக்காகக் காத்திருக்கிறார்கள். இதற் கெல்லாம் ஒரு முடிவே வராதா?

சொக்கலிங்கம் சொல்லுவார்:

"இப்ப இருக்கிற சமுதாய அமைப்பே மாறவேணும். விடுதலைப் புலிகள் வித்தியாசமா சிந்திக்கினம். பெடிக ளின்ர ஆட்சி வந்தால்தான் எல்லாமே மாறும்."

ஆம்!

விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் நெஞ்சில் பெரிய நம்பிக்கையை விதைத்திருந்தார்கள்.

சிங்கள ஏகாதிபத்தியத்திடமிருந்து மட்டுமல்ல - தமிழீ ழத்தில் காலங் காலமாக ஊறிய சாதிக் கொடுமை - சீத னம் - ஏற்றத்தாழ்வு - முதலாளித்துவத்தின் மூலதன முடக்கங்கள் - அனைத்திலும் இருந்தே தமிழீழத்துக்கு விடுதலை தேடும் இயக்கமாகப் புலிகள் அமைப்பு விளங் கிற்று.

பிரபாகரன் தமிழீழத்தின் புதிய வழிகாட்டி ஆனார்.

நஞ்சைச் சாப்பிடும் இளைஞர்கள் பிறந்தார்கள்.

ஓ!

புலிகளின் தியாகம் எத்தனை பெரியது!

வீட்டு முற்றத்தில் - இரவில் உட்கார்ந்து பேசும் அந்த மறக்கமுடியாத பொழுதுகளில் - ஒரு முறை சொக்கலிங்கம் சொன்னாரர் -

" குழந்தைகள், மனைவி எல்லோரையும் தவிக்கவிட்டு இளங்கோ என்ற விடுதலைப் புலி, வெருகல் ஆற்றில் சிங்களப் படைகளோடு மோதிச் செத்துப் போனானாம்......"

நவசோதிக்குத் தொண்டை அடைத்தது. அவள் கேட்டாள் -

" பிள்ளைகளை விட்டுப்போட்டு அப்பா சாகிறது எவ்வளவு கொடுமை...... சிங்களவனுகளின்ர இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முடிவே இல்லையா?"

திடீரென்று -

ஒருநாள், ஏதோ ஒரு முடிவு வந்தாற் போலத்தான் தோன்றிற்று.

வடமராட்சியைச் சிங்களப் போர் விமானங்கள் தாக்கியதைத் தொடர்ந்து - இந்தியப் போர் விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகளைப் போட்ட போது, சிங்களவனின் கொடுமைகளுக்கு ஒரு முடிவு வந்துவிட்டதாகவே மக்கள் எண்ணினார்கள்.

" இந்தியா வாழ்க!" என்று யாழ்ப்பாணத் தெருக்களில் முழக்கங்கள் எழுந்தன.

பின்பு -

'ஜீப்' வண்டிகளிலும் 'ட்றக்' வண்டிகளிலும் வெள்ளைக் கொடிகளோடு இந்தியப்படை யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்தபோது, மக்கள் நெஞ்சம் கூத்தாடிற்று.

புலிகளுக்கு உறுதுணையாக இந்தியப்படை வருகிறது என்று மக்கள் பூரித்தார்கள்.

ஆனால் -

எத்தனை விரைவில் தமிழீழ மக்களை 'ராஜீவ் அரசு' ஏமாற்றி விட்டது.

சிங்களவர்களை விடக் கொடுமையாகத் தமிழர்களைக் கொல்லும் துப்பாக்கிகள் - ஷெல்கள் - டாங்கிகள் - குண்டுகள்......

தமிழீழத்தில்......

மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்ததுபோல்.....

நவசோதி அழுதுகொண்டே இருந்தாள்.

ஆனைக்கோட்டையில் துப்பாக்கி வேட்டோசை இன்னும் அடங்கியதாய்த் தெரியவில்லை. எங்கோ 'ஷெல்' விழுந்து வெடித்ததில், சொக்கலிங்கத்தின் வீட்டு முற்றத்தில் முருங்கைமரம் குலுங்கிற்று. தூரத்தில் அழுகுரல்கள் எழுகின்றன. வானத்தில் ஒரு கொடிய 'ஹெலிகொப்ரர்' உறுமி வட்டமிட்டது. அடிக்கடி நாய்களின் கத்தல்கள்.

3 மணி ஆகிறது.

காலை 10 மணிக்குத் தண்ணீர் அள்ளப் போன ராசம்மா இன்னும் வரவில்லை.

"ராசம்மா... ராசம்மா..." என்று தலையில் அடித்துக்கொண்டே, அறையில்குறுக்கும் நெடுக்குமாக உலாத்திக்கொண்டிருந்தார் சொக்கலிங்கம்;

அவர் குரல் இறங்கிவிட்டது.

நவசோதியும் தங்கச்சியும் கதறி அழுவதைப் பார்த்து, "அழாதீங்கோ மக்காள்...... அம்மா வந்திருவா" என்று அழுது சொன்னார் அவர்.

நவசோதி தலையைச் சுவரில் அடித்துக்கொண்டாள்.

சொக்கலிங்கத்தால் அதற்கு மேலும் அங்கே நிற்க முடியவில்லை. விறுவிறென்று படலையைத் திறந்த

கொண்டு, ராசம்மாவைத் தேடி வெளியே கிளம்பினார் அவர்.

இரவு ஆயிற்று.

எதையும் செய்ய இலாதவளாக நவசோதி இருந்தாள்.

முருங்கை மரத்தில இரவில் தூங்கும் சேவல் பறந்து தன் வழக்கமான இருக்கையில் தங்கிற்று.

மணி 4, 5, 6 என்று காலம் கரைந்து இரவு ஆகிவிட்ட பின்பும், அம்மாவைத் தேடிப் போன அப்பா இன்னும் வரவில்லை.

மின்சாரம் இல்லாமல் இருண்டு கிடந்த யாழ்ப்பாணத் தின் வீடுகளில் எல்லாம், எண்ணெய் விளக்குகள் 'பளிச் பளிச்' என்று எரியத் தொடங்கின.

தங்கச்சிக்கு எந்த ஆறுதலும் சொல்ல முடியாமல் தவித்தாள் நவசோதி.

அம்மா காலையில் நறுக்கி சுளகில் வைத்துவிட்டுப் போன கத்தரிக்காய்த் துண்டுகள் காய்ந்துபோய்க் கிடந்தது, அவை இன்னும் கூடுதலாக - அழுத்தமாக - நினைவு படுத்தி நெஞ்சைக் குடைகின்றன.

துப்பாக்கி வேட்டோசை தொடர்ந்து கேட்டது. ஒவ் வொருகுண்டும் தன் நெஞ்சைத் துளைப்பதாகவே நவசோதி உணர்ந்தாள். அப்பா உட்கார்ந்து பேசும் முற்றம் அனா தையாகக் கிடக்கிறது. முழங்கால்களில் முகத்தைப் புதைத் துக்கொண்டு விம்மினாள் நவசோதி.

எப்போது காலை விடியும்?

உள்ளறையில் இருந்த பழைய மணிக்கூட்டின் ''டிக்டிக்'' ஓசை, சம்மட்டி அடியாய் தலையில் விழுகிறது.

அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

அறையில் உலாவிப் பார்த்தாள்; முற்றத்தில் வந்து நின்று, தெருவின் இருபுறமும் பார்த்தாள். மீண்டும் தலை

யைப் பொத்திப் பிடித்துக்கொண்டு முற்றத்தில் வந்து உட்கார்ந்தாள்.

ஓ !

எத்தனை கொடிய இரவு.

நெருப்பில் மனிதனைத் தோய்த்தெடுக்கும் கொடிய மணித்துளிகள்.

காலத்தின் ஓட்டத்தில் இரவு நகர்ந்தது. சாமக் கோழிகள் கூவின. வெளியே துப்பாக்கி வேட்டோசைகள் அடங்கி - கொஞ்சம் அமைதிகூட நிலவுவது போல் தோன்றிற்று.

பாதி மயங்கியவளாய் பாயில் கிடந்த தங்கச்சியை எழுப்பி, "இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிஞ்சிரும் தங்கச்சி" என்று சொன்னவள் திரும்பவும் தெருவுக்கு வந்து நின்றுகொண்டாள். யாராவது ஊர்க்காரர்களின் நடமாட்டம் இருந்தால் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் காலைக் குளிரில் அவள் உடல் படபட என்று நடுங்கிற்று

கொஞ்சம் கொஞ்சமாக இருள் விலகி - காக்கைகள் சிறகு தட்டிப் பறக்கின்றன. வேலி மூலையில் இரத்தச் சிவப்பாய் செம்பருத்திப் பூ விரிகிறது.

வெடித்துவிடும் போலிருந்த நெஞ்சைக் கைகளால் பொத்திப் பிடித்துக் கொண்டே தெருவில் இறங்கித் தோட்டக் காணியை நோக்கி நடந்தாள் நவசோதி.

நூறு, யார் தூரம் தான்......

என்ன கொடுமை !

தெருவிலேயே உறைந்துபோன இரத்தச் சேற்றில் பிணமாகக் கிடந்தார் சொக்கலிங்கம் துப்பாக்கிக் குண்டுகள் அவர் உடலைச் சல்லடை போட்டிருந்தன.

முகம் கன்னங்கரேலென்று......

"ஐயோ அப்பா !" என்று வானம் வெடிக்கக் கத்தினாள் நவசோதி

யாழ்ப்பாணத்தின் அழகிய கலைகளை நேசித்த - யாழ்ப் பாணத்தின் சமூகக் கேடுகளை வெறுத்த - ஒரு நல்ல யாழ்ப் பாணத்தானின் கதை முடிந்துவிட்டது!

அவர் காணத் துடித்த விடுதலை பெற்ற தமிழீழத் துக்கு, அவரும் பசளையோடு பசளையாக......

நவசோதி வெறிபிடித்தவளாய் அம்மாவைத் தேடித் தோட்டக் கிணற்றை நோக்கி ஓடினாள்.

அங்கே -

கிணற்றுக்குப் பக்கத்திலேயே மண்டை ஓடு சிதறி உருத்தெரியாமல் கிடந்தாள் அம்மா.

இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் ஏற்படுத்திய ''பேரமைதியில்'' இரண்டு தமிழுயிர்களும் இரண்டறக் கலந்துவிட்டன.

''அம்மா அம்மா!'' என்று பதறித் துடித்தாள் நவசோதி.

சேதி அறிந்து புலம்பி அடித்துக்கொண்டே ஓடிவந்த, தங்கச்சியைக் கட்டிப்பிடித்து, ''அம்மாவும் அப்பாவும் போற்றினம் தங்கச்சி!'' என்று நெஞ்சு வெடிக்கக்கத்தி னாள் அவள்.

உண்மைதான்.

சொக்கலிங்கமும் ராசம்மாவும் இறந்து பிணங்களாய்ப் போய்விட்டார்கள்.

ஆனால் -

நவசோதியும் தங்கச்சியும்......? ○

தமிழீழம்
பங்குனி 1989

அந்த இளமனங்களில் தோன்றிய வெறுப் புக் கோலங்கள்......... இந்த ஜன்மத்தில் மாறப் போவதில்லை.

அவர்களின் பகைவர்களை அவர்கள் மறக் கப் போவதும் இல்லை!

# வெறுப்புக் கோலங்கள்

பெரியவன் அந்த உயர்ந்த பனையின் அரைவாசிக்கு ஏறிவிட்டான். முன்னால் தெரிந்த காட்டுப் பிரதேசம், காலை நேரத்தில் மிக அழகாகவே இருந்தது. ஆனால் அழகை ரசித்துக் கொண்டிருக்க அவனால் முடியாது. தொடர்ந்து ஏறினான். அப்பனையின் முக்கால் பங்கைத் தாண்டிய பின், ஒருமுறை திரும்பிப் பார்த்தான். தூரத்தில் அந்த வயல்வெளிகளைத் தாண்டி பெரிய வெளியில், பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் தெரிந் தது; அதற்குப் பின் இருந்த நந்திக் கடலும் நன்றாகவே தெரிந்தது. எப்பொழுதுமே உயரத்தில் இருந்து பார்க்கை யில் உண்மையையும் முழுமையையும் காணலாம் என எண்ணிக்கொண்டு, தொடர்ந்து ஏறினான்.

பெரியவனுக்கு இப்பொழுதுதான் பதினைந்து வயதாகிறது. ஆனால் அதற்கிடையில் அவனை நம்பி நாலு தம்பி, தங்கைகள் வீட்டில் காத்திருக்கிறார்கள். அவன் இன்று கள்ளு இறக்காவிடின் அனைவரும் பட்டினிதான். அப்பொழுதுதான் நாலு ஐந்து வெடிச்சத்தங்கள் கேட்டன. 'வந்திட்டாங்கள், துலைந்தது! இண்டைக்கு ஆர் ஆரோ தெரியேலை' என நினைத்தபடியே, திரும்பிப்பார்த்தான். பாடசாலைக்குள் அந்தப் பச்சைப்பேய்கள் தெரிந்தன. சீக்கியர்கள்தான் வந்திருக்கிறாங்கள். தலைப்பாகைகள் தெரிகின்றன, 'இப்ப இறங்கிப்போனால் இவங்களிட்ட அடிவாங்க வேண்டும்; பத்து நாளைக்கு சீவ ஏலாது. வீட்டிலயும் பட்டினிதான் கிடக்கவேணும்' என எண்ணிய படியே, மரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவனது சிந்தனைகள் கடந்த காலத்தில் இருந்தன.

அப்பாவையும், அம்மாவையும் இவங்கள்தான் பிடித்தாங்கள். ஒரு வருசமாகப்போகுது. எங்கேயோ தெரியவில்லை, இந்தியப் படையின்ர எல்லா முகாமிலயும் போய்க் கேட்டாச்சு. முல்லைத்தீவில, வவுனியாவில, திருகோணமலையில, பலாலியில......ஒரு இடமும் இல்லையாம் தாங்கள் பிடிக்கேலயாம். சீ இவங்கட நாற்றம் பிடிச்ச படைமுகாமுக்கை கைகளும் கால்களும் கட்டுப்பட்டு அதுகள் பாவம் என்ன சித்திரவதை அனுபவிக்குதுகளோ! யாருக்குத் தெரியும்? பெண்கள் என்றாலே நாயாக அலையும் இந்த நாய்கள் என்ன பாடு படுத்துதுகளோ. அவையோடபோன, என்ரை கடைசித் தம்பியையும் தங்கச்சியையும், அம்மாவோடதான் விட்டாங்களோ தெரியாது. அதுகள் கைக்குழந்தைகள். அன்றுகூட குழந்தையளுக்கு கடுமையான சுகமில்லையெண்டுதான் மருந்தெடுக்கப் போனதுகள். வற்றாப்பளை அம்மன் கோயில் கோபுரத்தைப் பார்த்தபடியே! "'அம்மாளாச்சி நீதான் அதுகளைக் காப்பாற்றவேண்டும்'" எனசற்று வாய்விட்டே உரத்துக் கூறினான். அடுத்த கணம் தவறுவிட்டவன்போல சலித்தபடியே 'அம்மாளாச்சி!

உன்னால உன்ரை கோயிலுக்குள் அகதிகளாக தஞ்சமடைந்தவர்களையே காப்பாற்றமுடியேல. நீ எப்படி என்ரை அப்பாவையும் அம்மாவையும் காப்பாற்றப் போகிறாய்? உன்ரை கோயிலுக்கு உள்ளதானே ஆறுமுகம்வாத்தியாரும் இன்னும் ஆறு அப்பாவிகளும் ஷெல்விழுந்து செத்தவர்கள்!' என எண்ணியபடியே இறங்கிக்கொண்டிருந்தான். தூரத்தில் இந்தியப்படையினர் சென்று கொண்டிருந்தனர். அவர்களை நன்றாகப் பார்த்தான். 'அட, நடுவில செம்மறிமுத்தனும், ராசனும் போய்க்கொண்டிருக்கினம். ஊருக்கு உதவாத வேலையளைச் செய்திட்டு, ஈ பிக்கு ஓடினவங்கள். இப்ப வந்து தங்களுக்கு பிடிக்காதவங்களை எல்லாம், புலிகள் என இந்தியருக்கு காட்டிக் கொடுகிறாங்கள். இந்தியப் படைபோன பிறகு இவங்கள் என்ன செய்யப் போறாங்கள்? பார்ப்பம். நானே அடிச்சுக் கொல்லுறனோ இல்லையோ பாரன்.' என எண்ணியபடியே நடந்தான்.

* * *

1987 மார்கழி. முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியப் படையினர் தங்களின் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இடைவிடாத ஷெல் தாக்குதல்கள், கொடூரக்கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் தொடர்ந்து கொண்டிந்தன. அமைதிகாக்கும் படை ஊரை அழித்துக்கொண்டிருந்தது - கொடுமையாக, மிகக் கொடுமையாக அழித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் ஒரு நாள்......

இரத்தினத்தின்ர கடைசிப் பிள்ளைகள் இரண்டும் நோய்ப்படுக்கையில் கிடந்தனர். தேவராசா வைத்தியரும் கைவிரிச்சுப் போட்டார். 'ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும்' அந்த ஓலைக் குடிசையின் திண்ணையிலிருந்து இரத்தினம் சிந்தித்துக்கொண்டிருந்தான். முப்பத்தியேழு வயதிலும் அவனது இரும்புத்தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனது மனைவி, தனது பிள்ளைகளின் தலைமாட்டிலி

ருந்து அழுதுகொண்டிருந்தாள். முப்பத்திநான்கு வயதிற்குள் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் போட்ட அவளால், அந்த நிலைமையைத் தாங்க முடியவில்லை. அவள் தனது கணவனிடம் கூறினாள்.

''வாப்பா !போவம், அவங்கள் சுட்டாப் பரவாயில்லை; என்ர கண்ணுக்கு முன்னால என்ர பிள்ளைகள் சாவதை பார்த்துக் கொண்டிருக்க என்னால ஏலாது.''

இரத்தினம் நிமிர்ந்தபடியே கூறினான். ''நான் கொண்டு போய்ட்டுவாறன்.''

''ஓ, நீ செத்த பிறகு நான் உயிரோட இருப்பன் என்று நினைக்கிறாயா! நானும்வாறன்'' என்றபடியே வெளிக்கிட்டாள் அவள்.

பெரியவன் சமையற்கட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி அந்தச் சின்னஞ் சிறுசுகள் ஐந்தும் ஒட்டியிருந்தன. தலைக்கு மேலாகச் செல்லும் ஒவ்வொரு ஷெல்லும் சற்று தள்ளி விழுந்து அதிரும்பொழுது, அதுகள் அலறியபடியே அவனைக் கட்டிப் பிடித்தன. பெரியவன் தூரத்தில் தெரியும் காட்டை வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். அவனது தாயார் கூறினாள் - ''தம்பி பெரியவன், அந்த சிவப்புச் சேலையையும், சட்டையையும் எடடா, ஆஸ்பத்திரியில நிக்கவேண்டி வந்தாலும் வரும்.''

அவர்கள் புறப்பட்டனர். இரத்தினம் தனது மகன் பெரியவனை அழைத்தான்.

''தம்பி பெரியவன், தம்பி தங்கச்சிகளை நல்லா பார்த்துக்கொள்ராசா. நாங்கள் வந்திடுவம்; ஏதும் பிரச்சனை எண்டால் அம்மம்மா வீட்ட போங்கோ''

இரத்தினம், ஒரு கணம் பிள்ளைகளை ஏக்கத்துடன் பார்த்தான்.

அவர்கள் வற்றாப்பளைச் சந்திக்கு வந்தனர். ஊர் அடங்கி இருந்தது. விடிந்து பத்து மணி கூட ஆகவில்லை.

மூன்றாம் கட்டையை நோக்கி நடந்தனர். பெரும் வீதியைத்தாண்டி வயல்வெளியில் வந்துகொண்டிருந்தனர். தூரத்தில் முல்லைத்தீவு பிரதான வீதியில் மஞ்சள் பாலம் தெரிந்தது. இருவரும் திரும்பிப்பார்த்தனர். வற்றாப்பளை அம்மன் கோயில் நன்றாய்த் தெரிந்தது. 'அம்மாளாச்சி, நீதான் காப்பாற்றவேண்டும்.' அவர்களது தலைக்கு மேலாக ஷெல்கள் சென்றன. தூரத்தில் துப்பாக்கி வெடிகளும் கேட்டன.

''இவங்கள் ஏன் நிழலைக்கண்டெல்லாம் பயப்படுறாங்கள். 'புல் பூண்டெல்லாம் புலிகளோ இவங்களுக்கு! உலகத்தில் புலிகளைத் தவிர வேற உயிர்களே இல்லையோ? ஏன் இப்பிடிச் செய்கிறாங்கள்'' என்றாள் இரத்தினத்தின் மனைவி.

''இவையள் புலிகளையும் பிடிக்கப் போறதில்லை எலிகளையும் பிடிக்கப் போறதில்லை. எங்களைப் போன்ற அப்பாவிகளைத்தான் பிடிப்பாங்கள். நீ வேகமா நட'' என்றான் இரத்தினம்.

இரத்தினம், எப்பொழுதுமே, எவருக்குமே பயந்து நடப்பவனில்லை. சிறுவயது முதலே பனையேறி உரத்த உடம்பு. எந்நேரமும் பாளைக் கத்தியுடன் திரிவதால் அவனை எவருமே நெருங்குவதில்லை. ஆனால் இன்று இந்த அரக்கர்களின் துப்பாக்கிகளின் முன்... .. மூன்றாம் கட்டைச் சந்தி தெரிந்தது. திடீரென அவர்களை நோக்கி சில வெடிச்சத்தங்கள், ''கான்ட்ஸ் அப்' எனக் கத்திக் கொண்டே பற்றைகளுக்குள்ளிருந்து ஓடிவந்த இந்தியப் படையினர், அவர்களைச் சுற்றி நின்றனர்.

''ஐயா! ஆஸ்பத்திரிக்கு......''அவனது வயிற்றில் ஒரு உதை விழுந்தது. தொடர்ந்து பல உதைகள் அடிகள். அவனது தோளிலிருந்த குழந்தையை ஒருவன் பறித்தான். மேலும் பல உதைகள் அனுக்கு, புரியாத மொழியில் ஏசியபடியே விழுந்தன. நிமிர்ந்து பார்த்தான். ஒரு சீக்கிய

சிப்பாய் அவனது குழந்தையின் கழுத்தை முறித்துவிட்டுக் கீழே எறிந்தான்; வீரிட்டுக்கொண்டிருந்த குழந்தை அடங்கியது.

''ஐயா! என்ர குழந்தை''

மேலும் பல அடிகள், துப்பாக்கிகளின் அடிப்பாகங்கள் அவனது தலையில், முகத்தில் ......தள்ளாடியபடியே விழுந்தவன் மீண்டும் நிமிர்ந்து பார்த்தான். அவனது மனைவி சேலை அகற்றப்பட்டு, சட்டை கிழிக்கப்பட்டு, பத்து பதினைந்து இராணுவத்தினர் அவளைச் சுற்றி ஒரு சிப்பாயின் முரட்டுக் கரங்கள் அவளது பாவாடையை......

இரத்தினம் கிளர்ந்தெழுந்தான், முன்னால் நின்ற இருசிப்பாய்களும் சற்றுத் தள்ளிவிழுந்தனர். பின்னால் வந்தவனுக்கு ஒரு உதை. தனது மனைவியை நோக்கி நான்கு அடிகள்......ஒரு சிப்பாயின் எஸ். எம். ஜி. துப்பாக்கி ரவை முடியும்வரை இயங்கியது. இரத்த வெள்ளத்தில் அவன். தலை நிமிர்ந்தான், அவனது மனைவி சாறு பிழியப்பட்டு வெறும் சக்கையாகிக்கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த கைக்குழந்தை சற்றுத் தள்ளிக்கிடந்தது. அதன் கழுத்தில் ஒரு சிப்பாய் தனது ''பூட்ஸ்'' கால்களால் மிதித்து, அது இறந்த பின்பும் நசித்துக்கொண்டிருந்தான். 'இவர்கள் இதற்குப்பதில் சொல்ல வேண்டும். எத்தனை காலஞ் சென்றாலும் எனது பிள்ளைகள் இவர்களைப் பழிவாங்குவார்கள்.'

மேலும் இரண்டு ரவைகள் அவன் தலையில். இந்த மனிதர்களின் குரல்கள் அந்த மிருகங்களுக்கு விளங்கவில்லை.

* * *

ஒரு வருடத்தின் பின்பு.........

மூன்றாம் கட்டை இந்தியப்படை முகாமிற்கு அருகில் இருந்த அந்த பற்றைக் காட்டுக்குள் எவருமே போவதில்லை. அப்படிச் சென்றால் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

ஆனால் அன்று மாலை சில மாடுகள் அதற்குள் சென்று விட்டன. மாடு மேய்க்கும் சிறுவன் மாடுகளை நோக்கி ஓடினான். மாடுகளை துரத்தியபடியே கீழே பார்த்தான், ஒரு மண்டையோடு; நிமிர்ந்தான், மரத்தில் முள்ளுக்கம்பி களால் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது ஒரு மனித எலும்புக்கூடு. பயத்தில் திரும்ப ஓடினான் - வழியில் ஒரு சிறிய மண்டையோடு. அதனைத்தாண்டி ஓடிக்கொண்டி ருந்தான் ஊரை நோக்கி. கிராமம் முழுவதும் கதை பரவியது.

பெரியவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்; ஒருவேளை எனது தாய் தந்தையருடையதோ?' மனம் இருப்புக் கொள்ளவில்லை. தனது சித்தப்பா, மாமாவினருடன் பேசினான். அவர்கள் நால்வரும் அவ்விடத்தை நோக்கிப் புறப்பட்டனர். இந்தியப் படையினர் எவ்வளவு பேரைக் கொன்றுவிட்டார்கள்! இது ஆற்ரை எலும்புக்கூடோ ? ஆருக்குத்தெரியும். கிராமத்தவரின் வழமைபோலவே, அவர்களின் மனமும் வற்றாப்பளை அம்மனை நினைத்துக் கொண்டது.

''இவர்களாக இருக்கக்கூடாது'' மாமா கூறினார்.

''அவங்கள் கண்டால் பிரச்சினை, சட்டைகளை கழட்டுங்கோ மாடு மேய்க்கிறவை மாதிரி நாலு பேரும் வெவ்வேறு திசையாலபோவம்.''

அவர்கள் அவ்விடத்தை அடைந்தனர். முதலில் அந்தச் சிறியதலையோடு; பின்பு மரத்தில் கட்டப்பட்டிருந்த மனித எலும்புக்கூடு ஆகியவை தெரிந்தன. மனித நேயத்தை மறந்த அந்த மிருகங்களின் கொடூரச் செயல், அவர்களின் மனங்களில் கொதிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

பெரியவன் சிறிது தள்ளி இருந்த பற்றைக்குள் குனிந்து பார்த்தான். மீண்டும் ஒரு மனித எலும்புக்கூடு. மனித உடல் உக்கிய பின்பும், நிலத்தில் புதைத்தும் புதையாமல் கிடக்கும் அந்த நீண்ட தலைமயிர்கள்; அது ஒரு பெண் என்

பதைக் காட்டியது. பெரியவன் அருகில் இருந்த சிறிய மரத்தில் சாய்ந்தான். அவனது கண்களில் ஒரு பொலீத்தின் பை தெரிந்தது. மரத்தின் கிளைகளுக்கிடையில் செருகப்பட்டிருந்த அதை எடுத்துப் பிரித்தான். அந்தச் சிவப்புச் சேலையும், சட்டையும்! அது அவனுக்கு தெரிந்த சேலையும் சட்டையும், அவனது அம்மா புறப்படுகையில் அவன் கொடுத்துவிட்டது. கத்துவதற்கோ, அழுவதற்கோ தெரியாது அவன் வாயினைத் திறந்தான்.

அவனது வாயை மூடியபடியே மாமா கூறினார்.

"அது அம்மாதான்; தம்பி தங்கச்சியின்ர எலும்புக் கூடுகளும் இருக்கு. அழுவதால் பிரயோசனம் இல்லை, பின்பு நீ ஏதாவது செய்துகொள்! இவங்கட அநியாயத்தை நான் மறக்கமாட்டன் நீயும் ஒருபோதும் மறந்திடாதை."

அவர்கள் அப்பகுதி விறகுகளையும், கட்டைகளையும் குவித்தனர். நான்கு எலும்புக்கூடுகளையும் ஒன்றாகவே வைத்து, பெரியவனே தீயிட்டான். புகை வானத்திற்கு எழுந்தது. நான்கு தலையோடுகளுடனும் அவர்கள் நால்வரும் இப்பொழுது, துணிந்து நிமிர்ந்து நடந்தனர். அவர்களது மனங்களில், வெறுப்பு மண்டிக் கிடந்தது; வேதனை நிறைந்திருந்தது. இராணுவத்தினரால் என்ன செய்ய முடியும்? சுடமுடியும், அதைத் தவிர அவர்களால் என்னதான் செய்ய முடியும்? எழுந்த புகையை நோக்கி இந்தியப்படையினரின் ஷெல்கள் வந்து விழுந்தன. இந்த அடக்குமுறை இயந்திரங்கள் துப்பாக்கிகளை இயக்கியபடியே அவ்விடத்தை நோக்கி முன்னேறின.

பெரியவனது குடிசையில் அந்தக் கிராமமே கூடி இருந்தது. நான்கு தலையோடுகளும் அந்த மக்களுக்கு வேடிக்கையாகத் தெரியவில்லை; வேதனையை விதைத்துக் கொண்டிருந்தன. இதற்கு காரணமானவர்கள்மீது

வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன; அவர்களது கேவலமான அடிமை நிலையை உணர்த்திக் கொண்டிருந் தன. ஓரமாக நின்ற பெரியவனைச் சுற்றி அவனது தம்பி தங்கைகள் நின்றனர். சின்னத்தங்கச்சி கேட்டாள், ''அப்பா, அம்மாவை ஆமிக்காரங்கள் சுட்டுப் போட்டாங்களோ?'' என்று.

பெரியவன் ''ஆமாம்'' என்று தலையை ஆட்டினான். அவர்கள் ஆறுபேரும் அமைதியாக அழுதுகொண்டு இருந் தார்கள். ஆனால்! அவர்களின் மனங்கள் எரிமலையாகக் குமுறிக்கொண்டிருந்தன.

அந்த இளமனங்களில் தோன்றிய வெறுப்புக் கோலங் கள்...... இந்த ஜன்மத்தில் மாறப்போவதில்லை.

அவர்களின் பகைவர்களை அவர்கள் மறக்கப் போவ தும் இல்லை! ○

தமிழீழம்
மார்கழி 1989

''உன்னைப் பார்க்க கில்மனைப் போல் இருக்கிறது.'' அருகால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சில மாணவர்களுக்கு இந்த உரையாடல் கேட்கிறது.

அவர்கள் ரியூட்டரிக்குள் நுழைய செய்தி எங்கும் பரவுகின்றது.

# நிதானம்

யாழ். மாவட்டத்திலுள்ள தென்மராட்சிப் பகுதி......

வீதித்தடையுடன் கூடிய இந்திய ஆக்கிரமிப்பாளர் களின் காவல் அரண்......

அதற்கு அண்மையில் தனியார் கல்வி நிலையம் ஒன்று.

விடுதலைப் புலி ஒருவனின் துணிகரமான வேவுபார்க்கும் முயற்சி......

புயல் அடித்த பிரதேசத்தின் கொடுமையை விளக்கும் குறியீடு, உருக்குலைந்து மொட்டையாக நிற்கும் மரங்கள் தான்.

வறுமையில் உத்தரிக்கும் மக்களுக்கு எலும்பும், தோலும், ஒட்டிய வயிறும்தான் அடையாளம் காட்டும் குறியீடு.

ஆக்கிரமிக்கப்பட்ட தேசம் ஒன்றிற்கு இராணுவத் தடை யரண்களும், அதற்கூடாக நீட்டிய துப்பாக்கிகளும்தான் அடையாளம் காட்டும் குறியீடு.

அத்தகைய வீதித்தடை அரணில் இருந்து 500 யார் தூரத்தில், பிரதான வீதியில் சைக்கிள் ஒன்றுடன் விடு தலைப் புலி வீரன் ஒருவன் நிற்கிறான்.

வீதியில் செல்லும் மாணவர்கள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தனர். தங்களுக்குள் ஆளை ஆள் பார்த்துத் தமது அதிர்ச்சிகளைக் கண்களால் தெரிவித்தபடி செல் கின்றார்கள்.

ஆம்...... அப்பகுதி இந்திய இராணுவத்திற்குச் சிம்ம சொப்பனமாக இருந்துவருபவனும், அவர்களால் கடுமை யாகத் தேடப்பட்டு வருபவனுமாகிய ஒரு விடுதலைப் புலி உறுப்பினன் பிரதான வீதியில் நிற்கிறான்.

எமது மக்கள்தான் எமது பாதுகாப்பு, மறைவிடம் என உரத்துச் சொல்வதுபோல அந்த விடுதலைப் புலி நிமிர்ந்து நிற்கிறான்.

சைக்கிள் 'கரியரி'லிருந்த கொப்பிகளைக் கையில் எடுத்தபடி, மறைத்து வைத்திருந்த சயனைட் குப்பியைக் கைகளால் தடவி உறுதிசெய்துகொண்டு அந்த இளம் விடுதலைப் புலி, இராணுவக் காவல் அரண்களை நோக்கி நிதானமாகச் சைக்கிளைச் செலுத்துகிறான்.

''அடேய்...... இங்கவா...... ஒன் பேரென்ன ? ......'' ஒரு ஆக்கிரமிப்புக் குரல் அரைகுறையில் அவனை அழைக் கிறது.

''சிவகுமாரன்.''

பொய் சொல்லும்போதுகூட அந்த விடுதலைப் புலிக்கு, ஒரு முன்னோடிப் போராளியின் பெயர்தான் ஞாபகத்துக்கு வந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்

துக்கு 'சயனைட்' என்ற மாபெரும் ஆயுதத்தை அறிமுகம் செய்த ஒரு மதிப்பிற்குரிய போராளியின் பெயர்தான் அது. இந்த அந்நியனுக்கு அது எங்கே புரியப்போகிறது ?

''உன்ர இடம் எது?''

''மீசாலை''

''இப்ப எங்க போறாய்?''

''படிக்க ரியூசனுக்கு''

''எங்கே ரியூசன்?''

''அந்த வீடுதான்''

சந்தியிலிருந்து 50 யார் தூரத்தில் இருந்த ஒரு 'ரியூட்டரி'யைக் காட்டுகிறான் கில்மன். அந்த இராணுவச் சிப்பாய்க்கு கில்மன்மீது சந்தேகம் வந்தது. தனது சகாக்கள் இருவரை அருகில் அழைத்தான்.

மூவருமாக கில்மனைக் கேள்விகளால் துளைக்க ஆரம்பித்தனர். கேள்விகள் தொடர்ந்தன. அடுத்தடுத்து சில கேள்விகளின் பின்,

''உனக்கு கில்மனைத் தெரியுமா ?''

ஒருவன் நேரடியாகவே கேட்கிறான்.

''தெரியாது...... ''

உடல் ஒருகணம் புல்லரிக்கிறது.

உன்னைப் பார்க்க கில்மனைப் போல் இருக்கிறது. ''

அருகால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சில மாணவர்களுக்கு இந்த உரையாடல் கேட்கிறது.

அவர்கள் ரியூட்டரிக்குள் நுழைய செய்தி எங்கும் பரவுகிறது.

''பாஸ்ரர் ! சந்தியில் ஆமிக்காரங்கள் கில்மனைப் புடிச்சு வச்சிருக்கிறாங்கள். தான் ரியூசனுக்குப் போறன் என்று கில்மன் சொல்லிக்கொண்டு இருக்கிறான். எண்டாலும் அவங்கள் விடமாட்டாங்கள் போலக்கிடக்கு. ''

மாணவர்கள் - விடுதலைப் புலிகளில் அன்புமிக்கவர்கள் - துடிக்கின்றார்கள்.

ஆசிரியர் - விடுதலை உணர்வு மிக்கவர் - சிந்திக்கிறார்.

ஒரு விடுதலைப் புலியைப் பாதுகாக்க அந்த ஆசிரியரின் மூளை வேகமாக வேலை செய்கிறது. மாணவர்களுக்கு ஆசிரியர் வழியொன்று சொல்லிக்கொடுத்தார்.

சில மாணவர்கள் வீதிக்கு விரைந்தார்கள். உரத்த குரலில், ''மாஸ்ரர் வந்திட்டார்......வகுப்பு துவங்கப் போகுது ... ! கெதியாய் வா...... !''

ஆக்கிரமிப்பாளனின் சந்தேகம் ஆட்டம் காண்கிறது...... அந்த மாணவர்களையும் கில்மனையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு ''சரி ஓடு ஓடு'' என்று கில்மனைத் தள்ளிவிடுகிறான்.

கில்மன் ஆறுதலாக நடந்து வந்து ரியூட்டரிக்குள் நுழைந்தான். மாணவர்களின் முகமெல்லாம் ஒரே மகிழ்ச்சி.

''அண்ணை ! ஏன் நீங்கள் உந்த றோ......ட்......டா ......''மாணவர்களில் ஒருவன் தனது மனத்துள் எழுந்த கேள்வி ஒன்றுக்குப் பதில்காணத் துடித்தான்.

ஆனால், அடுத்த கணம் தனது கேள்விக்கான பதில் அவனது சிந்தனையில் தட்டுப்பட கேள்வியை அரைகுறையில் நிறுத்துகிறான்.

''தம்பி! அதால போனால் அடுத்த ஒழுங்கைக்குப் போகலாம்.''

பின்வேலியில் அவசரகாலத் தேவைக்காகப் பிரித்து விடப்பட்டிருந்த சிறிய 'பொட்டை' ஆசிரியர் சுட்டிக் காட்டினார் அதனை நோக்கி விடுதலைப் புலி நடக்க......

ஒரு கடமையை முடித்த திருப்தியில் மாணவர்கள் நிமிர்ந்து இருக்க, பாடம் ஆரம்பமாயிற்று.

தமிழர்களின் வரலாற்றில் எழுச்சிக் காலம் என்று அழைக்கப்படுவது சோழ மன்னர்களின் காலமே. அந்த சோழ சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, சுமார் 800 - 900 வருடங்களுக்குப் பின்னர், இப்போதுதான் மீண்டும் அந்த எழுச்சிக் காலம்...... !

குனிந்த ஆசிரியர் அந்த விடுதலைப் புலி சென்ற திசையை ஊடுருவிப் பார்க்கிறார். படலையைக் கடந்த அந்த இளம் போராளி, பாதுகாப்பாக வைத்திருந்த சயனைட் குப்பியை எடுத்துக் கழுத்தில் அணிந்து கொண்டு......

சற்றுமுன் கண்களால் படமாக்கிக்கொண்ட ஆக்கிரமிப்பாளர்களின் காவல் அரண்களின் வரைபடத்தைக் கடதாசித் தாளில் வரைவதற்காக, விரைந்து நடக்கிறான் !

உணர்வு

பஞ்சாட்சரத்துக்கு அம்மன்கோயிலில் குருக்கள் வேலை. பிள்ளைகள் யாரையாவது படை ஆட்கள் பிடித்துக்கொண்டு போனால் தாய்மார்கள் அழுது அடித்துக்கொண்டு கோயிலுக்கு ஓடுவார்கள். எத்தனை பூக்களை அம்மனுக்குப் போட்டிருக்கிறான்.....! எல்லோரையும் காப்பாற்ற அம்மனுக்கு அர்ச்சனை செய்த பஞ்சாட்சரத்துக்கே இன்று கதை முடிந்து விட்டது.

# எங்கள் கடல் செந்நீராகிறது....

மருமகன் பஞ்சாட்சரத்தின் நெஞ்சில துப்பாக்கியை வைத்து வெறியர்கள் சுடுவதைப் பார்த்த புவனேசுவரி, கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

''அவன் அம்மன் கோயில் குருக்கள் பாருங்கோ...... அவனைச் சுடாதேயுங்கோ'' என்று கெஞ்சியும் பலனில்லாமல் போயிற்று. கணவனை இழந்தவளாய். ''அம்மா !'' என்று கதறிக்கொண்டே தன் தோளில் சாய்ந்த மகள் ஜெயந்தியைக் கையால் பற்றிப் பிடித்தபடி, வானம் இடியக் கத்தினாள் அவள்.

மாரிகாலக் கொடுங்காற்றில் கடலின் அலைகள் வெறி பிடித்துக் கூத்தாடின. அமைதியான கீரிமலைக் கடற்கரையில், 6 - 11 - 87 காலை 8 மணிக்கெல்லாம் அந்த வெறிக் கும்பலின் மனித வேட்டை தொடங்கிற்று.

ஜெயந்தியின் தங்கச்சி வசந்தி நடுங்கி ஒடுங்கிப் போனாள். சில்லென்ற குளிர்காற்றில்கூட உடல் வியர்த் துக் கொட்டியது. அவர்களை வளைத்து ஐம்பது இந்தி யப்படை முரடர்கள்.

தாயையும் - அந்த இரண்டு பெண்பிள்ளைகளையும், வீட்டுக்குச் செல்லுமாறு ஒரு வெறியன் கொச்சை ஆங்கி லத்தில் கத்தினான்.

அவர்கள் வீடு நோக்கி நடந்தார்கள்.

கூடவே அந்த முரட்டுக் கும்பலும்......

கீரிமலைக் கேணியைத் தெரியாதவர்கள் இல்லை. கேணியாலேயே கீரிமலைக்குப் புகழ். யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் இந்தக் கேணியில் நீராட மக்கள் வருகிறார்கள்.

ஆங்காங்கே நெடிய பனைமரங்கள். ஒரு பக்கம் நீலம் காட்டும் கடல். கீரிமலை அழகான ஊர்.

புவனேசுவரியின் வீடு கடலின் ஓரத்தில்......கீரிமலை யில்தான். செல்வாக்கான குடும்பம். புவனேசுவரி படித்த வள். விதவை. நாற்பத்தெட்டு வயது ஆகிறது, இரண்டு பெண்பிள்ளைகள் - மூத்தவள் ஜெயந்திக்கு 22 வயது. வசந்தி இரண்டு வயது இளையவள். ஒரு மகன் இருக்கி றான் - உடல் ஊனம்..... மூளை வளர்ச்சி இல்லை. எதை யாவது புலம்பிக்கொண்டிருப்பான். ஜெயந்திக்கு அண்மை யில்தான் திருமணமாகி......அதற்குள்......

பஞ்சாட்சரத்துக்கு அம்மன்கோயிலில் குருக்கள் வேலை. பிள்ளைகள் யாரையாவது படை ஆட்கள் பிடித்துக் கொண்டு போனால் தாய்மார்கள் அழுது அடித்துக் கொண்டு கோயிலுக்கு ஓடுவார்கள். எத்தனை பூக்களை அம்மனுக்குப் போட்டிருக்கிறான்......! எல்லோரையும் காப்பாற்ற அம்மனுக்கு அர்ச்சனை செய்த பஞ்சாட்சரத் துக்கே இன்று கதை முடிந்துவிட்டது.

ஜெயந்தி அழுதுகொண்டே படைக்கும்பலுக்கு நடுவில் நடந்தாள். புவனேசுவரிக்குத் தலையே வெடித்துவிடும் போல் இருந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முந்திய நினைவு.

1958 ஆம் ஆண்டு, சிங்கள இனவெறியர்கள் தமிழ்க் குழந்தைகளைக் கொதிக்கும் 'தார்ப் பீப்பா' க்களில் போட்டுக் கொன்றதும், வீடு வீடாகத் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்ததும் கொடிய சேதிகளாகிக் கொண்டிருந்தபோது புவனேசுவரிக்குப் பதினெட்டு வயதுதான்.

வரலாற்றில் தமிழீழத்தின் தன்மான உணர்வைத் தூண்டிவிட்ட முதல் நிகழ்வுகள் அவை.

கொடுமைக்கு வேர் முளைக்கத் தொடங்கிய காலம்.

நன்றாக நினைவிருக்கிறது.

சிறீலங்காவின் தலைநகரான கொழும்புக்குத் தெற்கே பாணந்துறை என்ற சிங்கள ஊரில், ஒரு பழைய சைவக் கோயிலின் குருக்களைச் சிங்கள வெறியர்கள் மூலஸ்தானத்தில் வைத்தே எண்ணெய் ஊற்றி, உயிரோடு எரித்துச் சாம்பலாக்கினார்கள்.

''கடவுளே இல்லையா?'' என்று அப்போது புவனேசுவரி வீட்டில் எல்லோருமே பேசிக்கொண்டது இன்றும் அவள் நினைவில் அழியவில்லை.

தீ வைத்தவர்கள் - பௌத்த சிங்கள வெறியர்கள்.

ஆனால் -

முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு இன்று......இந்து சமயத்தின் பாதுகாவலர்கள் அல்லவா அம்மன் கோயில் குருக்களைப் பிணமாக்கிப் போட்டிருக்கிறார்கள்.

புவனேசுவரியின் நெஞ்சில் மருமகன் பஞ்சாட்சரத்தின் நினைவு அலையாப் புரண்டது......

இந்தியாவுக்குப் போகவேண்டும் என்று அவனுக்குச் சரியான ஆசை. வேதங்களையும், உபநிடதங்களையும் ஆக்கிய மகான்கள் - நாயன்மார்கள் - ஆழ்வார்கள், ஆதிசங்கரர் பகவான் இராமகிருஷ்ணர் - விவேகானந்தர் - ரமண மகரிஷி ஆகியோரை எல்லாம் ஈன்ற இந்து மதத்தின் அந்தப் புனித மண்ணை மிதித்துவிடவேண்டும் என்று, ஆவலாக இருந்தான்......

ஆனால் -

அந்த 'இந்து மகா பூமி' யே இன்று அவனைக் கொன்றுவிட்டது !

பாணந்துறைக் கோயில் குருக்களை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கொன்ற சிங்கள பௌத்த வெறியர்களிடமிருந்து தமிழர்களைக் காப்பாற்ற வந்தவர்களாம் - பஞ்சாட்சரக் குருக்களைக் கொன்ற பாரதத்தின் இந்துமதப் புண்ணியவான்கள்......!

புவனேசுவரி பற்களைக் கடித்துக்கொண்டாள்.

புவனேசுவரியின் கூந்தலைப் பிடித்து இழுத்து, வீட்டினுள்ளே முரட்டுத்தனமாகத் தள்ளினான் ஓர் இரக்கமற்ற தடியன்.

இரண்டு பெண்களும் நடுங்கிக்கொண்டே பின்னால் போனார்கள்.

வாசலில் மன வளர்ச்சியற்ற அந்த ஊனப்பிள்ளை கைகளைத் தட்டித் தன்பாட்டில் சிரித்துக்கொண்டிருந்தான். அந்த அப்பாவியை ஒரு 'விலங்கு' இரும்புச் சப்பாத்தால் உதைத்துக் கீழே தள்ளிற்று.

''நகைகளை எங்கே வைத்திருக்கிறாய் - எடு!''

அரைகுறை ஆங்கிலத்தில் புவனேசுவரியை நோக்கி ஓர் அதட்டல். நல்ல ஆங்கிலத்திலேயே அவள் பதில் சொன்னாள்.

''நாங்கள் பெரிய பணக்காரர்களல்ல, எங்களிடம் அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை.

அவர்கள் " ஓ! " என்று சிரித்தார்கள்

வீடு அமளிதுமளி ஆயிற்று. அலுமாரி - பெட்டி - மூட்டை முடிச்சுகளெல்லாம் உடைந்து, கிழிந்து சிதறின.

புனித இந்தியப்படையின் பைகளில் பாதி நிரம் பிற்று......

ஊரில் எப்போதுமே புவனேசுவரிக்கு மரியாதை உண்டு, செல்வாக்கு உண்டு. கணவன் உயிரோடு இருந்தபோது - ஜெயந்தியும் வசந்தியும் சின்னஞ் சிறிசுகளாக இருந்த காலத்தில் - சேர்த்து வைத்ததில் ஏதோ கொஞ்சம் வசதி யும் உண்டு.

கணவன் இறந்த பின்பு காலத்தை எப்படியோ ஓட்டி விட்டாள். புவனேஸ்வரியின் வீடு ஓரளவு மகிழ்ச்சியா கவே இருந்தது.

சிங்கள வெறியர்கள் காலத்தில் பலாலி முகாமிலி ருந்து வீசப்படும் ' ஷெல் ' குண்டுகளின் இடி ஓசை அடிக் கடி கேட்கும்.

ஆனால் -

சிங்களப் படை நகருக்குள் நுழைய விடுதலைப் புலி கள் விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை யாழ்ப்பாண மக்கள் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்ததால், யாரும், அந்த ஓசையைப் பொருட்படுத்துவதில்லை.

பக்கத்து வீட்டுத் தம்பித்துரை சேதி சேதியாகக் கொண்டு வருவார். நல்ல மனிதர். எல்லோரும் அவரை வளைத்து உட்கார்ந்துகொள்வார்கள். வீடு நிறைந்தாற் போல் இருக்கும்.

தம்பித்துரை - தம்பித்துரையின் மனைவி சிறீதேவி - பெண் பிள்ளைகள் சிவாஜினி, சுபாஜினி, இரண்டு பெடி யன்கள் தவநேசன், கோணேஸ், அவர்களுடைய கைக் குழந்தை எல்லோரையுமே புவனேஸ்வரி வீட்டில் பார்க் கலாம்.

இரண்டு குடும்பங்களும் ஒரேவீடு மாதிரித்தான்.

ஜெயந்தி அக்காவோடும், வசந்தி அக்காவோடும் தம்பித்துரையின் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம்.. புவனேசுவரியும், சிறீதேவியும் முன்கூடத்தில் பேசிக்கொண்டிருப்பார்கள். தம்பித்துரையின் கைக்குழந்தை ஊனப் பிள்ளைக்குப் பக்கத்தில் போய் விளையாடும். கோணேசும், தவநேசனும் வசந்தி அக்காவோடு கீரிமலைக் கடற்கரையைச் சுற்றி வருவார்கள்......

பஞ்சாட்சரம் அம்மன் கோயில் - பூசை முடிந்து வீட்டுக்கு வந்தால், ஜெயந்திக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து விடுவான். கீரையை அரிந்துகொண்டே அவனோடு ஜெயந்தி இனிக்க இனிக்கப் பேசுவது, புவனேஸ்வரியின் மனதை நிறைக்கும்.

'' நீ கீரையை வெட்டுறதைப் பார்த்தாலே சாப்பிட்ட மாதிரி இருக்குது ஜெயந்தி '' என்பான் பஞ்சாட்சரம்.

'' சுலோகம் போடுற வேலையை அம்மனோட வச்சுக் கொள்ளுங்கோ......'' என்று கூறிக் கிளுக்கென்று சிரிப்பாள் ஜெயந்தி.

மகிழ்ச்சியான காலங்கள்.

இந்தியப்படை நுழைகின்ற வரை......

6. 11. 88 காலையில்தான், புவனேசுவரியின் வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு அவர்கள் உள்ளே பாய்ந்தார்கள்.

புவனேசுவரியையும் - இரண்டு பெண்களையும் - பஞ்சாட்சரத்தையும் அந்தக் கும்பல் கடற்கரைக்கு இழுத்துக்கொண்டு போயிற்று.

கடற்கரையில் -

பஞ்சாட்சரத்தின் உயிரை வாங்கிவிட்டு, புவனேசுவரியின் வீட்டைக் கொள்ளையிடத் திரும்பவும் அவளையும் பிள்ளைகளையும் துப்பாக்கி முனையில் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

இப்போது -

சுருட்டுவதையெல்லாம் சுருட்டி ஆயிற்று.

வெளியே தெருவில் ' ஜீப் ' வண்டியில் பறந்த வெள்ளைக் கொடியைக் கழற்றி - உள்ளே எதையோ மூடி மறைத்து முடிச்சுப் போட்டான் ஒருவன்.

ஒரு விதவையின் வீட்டை மொட்டை அடித்து முடித்த திருப்தி.

" இனி, கடற்கரைக்குப் போகலாம்......" என்று மீண்டும் கொச்சை ஆங்கிலத்தில் கத்திக்கொண்டே புவனேசுவரியின் தோளில் ஓங்கித் துப்பாக்கியால் அடித்தான் ஒரு முரட்டு ஆசாமி.

நடுங்கிக்கொண்டே கடற்கரையை நோக்கி அவர்கள் நடந்தார்கள்......

கடற்கரை நெருங்க நெருங்க - பஞ்சாட்சரம் சுருண்டு கிடப்பது தூரத்தில் தெரியத் தெரிய - ஜெயந்தி தாயின் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டு தேம்பினாள். சற்றுத் தள்ளி வேறு யாரோ விழுந்து கிடப்பது போலத் தோன்றியது. கூடிய எண்ணிக்கையில் இந்தியப் படைக் கும்பல் கடற்கரையில் குவிந்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பக்கத்தில் வந்து பார்த்தபோதுதான் தெரிந்தது ... அது......அது தம்பித்துரையின் பிணம்......

சிறீதேவி கைக்குழந்தையோடு வெறி பிடித்தவளாய்க் கதறிக்கொண்டிருந்தாள். சிவாஜினியும், சுபாஜினியும் " அப்பா, அப்பா ! " என்று புழுவாய்த் துடிக்கிறார்கள். கோணேசும், தவனேசனும் தம்பித்துரையின் கையைப் பிடித்து இழுப்பதும்...... அழுவதுமாய்......

ஒ! எத்தனை கொடிய உலகம்! ஹிட்லர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறானா! நீதி எங்கே? வெறித்தனத்துக்கு எல்லையே இல்லையா?

தன் கண்களுக்கு முன்னாலேயே ஜெயந்தியையும், வசந்தியையும் முரட்டுத்தனமாகச் சேலை களைந்து வெறியர்கள் நிர்வாணமாக்கிய போதும் - தாயாக அல்ல ஒரு குழந்தையாக முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குலுங்கி அழுதாள் புவனேசுவரி.

ஒரு முரடனின் இரும்புக் கைகள் ஜெயந்தியை ஆவேசமாகப்பற்றி இழுத்து எறிந்தன.

"போடி, உன் புருஷனைப் போய்த் தழுவு."

அதற்குள்......

ஜெயந்தியின் இரண்டு தொடைகளுக்கும் நடுவில் துப்பாக்கியை வைத்து இன்னொரு பாவி, தமிழனின் மானத்தையே சுடுவதுபோல......

பிணமாய்ச் சுருண்ட ஜெயந்தியின் மேல், "அக்கா" என்று கதறிக்கொண்டே ஓடிப்போய் விழுந்தாள் வசந்தி.

அவளுக்கும் அதே இடத்தில் துப்பாக்கிக் குண்டுகள்......

வசந்தியின் இரத்தம் சீறிப்பாய்ந்து புவனேசுவரியின் நெஞ்சில் அடித்தது. சின்னக் குழந்தையாக இருந்தபோது எந்த முலைகளால் அந்தப் பிள்ளைக்குப் பாலூட்டி இரத்தம் பாய்ச்சினாளோ - அதே இரத்தம் - இப்போது இவள் முலையை இடித்து, 'ஏனம்மா என்னைத் தமிழச்சியாக வளர்த்தாய்?' என்று நியாயம் கேட்கிறது.

புவனேசுவரி மயங்கி விழுந்தாள்.

கீரிமலைக் கடல் ஆவேசமாக இரைந்து கத்தியது. கரையின் நீள அலைகள் பிணங்களை நனைத்து மீள்கின்றன..... தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள்......

கண்களை மெதுவாகத் திறந்தபோது, அந்த மனித விலங்குகள் சிறீதேவியைச் சுட்டுப் பிணமாக வீழ்த்துவதையும் - அவள் கையிலிருந்து விழுந்த பிஞ்சுக் குழந்தை அலைக்கு நடுவில் "அம்மா......" என்று கத்துவதையும் - புவனேசுவரி கண்டாள்.

அடுத்த நொடியில் -

ஜெயந்தியும், வசந்தியும் கொல்லப்பட்டதுபோலவே தம்பித்துரையின் இரு பெண்பிள்ளைகளும் அதேவிதமாக நிர்வாணமாக்கப்பட்டு - அதேவிதமாக...... எத்தனை கொடிய நிகழ்வுகள்......!

இரண்டு துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து கேட்டன......புவனேசுவரி நிலத்தில் கிடந்தபடியே ஓரக் கண்களால் பார்த்தாள்......ஒன்று கோணேஸ் - அடுத்தது தவநேசன்.

புவனேசுவரி செத்தவள் போலவே படுத்துக் கிடந்தாள். தன்னை இந்தியப்படைக் கும்பல் மறந்துவிட்டது என்பதை அவளால் உணரமுடிந்தது. மணலில் ஏறும் கடல் அலையின் அசைவிக்கு ஏற்பத் தலையை ஆட்டியபடி தன்னையும் ஒரு சடலம் போலவே ஆக்கிக்கொண்டாள் அவள்.

காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அலைகளின் வெறித்தனமான இரைச்சலும் - இடையிடையே அந்தப் பிஞ்சுக் குழந்தையின் ஓலமும் கேட்டது. கொஞ்ச நேரத்தின் பின்பு......

மீண்டும் ஒரு துப்பாக்கி வேட்டோசை, குழந்தையின் அழுகை நின்றது. அதேவேளை அந்தப் பெரிய மனிதர்களின் சிரிப்பொலி...... 'ஜீப்' வண்டிகள், 'ட்றக்குகள்' முதலியவற்றின் கொடிய இரைச்சல் ...... அவர்கள் கடற்கரையை விட்டுச் செல்கிறார்கள்.

புவனேசுவரி இரவுவரை அப்படியே கிடந்தாள்...... அவளைத்தாண்டி - அந்தப் பிணங்களை நோக்கி - நண்டுகள் ஊர்கின்றன...... ○

தமிழீழம்
சித்திரை 1989

''என்ன படிக்கின்றாய்?'' கேள்வி தெறித்தது.

''இளநிலை வர்த்தகப் பட்டப் படிப்பு''

''உனது பாடத்திட்டத்தைச் சொல்?''

சொல்லி நான் முடிக்க, அவன் ஒரு சிறு இராஜநடை போட்டான். திருமபி மீண்டும், ''நான், நீ படிப்பதனை ஏற்றுக்கொள்கிறேன். உனது பட்டப்படிப்புக்கு முன்னால் புலியின் ஆயுதப் பயிற்சி பெற்றுக்கொண்டதனை ஏன் மறைக்கின்றாய்?''

# நீ புலிதான்

ஊர் ஊராக இருக்காதோ என்ற பயம், சைக்கிளை வேகம் வேகம் எனச் செலுத்த எதிர்ப்பட்ட புன்னகை மனிதர்களின் விசாரிப்புகளால் வெல்லப்பட்டது. பஸ்சிலி ருந்து இறங்கி இரவல் சைக்கிளில் வீடு போனதும் எதிர் கொண்ட அம்மா, ஆச்சர்யத்தின் விளிம்பில் ஆழ்ந்தார்.

''எப்படியும் நீ வருவா......எத்தனை பேர் எத்தனை கதைகளைச் சொன்னாலும்'' கண்கள் கலங்க அம்மா.

சற்றே நிலைகலங்க, எனக்கு ''சரி ... சரி ..... தேத் தண்ணி எங்கே?'' என்ற அதிகாரக் கட்டளையாலேயே உணர்வுகளை வெல்ல முடிந்தது. பட்டுக்குஞ்சம் போல

மினுமினுப்பும், பளபளப்பும் கொண்டிருந்த சின்னத்தம்பிக்கு, வானத்தில் செல்லுகின்ற ஏதோவோர் விமானம் அண்ணனைச் சுமந்து வரும் என்ற நம்பிக்கை உறுதியான சந்தோஷம். தூர நின்றான் - பின் நெருங்கி, இவ்வளவு நாளும் வீட்டாரின் உரையாடல்களில் ஒரு குழப்பமான உருவாய் இருந்த அண்ணனை நோக்கிப், பின் கட்டிக் கொண்டான்.

எனக்கு அழலாம் போலிருந்தது. இத்தனை நெகிழ்வை இவ்வரிய சொத்தை - எங்களிலொருவன் என்ற ரீதியில் மீண்டும் ஆதரவாக உயரும் கரங்களை - அள்ளியணைப்பதையே பாரம்பரியமாய்க் கொண்டிருக்கும் இவர்களை - எப்படி நான்கு வருடங்கள் சந்திக்காதிருக்க என்னால் முடிந்தது?

''இது என் பகைவனுக்குக்கூட நேரக்கூடாது.''

அம்மா இந்த நான்கு வருடத்தினுள்ளே தனக்கு நேர்ந்தவற்றை, மேற்கண்ட முத்தாய்ப்புடன் ஆரம்பித்தார். ''நீ காட்டின வழியிலை தம்பியவை இரண்டும் புலியெண்டு போயிட்டுது. அவன் வள்ளல் அப்பள வியாபாரி. உனக்கடுத்த சனியன் சென்ட்ரியாம். நான் எவ்வளவு அழுதிருப்பன்... எவ்வளவு கெஞ்சியிருப்பன்...... அண்டைக்கு இந்தியன் ஆமி ஷெல்லடி தொடங்கிவிட்டான். அவன் என்ன சிலோன் ஆமிமாதிரியே......மழை பொழிஞ்ச மாதிரி...... என்ரை ஐயோ! குமரன் கடைசித் தம்பியையும் கூட்டிக் கொண்டு மல்லாகத்துக்கு கொண்டு போட்டான். கொப்பரும் அங்கைதானே...... எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. சிலோன் ஆமி வீடுகளைத் தரைமட்டமாக்கி அழிவு பண்ணினாலும்... அப்பா அவங்கள் பரவாயில்லை. ஷெல் பட்டு என்னோடை படிச்ச செல்லம்மாவின்ர கடைசிப் பிள்ளை ஏழு வயது தான்ரா ஆஸ்பத்திரிக்கு கொண்டு

போக ஒரு வழியுமில்லை......என்ன மந்திரமோ மாயமோ மூண்டு இடத்திலை கொஞ்சம் கொஞ்சமா வெடிச்சது. இண் டைக்கும் தாய் செல்லத்துக்கு விசர் மாதிரித்தான். பெத்த பிள்ளை இரத்தம் பெருக்கிச் சாகிறதை...... ஐயோ......நல்ல காலம்என்னை அதுக்குள்ளை தாசன் வந்து கூட்டிக்கொண்டு போட்டான்.''

எனக்குப் பெரிய நிம்மதி உண்டானது. ஐந்து ஆண் பிள் ளைகளிருந்தும் துணைக்கு யாருமில்லாது அம்மா தவித்த நேரத்தில் இந்த அவலமும் நேர்ந்திருப்பின்...... அம்மாவுக் காக நீண்ட வராந்தா வெளிகளில், தலை நிலம் நோக்க நடந்து, Ward எண்களை வெறித்து,கட்டில்களை ஆராய்ந்து நெருங்கினாலும் அம்மா......எனது அம்மாவின் புன்னகைக்கு என்ன நிச்சயம்...... கண்ணிலே மழலையொன்று குருதி சொட்ட கொஞ்சம் கொஞ்சமாய்ச் செயலிழப்பது நிறைந்து பயமுறுத்தியது.

''தாசண்ணையை இப்ப எங்கை வைச்சிருக்கிறாங் கள்?'' எனக்கு அண்ணரைப் பார்க்க வேண்டும் போலி ருந்தது.

நீங்கள் என் அண்ணரைப் பார்த்திருப்பீர்கள். என்னைப் போலவேதான் உருவம். அசல் தோட்டக்காரன் என்பது முகத்தில், உடம்பில், செயல்களில் பொறிக்கப்பட்டிருக்கும். என்னைவிட இரண்டு வயது பெரியவன். அப்பாவின் சொந் தத் தமையனின் கடைசி மகன். பள்ளிக்கூடம் சென்று வருவதைவிட சந்தைக்குப் போய் வருவது இலாபகரமானது என்பது அவனது தத்துவம். திருவிழாக் காலங்களில் அவ னது சேமிப்பு வெளிவரும்; நான் ஒரு காசாளர் போலப் பின்வருவேன். ஒன்றுக்கு நாலு எனும் ஒருவகைச் சூதாட் டம் ஆடி அண்ணன், பெரும்பாலும் கைக்காசில் கால் பங்கை இழப்பார். வெற்றியோ தோல்வியோ கையிலிருக் கும் மிகுதிப் பணத்தை அண்ணர் செலவளிக்கையில் ஊரி லுள்ள ஊதாரிகளெல்லாம் தோல்வியை ஏற்றுக்கொள்வர்.

அப்படியான என் அண்ணரைச் சந்திக்க நான் 'கியூவரிசை'யில் காத்திருந்தேன். கூட எனது பாதுகாப்பிற்காக நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட என் தந்தையார். எழுத்து மூலமான விண்ணப்பம் தாண்டி, எனது முகம்மீது கொண்ட காதலால் அமைதிப்படை அதிகாரி நேரடி விசாரணையைத் தொடங்கினான். அப்பாவின் அரச சேவகமும் எனது சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டையும் காப்பாற்றியது. அண்ணரைப் பார்ப்பதற்குள் ஆயிரம் தடைகள். ஒரு கொட்டகையில் இறுதியில் உட்காரவைக்கப்பட்டு; 'ஐந்து நிமிடங்கள் தான்' என்பதை கொச்சைத்தமிழில் ''நானும் தமிழறிவேன்'' என்று வெற்றிப் புன்னகை இணைய ஒரு ''அமைதி காப்பவர்'' அறிவுறுத்தினார்.

''தம்பியை எப்படியாவது வெளியில கொண்டாந்திடு''

தாசனின் அண்ணர் பிரான்சிலிருந்து ரெலிபோனில் அடிக்கடி உச்சரித்த வாசகங்கள் அண்ணரைப் பார்க்கப்பார்க்க அந்நினைவே முட்டி மோதியது. சம்பாஷணையில் நான் சலித்துப்போனேன். தனது அடையாள அட்டையைக்கூட அண்ணர் தொலைத்துவிட்டார். அதுபற்றிப் பெரிய கவலையில்லாது ''வெளிநாட்டுக்குப் போக என்னாலை ஏலாது. அடுத்தமுறை என்ரை அம்மாவோட வா; முடிஞ்சா வடை சுட்டு எடுத்துவரச் சொல்லு. போன முறையை விடக் கொஞ்சம் அதிகமாய். அப்பதான் எல்லாருக்கும் கொடுத்துச் சாப்பிடலாம்.''

சற்று இடைவெளிக்குப் பின்.. ''நீ முயற்சித்துப் பார்...... வெளியிலை வந்தும்...... இந்த அடி வேண்டின பிறகு......வெளிநாட்டுக்கு......''

திரும்பிக் கொட்டகை நோக்கி நடந்தான். கைவிடப்பட்ட முன்னாள் அரச மருத்துவமனைக் கட்டடமே இவர்களின் சிறைமுகாமாக மாறியிருந்தது. சீமெந்துத் தொழிற்

சர்லையின் புகையாலும், கடற்கரையோரமாக செயற்கைத் துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதாலும் புகை சூழ்ந்த ,செம் மண்முகங்கிளறும் வனமாகி, ''அசுத்தப்பகுதி'' என்ற கிரீடத்தைச் சுற்றுவட்டாரம் சூடியிருந்தது.

ஒரு கிழமை ஆனது. உறவினர், நண்பர்களென்று உறவுகளை மீண்டும் புனரமைக்கும் காலம். அண்ணருடைய விடுதலையும், மீண்டும் இந்தியா திரும்புகையில் அவரையும் உடனழைத்துச் செல்ல வேண்டுமென்பதுவும் ஓயாத அலைச்சலுக்குத் தூண்டுகோலாகின. ஒரு வழியாக ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்ட அண்ணரின் நிலவரம், அவரில்லாது குடும்ப ஜீவனப்பாட்டை உறுதி செய்யும் விவசாயம் கைவிடப்பட்டிருப்பது, தாயார் நோய் வாய்ப்பட்டிருப்பது, அவரை விடுதலை செய்யும் பட்சத்தில் எமது குடும்பமே எத்தனை 'கிலோகிராம் நன்றிக் கடன்' உடையவராய் மாறுகின்றது போன்ற விபரங்களை உள்ளடக்கி, கீழே பிரஜைகள் குழுவினர் மற்றும் விதானையார் ஒப்பமிட்டிருந்தார்கள். கூனிக்குறுகி விடுதலை வேண்டும் இக்கடிதத்தில் ஒப்பமிட்ட இன்னொருவரான என் பெரிய தந்தையார் கூடவர இராணுவ மேலதிகாரியுடனான சந்திப்பு நிகழ்ந்தது. முகத்தில் மாபெரிய கடமைக் கனல் சூழ்ந்திருக்க தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த அவர் சற்று நேரத்தின் பின்னால் எம்மை உட்காரவைத்துப் பேச ஆரம்பித்தார்.அவர் ஒருவடஇந்தியராகஇருக்கலாமென்பதைத் தோற்றம் உறுதி செய்தது. கூடவே இருந்த மலபார் ரெஜிமென்ட் அதிகாரி, அவரின் பேச்சின் சாராம்சத்தைத் தமிழிலும் நீட்டி முழங்கினார். இவ்வாறான வெத்துவெட்டுக்கள் நிறையப் பெற்ற அவரின் பேச்சின் சாராம்சமென்னவோ கொஞ்சம்தான். ''புலிகளின் தொல்லை மிகவும் மோசமாயுள்ளது , ஆனாலும் இவரை விடுதலைசெய்துவிடலாம். முதற்படியாக ஏதாவதொரு ஆயுதத்தை ஒப்படைக்க வேண்டும்; விடுதலைக்கு விலையாக தானாகவே தேசப் பிரஷ்டத்தை கைதி மேற்கொள்ள வேண்டும்.

வெளியில் வந்தபோது பெரியப்பா நிறையவே சோர்ந்து போயிருந்தார். கொஞ்சம் சதைப்பற்றான தொந்தி விழுந்த உடலமைப்பு. தலையில் வழுக்கை விழுந்திருப்பினும் வெண் முடிகள் எண்ணக்கூடக் கிடைக்காது. இவரது இளமையின் ரகசியம் 'தேசிய பானம்' என வீட்டார் சொல்லிக்கொள் வர். ஓய்வுபெற்ற விமானப்படைச் சிற்றூழியர் அவர். விமானப்படை தந்த மிடுக்கில் அந்நாளில் செய்த சண்டித் தனத்தின் சான்றாக, அரைக்காற் சட்டைப் போலீசிட மிருந்து பிடுங்கியெடுத்த சிறு குண்டாந்தடி அவரது வாசஸ் தலத்தின் அலங்காரச் சின்னங்களில் முதன்மையானது இவ் வகைப்பட்ட எனது பெரிய தந்தையார் இன்றைய நாளில் புயலிலடிபட்ட பஞ்சாகியிருந்தார். இவரது ஈடாட்டத்தின் மையமானது, வயோதிபத்தைவிடவும் இயக்கம் சார் சண் டியர் முன் இவர்களது வீரம் தோற்றோடியதே ஆகும். இவரது உலகறிவு இவரை ஒதுங்குவதே மரியாதையெனப் போதித்தது போலும்! முன்பெல்லாம் இலங்கையின் நாடா ளுமன்ற நாற்காலிகளிலும் புரட்சிப் பூக்கள் பூத்துக்குலுங்கு மெனப் பறையறிவித்த இடதோ வலதோ, ஏதோவொரு கொம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளராயிருந்தவர். முதலில் ஈழப்போராட்டம் என வருகையில், பழைய பாரம் பரியம் காக்க செஞ்சூரியனுக்காய் வக்காலத்து வாங்கி அலுத்ததாலோ அல்லது புத்திர பாசம் உச்சம் பெற்றதா லோ, செயல்வீரர்களை வாரியணைத்துக் கொண்டார்.

வீட்டு வாசலை நாம் நெருங்கியபோது, எமதூர்ப் பிரமுகர்களிலொருவரான மகாதேவன் மாஸ்ரர் "என்னாச்சு ? " என்றபடி வரவேற்க, சால்வைத் துண்டால் முகத்தைத் துடைத்தபடி, பெரியப்பர் சலிப்புடன் செருமிக் கொண்டார்.

"அப்பவே இந்த விடுபேயன்களுக்குச் சொன்னனான். இந்தியாவை இவை ஏமாத்தலாமெண்டுநினைப்பது..... தந்தி ரோபாயமும் மண்ணாங்கட்டியும்...... அவன் ஆயுதம்

கொடுத்தால் வாங்கின உங்கடை மதி எங்கை? புலிகளா வது இடைக்கிடை இந்தியா பற்றி ஏதோ சொன் னாங்கள்...... ஹூம்......''

நான் தலைகுனிந்து நிலம் நோக்கத் தொடங்கினேன் மாஸ்ரர் ஒரு அந்தநாளைய இந்தியப் பட்டதாரியாகையால், இந்தியாவின் பெருமை அவரின் பெருமையென ஆகி வெகு காலம். மேலும் இன்றைய சூழலில் அவரது வாதத்தின் நியாயம்......

தலை நிமிர்ந்ததோர் வாழ்வு
சமைத்திட
நிமிர்ந்த தலை மட்டும்
கொண்டுல வினோர்
குனிந்திடல்...... குனிந்திடல்
மேலும்

குன்றுதல்...... கடனே......

மகாதேவரானவர் சுருட்டிற்கு உயிர் கொடுக்க பெரி யப்பா ஆரம்பித்தார். ''என்ரை குரங்குக்கு எத்தனை நாள் சொல்லியிருப்பன் ஒடடா இனிமேலாவது...... எங்கா வது தொலையெண்ணக் கேட்டானே...... அம்மா! அண்டைக்கவங்கள் அடிச்ச அடி...''

இவ்வாறாக அண்ணர் கைதானது, அமைதிப்படை யினரின் புலி வேட்டை இவை குறித்து ஒரு விவரணச் சித்திரத்தை உருவாக்கினார் பெரியப்பா. பெரும்பாலும் அவரது தொனி முடியுமோ...... முடியாதோ...... சண்டை யிடல் ஒன்றே தீர்வென்பதை உட்கிடையாக்கியது. ஆனால் மகாதேவருக்கோ அவரது அறிவு, மலையைச் சாய்க்க முயல்வதைப் போன்றதொரு செயலே இந்தியாவை எதிர்ப் பது என வக்காலத்து வாங்க வைத்தது. அவரும் புலி களின் தியாகத்தையும், மற்றோரின் துரோகத்தையும் எள்ளி நகையாடிய பின் அரசியல் தீர்வுக்காய் அங்கலாய்த்

தார். இன்னமும் கொஞ்சம் கூடுதல் உரிமைகள்வேண்டும்; அதிகாரம் யாவும் அநியாயத்தை எதிர்த்து உயிர் தந்த வர்க்கே எனப் பிரலாபித்தார். பெரியப்பா, திலீபன் அணு அணுவாய் உயிர்விட ஆக்கிரமிப்பாளர் அநுட்டித்த அலட்சியத்தை நினைவுகூர்ந்தார். எல்லோருமாக இரட்சிப் பாளரென வரவேற்ற பயல்கள், ஆரம்பத்தில் எல்லாம் இராணுவம்தான் என்ற உருவெடுத்து - இல்லையில்லை தாம் கொஞ்சம் மாபெரிய சாத்தான்கள் என்பதை நிரூ பிக்கும் வகையில் மேற்கொண்ட நரவேட்டையின் வடுக் களை நினைத்துக் கோபமும் பதற்றமும் கொண்டு, ''இனியும் பேச்சுவார்த்தை......! விடும் மாஸ்ரர் உந்தக் கதையை'' என முற்றுப்புள்ளியிட்டார்.

இவ்வாறான இருவேறு கருத்துக்களின் ஆதிக்கம் எங்குமிருந்தது. என் பழைய நண்பனும் பல்கலைக்கழக மாணவனுமான ரவியும் இதனை அடிக்கடி சொல்லிக் கொண்டான். அவனோடு பேசுகையில், ''எல்லாம் நிகழ்ந்து முடிந்தாலும் என்னதான் மாற்றம் நிகழ்ந்து விட்டது?'' என்று சலித்துக்கொண்டதற்கு நிதானமாக அவன் சொன்னான், ''எதிரியைப்பற்றி இப்போது சனங் கள் அறிய ஆவலோடுள்ளனர். வாசிப்பு என்பது வெறும் பொழுது போக்காக இப்போதில்லை'' என்றான்.

உண்மைதான்! மிகக்குறுகிய காலங்களிலேயே அந்நி யர் அதற்கும் மேலாக ஆக்கிரமிப்பாளன் எனத் தன்னைத் தானே எதிரி தோலுரித்துக் கொண்டான். நண்பனும் நானும் பனைமரங்கள் அணிவகுத்த அச்சாலை விளிம் பிலுள்ள கோவிலின் தேர் முட்டி மறைவிலிருந்து கீழிறங் கினோம். இன்னமும் ஏழு நாட்களில் பயணம் என்பதை நான் நினைவுகூர, அவன், தனது பல்கலைக் கழகம் திறக்கும் வரைக்கும் படிப்பதற்காக ஏதாவது புத்தகங்கள் வாங்கியனுப்பிவிடு......அது என்று திறக்குமோ? யார்

யாரெல்லாம் அகை மூடுவரோ? எனப் பண்ணிசைத்து தான் செல்லும் வழி குறித்துஎச்சரித்து விடை தந்தான்.

வயல்வெளியில் காற்று ஊஞ்சலிட, புல்லுக் கடகமும் கலப்பைகளும் தலையிலும் தோளிலுமாக மாடுகளை வழி நடத்தி வருபவர்கள் பாடல் இசைக்க, இன்னுமொரு மாலை எனதூரில் முடிவடையும் நேரம் வயல்வெளியைத் தாண்டு கையில் சிறுபெண்ணொருத்தி, ''ஆமிக்காரன் செக்கிங்'' என எச்சரித்தாள். ''எங்க?'' என, நகர்ந்தபடி பதில் சொன்னாள். முன்பெல்லாம் இலங்கை இராணுவத்தை ஏமாற்ற நாம் நடமாடிய ஒழுங்கைகளினூடாக வீடு திரும்ப எத்தனித்தேன். அம்மா கண்ணுள் வந்தார்.

''தம்பி முன்னைமாதிரி ஒழுங்கைகளை நம்பாதை, கூர்க்காக்காரன் நாயோட நாயாய்ப் பத்தை வழிய படுத்துக் கிடக்கிறான்.''

வருவது வரட்டுமென நேராகவே வந்து 'செக் போஸ்ட்' தாண்டி பெரிய ரோட்டில் ஏறியபோது கைதட்டல், அதட்டும் கூச்சல் கேட்டது. திரும்பி அழைத்தவரிடமே போனேன். அமைதிகாப்போர் வரிசைக் கிரமத்தை வலியுறுத்த, முகம் மறைக்கப்பட்ட 'தலையாட்டிகள்' ஏற இறங்க எல்லோரையும் அளந்து பார்த்து, அதிருப்தியை வெளிப்படுத்தினர். ஒரு பெரியவர் - வயல் வேலையை முடித்து வருபவர் போலும்! அடையாள அட்டை கேட்கப் பட்டது அடையாள அட்டையை எடுத்துக் கொடுத்தார். அடுத்தாக அவர் கேட்ட கேள்வி படையினரின் பெயரை ''அறியாமை காப்பவர்கள்'' என மாற்றப் போதுமானது. வேறொன்றுமல்ல; 12 எண்கள் கொண்ட அடையாள அட்டையின் இலக்கங்களைச் சொல்லுமாறு பணிக்கப்பட்டார். வேலைக் களைப்போடு திரும்பிய மனிதனுக்கு எப்படி இருக்கும்? சரமாரியாகத் திட்டல் மழை பொழிந்தார். அமைதியின் காவலருக்கோ ஆவேசம் வந்துவிட்டது. ''Translate this'' என்று ஒரு இளைஞனுக்குக் கட்டளை

யிட்டார். அவ்விளைஞன் "I dont know English" என்றான். "அப்போ நீ பேசியது......? அதுதான் ஆங்கிலம்......" படுகொச்சையான ஆங்கிலப் பதப்பிரயோகத்துடன், இளைஞனின் வயிற்றில் சப்பாத்துக் காலால் மிகக் கடுமையாக அமைதி நிலைநிறுத்தப்பட்டது. காந்தியின் சீடரின் அரசல்லவோ! முதியோர் வதை வேண்டாம் எனத் தீர்மானித்துள்ளனர் போலும்! நினைக்க எனக்குச் சிரிப்பு வந்தது. இந்தக் கூத்தை தூர இருந்து அவதானித்த அமைதிப் படைத் தலைவர் நெருங்கி வந்து, எல்லோர் முகத்தையும் ஆராயத் தொடங்கினார்.

எனது முறை வருமுன்னாலே அத் தர்மதேவன் சிலருக்கு விடுதலை வழங்கினார். சிலரை ஓரமாகச் சென்று உட்காரும்படி கட்டளையிட்டார். என்னை ஏற இறங்கக் கண்களால் அளவிட்டார். ஆங்கிலத்தில், "நீயொரு புலியைப் போல உடையணிந்திருக்கிறாய்" என முணுமுணுத்தார். உள்ளே வரும்படி கட்டளையிட்டுவிட்டு முன் நடக்க, பலியாடாகத் தொடர்ந்தேன். சக மண்ணின்மைந்தர்கள் அநுதாபமாக என்னை ஏறிடவும், நெஞ்சு முழுவதும் அச்சம் வியாபிக்க, கால்கள் ஏனோதானோவென அசைந்தன. நான் தயாராக வைத்திருந்த எனது தேசிய மற்றும் சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டைகளை நீட்டினேன். வாங்கி ஆராய்ந்தவர் தேசிய அடையாள அட்டையைத் தூக்கிப் பிடித்து, "இது போலி" என உறுமினார். பின் இரண்டையுமே அருகில் நின்ற ஜீப்பொன்றின் 'போனட்'டில் போட்டுவிட்டு, சாவதானமாகத் தேநீரைச் சுவைக்க ஆரம்பித்தார்.

சிறிய இடைவெளியின் பின்னால் நானும் ஆங்கிலத்தில், "நான் இந்தியாவில் தமிழ்நாட்டில் கல்வி பயிலுமொரு மாணவன்" எனக் கூறினேன்.

"என்ன படிக்கின்றாய்?" கேள்வி தெறித்தது.

''இளநிலை வர்த்தகப் பட்டப் படிப்பு''

''உனது பாடத்திட்டத்தைச் சொல்?''

நான் துணுக்குற, ''நான் எனது வர்த்தக முதுநிலைப் பட்டப்படிப்பை பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் முடித் தவன். ஆகையால் நீ சொல்'' என்றார்.

சொல்லி நான் முடிக்க, அவன் ஒரு சிறு இராஜநடை போட்டான். திரும்பி மீண்டும், ''நான், நீ படிப்பதனை ஏற்றுக்கொள்கிறேன். உனது பட்டப்படிப்புக்கு முன்னால் புலியின் ஆயுதப் பயிற்சி பெற்றுக்கொண்டதனை ஏன் மறைக் கின்றாய்?''

நான் திகைத்துப்போனேன். ஒருவாறாக நான் 10 ஆவது வரை அருகிலுள்ள மகா வித்தியாலயத்தில் ஒப்பேற் றியதை, பின் 1983 இறுதியிலேயே இந்தியா சென்று உயர் நிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததை அவனுக்கு விளக்கி னேன்.

''நான் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுகின்றேன். உனது ஊரிலே புலி நடமாட்டம் எப்படி?''

நான் துணுக்குற்று, ஊருக்கு வந்து இரண்டு கிழமை களே ஆனமையால் நானறியேன் ஏதும் பராபரமே எனத் தாள் பணிந்தேன்.

''ஆகா! அவ்வாறாயின் நீ புலி.''

என்னை மீறி எனது கால் கைகள் படபடக்க ஆரம்பித் தன. படிப்பறிவும் சரளமான உளவறிவும் வாய்க்கப்பெற்ற இந்த அதிகாரி, மறுபுறத்தில் ஒரு தரங்கெட்ட மூன்றாந் தர அணுகுமுறைகளையும் கையாளக்கூடிய இராணுவத் தினனே என்பதை உணர்ந்துகொண்டேன். மீண்டும் ''நீ புலியேதான்...... உனதூரிலே இன்னமும் புலிகளுண்டு...... நீ மனம் வைத்தால் மார்க்கமுண்டு.''

நான் பணிவாக ''இல்லை ஐயா, நான் ஒரு இலங்கை அரச சேவகரின் பிள்ளை. கல்வியொன்றுதான் எனது நோக்கம்'' என வலியுறுத்த, அவன் தடாலெனச் சிநேகபூர்வ மானான்.

''சரி, என்னோடு வந்து ஒரு கம்பெனி கொடு......''

''இல்லை ஐயா, எனது குடும்பத்தினர் மத நம்பிக்கை மிகுந்தோர்.''

''அவ்வாறாயின் நீ புலி...... புலிதான் மதுபானம் அருந்தாது'' என அமைதிப்படைத் தளபதி கத்தினார்.

இவ்வாறாக நாடகம் நீண்டது. இறுதியில், ''தொலை பயலே...... இந்தியா செல்ல முன் வந்து உனது கல்லூரி அடையாள அட்டையைப் பெற்றுக்கொள். நான் கொஞ்சம் சென்னையைத் தொடர்பு கொண்டு விசாரிக்க வேண்டும்.''

நான் வீடு திரும்புகையில் உடைகள் யாவும் வேர்வையில் நனைந்திருந்தன. வீட்டுக்குப் போய் அம்மாவிடம் மெல்ல விசயத்தைச் சொன்னேன்.

''நல்லகாலம் கடவுள் காப்பாற்றியது. நாளைக்கே கொழும்புக்குப் போயிடு''

சொன்ன அம்மாவை முறைத்தேன். அம்மா குரல்தளதளக்க, நாலுவருசத்துக்குப் பிறகு வந்து நீ அடிவாங்க ......நீ எந்த முகாமிலையெண்டு நாங்கள் தேடியலைய......''
அம்மா இப்போது அழவே தொடங்கிவிட்டார்.

தூங்கலாமெனச் சரிந்தேன். பட்டகாயமொன்றின் ரணம் கிளறப்பட மேலும் மேலும் யாரோ கிண்டுவதைப் போலத் தலைவலித்தது. சிறைக்கொட்டடியில் அண்ணர் சொன்னது நினைவில் உறுத்தியது ''இந்த அடி வாங்கிய பின் இனியென்ன வெளிநாடு......'' ஏதோவொரு திரைப் படத்தின் இறுதிக் காட்சியில் வருவது போல, பச்சைநிற வண்டிகள் படையெடுத்து வீட்டைச் சூழ்ந்ததாகப் பிரமை

தோன்றியது. அம்மாவின் நிம்மதிக்காகவேனும் நாளை கொழும்பு போவதே உசிதமென்று தோன்றியது. தொலைவில் சில வேட்டொலிகள் கேட்டது.

''கிழக்குப் பக்கமாத்தான் கேட்குது. நாளைக்கு அந்த இடம் ஆவ்வளவுதான்.''

எழுந்து யன்னல் பக்கம் போய் அம்மா பார்த்தார். அமைதி காக்கும் சிறு கும்பலொன்று ஒழுங்கையில் அலங்க மலங்க விழித்தபடி நடை போட்டுக்கொண்டிருந்தது! ○

தமிழீழம்
ஆவணி 1989

சிரித்துப் பழகும் அவரை இந்தியப் படைக்குப் பிடித்திருக்கிறது.

ஒரு படை அதிகாரி இன்னொரு படை அதிகாரியிடம் இப்படிச் சொன்னதுண்டு - "He is very helpful to us".

## உணர்வு

முன்னாள் தமிழ்ப் பொலிஸ்காரர்.

ஊர் காங்கேசன்துறை.

ஒருகாலத்தில் காவலராகப் பணியாற்றியதால் ஆங்கிலம் தெரிந்திருக்கிறது.

இந்தியப் படையினர் அவரையே நாடுகிறார்கள்.

மக்களுக்கும் இந்தியப் படைக்கும் இடையில் மொழி பெயர்ப்பு வேலை.

சிரித்துப் பழகும் அவரை இந்தியப் படைக்குப் பிடித்திருக்கிறது.

ஒரு படை அதிகாரி இன்னொரு படை அதிகாரியிடம் இப்படிச் சொன்னதுண்டு - " He is very helpful to us ".

பொலிஸ்காரரைப் பேட்டி காண்பது என்று முடிவு செய்கிறார்கள் -

இந்திய அரசுக்குப் பிரச்சாரமாக இருக்கும்!

தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்கள் - ஓர் இந்தியப் படை அதிகாரி - நிருபர் - படைவீரர்கள் - பொலிஸ்காரர்வீட்டில் குவிகிறார்கள்.

பெரிய எதிர்பார்ப்பு.

'கமெரா'க்கள் முடுக்கிவிடப்படுகின்றன.

கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு ஒருவர் தொடங்குகிறார்.

" இந்தியப் படையின் போரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

முன்னாள் பொலிஸ்காரரின் முகம் சிவக்கிறது.

" தேவையற்ற போர்."

" அப்படியானால் விடுதலைப் புலிகளின் சண்டை?"

" நியாயமானது."

படைவீரர்கள் பற்களைக் கடிக்கிறார்கள்.

அதிகாரியின் கண்கள் எரிகின்றன. "விடுதலைப் புலி நாய்களை அழிப்போம்!" என்று உறுமுகிறார் அவர்.

பொலிஸ்காரர் சொல்லுகிறார் -

" அவர்கள் மக்களோடு இருக்கிறார்கள்."

ஒரு கொடியவன் தான்......

' மிருகத்தனம் ' விளையாடுகிறது -

பொலிஸ்காரரை அடித்து இரத்தத்தில் போட்டுவிட்டு, முரடர்கள் வெளியேறுகிறார்கள்.

நல்ல காலம்......!

பொலிஸ்காரர் சாகவில்லை -

எலும்புகள் உடைந்து போய் இருக்கிறார். ○

தமிழீழம்
தை 1989

கீழே விழுந்த கத்தியை இருளில் அவள் கவனமாக எடுக்கிறாள்.

அவனுக்கு வெறி.

ஓங்கிக் குத்துகிறாள்.

காலில் கத்தி பாய அவன் ஓடத் தொடங்குகிறான்......

# பாடம்

வல்வெட்டித்துறை.

பிரபாகரனின் ஊர்.

கடற்கரைக் காற்று பனைமரங்களை உசுப்புகிறது.

நல்ல இரவு.

நெரிசலான ஒழுங்கையால் இரண்டு உருவங்கள் மெள்ள அவள் வீட்டை நெருங்குகின்றன.

'வீர்' என்று ஓர் அலறல்.

ஒருவனின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு விளக்கை அவள் போட்டபோதுதான் தெரிகிறது - இந்தியப்படை ஆட்கள்!

அடுத்தவன் இன்னொரு பெண்ணைப் பிடிக்கிறான்.

கூச்சல்.

கீழே விழுந்து கத்தியை இருளில் அவள் கவனமாக எடுக்கிறாள்.

அவனுக்கு வெறி.

ஓங்கிக் குத்துகிறாள்.

காலில் கத்தி பாய அவன் ஓடத் தொடங்குகிறான்... ஊர் கூடுகிறது.

துரத்துகிறார்கள்.

முள்வேலியால் பாய்ந்தபோது அடுத்தவனின் முதுகு கிழிகிறது.

கம்பி வேலி முள்ளில் - அந்த ''மாவீரனு''டைய கிழிந்த சட்டையை மக்கள் காண்கிறார்கள்.

மறுநாள் -

இந்தியப்படை முகாமில் ஊர் முறையீடு.

வெட்கம்கெட்டவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

ஒருவனுக்கு கிழிந்த முதுகு.

அடுத்தவனுக்குப் புண்பட்ட கால்.

இப்பொழுதெல்லாம் வல்வெட்டித்துறை மக்கள் 'இந்தியப்படையை' எப்படி அழைக்கிறார்கள் தெரியுமா?

''முள்வேலிச் சட்டைகள்!''

○

உணர்வு

''ஏ கிழவி! உன் வீட்டுக்குப் புலிகள் இனி வந்தா இந்த ஊரே அழிஞ்சுபோகும். தெரிஞ்சுக்கோ.''

கிழவி மீண்டும் சிரிக்கிறாள்.

''இது எங்களின்ரை ஊர்மோனே.''

# துணை

கிழவி உறுதியானவள்.

இளவாலைக் கிராமத்தில் தனிச் செல்வாக்கு.

நெடுங்காலப் பனைபோல் எதற்கும் அசையாத முதிர்ச்சி.

பார்க்கிறாள்......

இந்தியப் படை வண்டி ஒன்று வாசலில் வந்து நிற்கிறது.

சிரித்துக்கொள்கிறாள்.

வைராக்கியம் பெருமூச்சாய் அவிழ்கிறது.

'தட தட' என்று கிழவியின் வீட்டுக்குள் துப்பாக்கி களோடு அவர்கள் பாய்கிறார்கள்.

மணித்துளி அமைதி.

''என்ன மோனே வந்த நீங்கள்?''

இந்தியப்படைக்காரன் ஒருவன் கிழவிக்குப் பக்கத்தில் உறுமிக்கொண்டு வருகிறான்.

''உனக்குத் தெரியும்.''

இந்தியில் சொல்லப்பட்டு - தமிழில் மொழிபெயர்ப் பாகி வருகிறது.

''எனக்கு என்ன மோனே தெரியும்......நான் என்ன ஜோசியம் சொல்லுறவளே?''

''கிழவி! நீ விடுதலைப் புலிகளுக்கு சோறு போடுறி யாம்..... உண்மையா?''

''ஐயோ கடவுளே! இப்ப அரிசி சரியான விலை ராசா.... நீங்க சண்டையைத் தொடங்கி சாமான்களின்ரை விலையெல்லாம் ஏறிப்போட்டுது. நான் புலிகளுக்கு இப்ப சோறு போடுறதில்லை......''

''முதல்ல போட்டநீதானே?''

''முந்தியும் போட்ட நான் - இப்பவும் போடுறனான். எங்களின்ரை பெடியளுக்குக் கறிமட்டுந்தான் இப்ப கொடுக் கிறேன். சோறுபோட முடியுதில்லையே என்று கவலை யாக் கிடக்கு.''

ஒருவன் கிழவியைத் தள்ளி விடுகிறான்.

கிழட்டுப்பனை சாய்ந்து நிமிர்கிறது.

''புலிகள் எங்கே?''

''இப்பதான் வந்து கறிவாங்கிக்கொண்டு போனதுகள்... எங்க இருக்குதுகள் என்று நீங்களல்லே பார்க்க வேணும்...!''

கிழவியை உதைக்கிறார்கள்.

"ஏ கிழவி! உன் வீட்டுக்குப் புலிகள் இனி வந்தா இந்த ஊரே அழிஞ்சுபோகும். தெரிஞ்சுக்கோ."

கிழவி மீண்டும் சிரிக்கிறாள்.

"இது எங்களின்ரை ஊர்மோனே."

அவர்கள் அசந்து போகிறார்கள்.

கிழவியை முடிந்தவரை உதைத்துவிட்டு இந்தியப் படை கிளம்புகிறது.

இடுப்பில் கையை ஊன்றி அவள் திரும்பவும் கிழட்டுப் பனையாய் எழுகிறாள்!

கிழவி இன்று அந்த வீட்டில் இல்லை.

இடம் மாறிவிட்டாளாம் -

சமையலும் தொடர்ந்து நடப்பதாகக் கேள்வி! ○

உணர்வு

உதுதான் மாவீரர்களைப்பற்றி எழுதின கையே? எண்டு கேட்டு உந்தப் பெடியன்ரை கை விரல்களை எல்லாம் ஊசியாலை குத்தியிருக் கிறாங்கள், பெடியன் துடியாய்த் துடித்திருக் கிறான்......''

வாத்தியாருக்குக் கண்கள் கலங்கிற்று......

## குடிசைகளின் உயிர் நரம்பை அறுத்தவர்கள்

புத்தூருக்குப் பக்கத்தில் சிறுப்பிட்டி.

கிழவியின் குடிசையில் குப்பி விளக்கு மங்கி மங்கி எரிந்துகொண்டிருந்தது.

"உந்தப் பெடியன் ஓடையிலை அல்லே இருக்கிறவன் ......?" என்று கேட்டாள் ஆச்சி.

பேத்தி சொன்னாள் -

"ஓமனே ஆச்சி ... புத்தூர்க் கிழக்கு ஓடைதான் திருஞானம் அண்ணையின்ரை ஊர்......"

"உதேண்டி பிள்ளை உந்த நல்ல பெடியனைப் பிடிச்சுக்கொண்டு போனவை......?"

ஆச்சிக்கு அவனை நினைவிருக்கிறது. தன்னுடைய சின்ன ஓலைக் குடிசைக்கு ஒரு நாள் வந்து ''ஏதேனும் உதவி வேணுமே ஆச்சி?'' என்று கேட்டவன். அந்தக் குடிசையோடு மட்டுமல்ல - பக்கத்துக் குடிசைகளுக்கெல்லாம் போனான். சிரிப்பும் - கலகலப்பும் நீல மோட்டார் சைக்கிளும்......

'' ஈ. பி. ஆர். எல். எவ் காரன்கள் பிடிச்சுக்கொண்டு போனவையாம் ஆச்சி''

ஆச்சியால் தாங்க முடியவில்லை.

'' குறுக்கால போவான்கள்......'' என்று பொருமினாள் அவள்.

* * *

புத்தூர்க் கிராமம் பரபரப்பாயிற்று -

*27 - 11 - 1989.*

இரவின் அமைதியிலும் வழமைக்குமாறான மனித நடமாட்டம்.

கந்தையாவைப் பார்த்து முகத்தார் சொன்னார் -

'' விடுதலைப் புலிகள் மாவீரர் நாளை இண்டைக்குத்தான் முதல் தடவை கொண்டாடினவையாம்...... இந்த நாளாப்பார்த்து ஈ. பி. ஆர். எல். எவ் காரன்கள், உவன் பெடியனைக் கடத்தியிருக்கினம் திருஞானத்தைச் சின்ன வயசிலை இருந்து எனக்குத் தெரியுமடா தம்பி..... ஓலைக்குடிலுக்குள்ள பிறந்தவன்...... காணியா, வேலியா ...... தேப்பன் எப்பவும் வெறுங் கைதான். தாய்க்காரி படாத பாடுபட்டு வளர்த்தவள்.''

'' எனக்குத் தெரியுமண்ணை'' என்றான் கந்தையா.

அவன் சொன்னான் -

'' பெடியன் நல்ல கெட்டி. தானாப் படிச்சு வளர்ந்து தானே உந்தப் பாடம் சொல்லிக் குடுக்கிற பள்ளிகளுக்கு வாத்தியாராப் போகத் தொடங்கினவன் எத்தினையோ ஊர்களுக்குப் போய் பாடம் சொல்லிக் குடுக்கிறவனாம்...... ......யாழ்ப்பாணத்துக்கும் போறவனாம்......''

" உவன் பெடியனுக்கு இப்பதான் இருபத்தெட்டு வயசு எண்டு சொல்லுகினம்......" என்றார் முகத்தார். அவர் தொடர்ந்தார் -

" இளம் வயசிலை உந்தப் பெடியன் கலியாணமும் செய்யாமல் அல்லே மக்களுக்காக உழைச்சவன். உழைப்பாளர் சங்கத்திலை என்ன பாடெல்லாம் பட்டவன் பிள்ளை......"

புத்தூரில் கொழுத்த தழை எறிந்து தோட்டத்தில் நின்ற செங்கிழங்குப் பயிர்களுக்குப் பக்கத்தில் - அந்த வரப்பில் - அவர்கள் திருஞானத்தின் வாழ்க்கையைப் புரட்டிக்கொண்டிருந்தார்கள்.

" நல்லா எழுதுவன் பாருங்கோ...... 'புத்தெழில்' எண்டு ஒரு சஞ்சிகைகூட அச்சிலைபோட்டு வெளியிட்டவன் ....ஒவ்வொரு பக்கத்திலையும் ஏழை எளியதுகள்-தோட்டத்திலை வேலை செய்யுறதுகள் பற்றித்தான் எழுதுவன் ....."

என்றான் கந்தையா. அவன் சொன்னான் -

" திருஞானம் வைச்சிருக்கிற புத்தகக்கடைக்குக்கூட 'புத்தெழில் புத்தகசாலை' எண்டல்லே பேர். கிணத்துக் குள்ளை கிடக்கிற மாதிரி வெளியே போகாமல் இஞ்சை இருக்கிறவை, நல்ல புத்தகங்களா அதை இதை படிக்கட்டுக்கு எண்டுதான் புத்தகக் கடையே திறந்தவன்......"

எங்கோ தூரத்தில் ஒரு வண்டியின் வெளிச்சம் அடித்தது.

இருவரும் தோட்டத்தின் உட்புறமாக வீடுகளை நோக்கி விரைந்தார்கள்.

முகத்தார் போகும்போது சொல்லிக்கொண்டே போனார்.

"காலம் கெட்டுப் போச்சடா - தம்பி......"

* * *

*29 - 11 - 1989.*

மாவீரர்நாள் முடிந்து மூன்றாம் நாள்.

புத்தூரை - ஒட்டிய ஆவரங்காலில் இரண்டு இளைஞர்கள் ஆழமான பேச்சில் தோய்ந்திருந்தார்கள்.

வீட்டு முற்றத்தில் எப்போதும் அவர்கள் உட்கார்ந்து பேசும் மாமரத்தடி.

நாலு மணி நேரத்து இறங்கு வெயில்.

"யாழ்ப்பாணம் அசோகா கொட்டலிலை ஈ. பி. ஆர். எல். எவ் காரன்கள், எங்களின்ரை ஊரிலை இருந்து போன வையிட்ட திருஞானம் அண்ணையைப் பற்றிச் சொல்லி அனுப்பி இருக்கினம்...—" என்றான் நீலச்சட்டைக்காரன்.

நெற்றியில் தலைமயிர் விழுந்து கிடந்த அடுத்தவன் கேட்டான் -

" என்னவாம்......? "

"திருஞானம் அண்ணைக்குச் சரியான அடியாம்...... தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டு அடிக்கினமாம்......"

நீலச் சட்டை தொடர்ந்தான் -

"எனக்குத் தெரியுண்டா...... திருஞானம் அண்ணை தொடக்கத்திலை ஈ. பி. ஆர். எல். எவ் இலதானே இருந்தவர்.. பேந்து தான் 1986 அளவில உவங்களின்ரை சுயநலத்தையும் சுத்துமாத்தையும் பார்த்துப்போட்டு- உதைவிட்டு விலகினவர். புலிகளை அவர் ஆதரிக்கிறது உவங்களுக்குச் சரியான கோபம் கண்டியோ."

"பாவம் திருஞானம் அண்ணை...... " என்றான் நெற்றி மயிர்க்காரன். அவன் சொன்னான் -

"உவங்களின்ரை இயக்கம் சரியாக இருந்திருந்தால் அவர் ஏண்டா புலிகளை ஆதரிக்கப்போறார்? புலிகளின்ரை ஒழுக்கமும் வீரமும் அவரை இழுத்திருக்குது.

......இப்ப பார்க்கலையே...... இந்தியப்படையோட சேர்ந்து எத்தினை பேரைத் தெருத்தெருவா வெட்டிப் போடுகினம்..... மனுசனை இறைச்சியா வெட்டுறவனு களுக்கும் திருஞானம் அண்ணைக்கும் எப்படி ஒத்துப் போகும்..... ?''

நீலச் சட்டைக்காரன் தலையை ஆட்டினான். '' உண் மைதான் '' என்றான் அவன். அவன் - சொன்னான்.

'' இந்தியப்படை யாழ்ப்பாணத்துக்கு வந்து - அந்தப் படைக்கு ஈ. பி. ஆர். எல். எவ் முண்டு கொடுக்கத் தொடங்கின பிறகுதான், திருஞானம் அண்ணை புலிகளை ஆதரிக்கத் தொடங்கினவர்..... புலிகள் வெளிநாட்டு ஆக் கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுறாங்கள் எண்டு, அவருக்கு ஓரே கொண்டாட்டம்... புரட்சிகரமான ஆள் ......''

நண்பன் தொடர்ந்தான் -

'' எப்பவும் ஏழை எளியதுகள் பக்கத்திலைதான் நிற் பார். திருஞானம் அண்ணையைக் கடத்திக்கொண்டு போன நாளிலையிருந்து குடிசைகளெல்லாம் இருண்டு போய்க் கிடக்குது .....''

நீலச் சட்டைக்காரன் சொன்னான் -

'' மாவீரர் நாளுக்கு முதல் நாள் ராத்திரி திருஞானம் அண்ணை மாவிரர் நாள் நிகழ்ச்சிக்கெண்டு நாடகம் பழக்கினது கண்ணுக்குள்ளை இருக்குதடா...... மாவீரர் நாளிலை அவரையும் கொண்டு போட்டானுகள்...... நாடக மும் நடக்கேல்லை... ..''

'' எப்படிப் பிடிச்சவனுகளாம்? ''

'' திருஞானம் அண்ணை மாவீரர் நாளுக்கு வெளியிடு றதுக்கெண்டு கவிதைத் தொகுப்பு ஒண்டை அச்சிலை போட யாழ்ப்பாணத்தில குடுத்திருந்தவர். அச்சடிச்ச

புத்தகங்களை எடுத்துக்கொண்டு வரக்குள்ளைதான் இரு பாலைச் சந்தியிலை நிண்ட ஈ. பி. ஆர். எல். எவ் காரன்கள் பிடிச்சிருக்கிறாங்கள்...... மோட்டார்சைக்கிளுக்குப் பின்னாலை பைக்குள்ளை - இருந்த கவிதைப் புத்தகம் காட்டிக்குடுத்துப்போட்டுது......''

என்றான் நீலச் சட்டை.

* * *

நல்லூர்க்கோவில் முற்றத்தில் - '' கிளாக்கரும் வாத்தியாரும் பேசிக்கொண்டிருந்தார்கள்......

இருவரும் நல்லூர்க்காரர்கள். ஐம்பதைத் தாண்டிய கட்டைகள்.

திலீபன் உண்ணா நோன்பு இருந்தபோது ஒவ்வொரு நாளும் அவன் மேடைக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து அந்தக் கிழட்டு நெஞ்சங்கள் புலிகளோடு ஒன்றிப் போனவை.

இந்தியப் படையும் கூலிகளும் வந்த நாள் தொடக்கம் தங்கள் உணர்வுகளை - எல்லாம் வெளியே கூற முடியாமல், இருவருக்குள்ளாக மட்டுமே மறைவில் பகிர்ந்து கொள்ளும் வழக்கம்.

அது 30 - 11 - 1989.

கோவில் மணி ஓசையும், மேளமுமாய் பூசை நடக்கிறது.

' கிளாக்கர் ' செல்வாக்குள்ளவர். ' அசோகா கொட்டேல் ' வரை செய்திகளைத் திரட்டும் அளவுக்கு அவர் செல்வாக்குப் பாயும்.

எல்லாம் மறைவில்தான்.

'' புத்தூரிலை இருந்து திருஞானசேகரன் என்று ஒரு பெடியனைக்கொண்டுவந்து என்னபாடு படுத்துறாங்கள் பாவிகள்......'' என்றார் ' கிளாக்கர் '.

நாலு பக்கமும் அவர் பார்த்துக் கொண்டார்.

" சொல்லுங்கோ ' கிளாக்கர் '...... எங்கை? அசோகா ' கோட்டலிலையே.......? " என்று ஆவல்பொங்கக் கேட்டார் வாத்தியார்.

" ஓம் பாருங்கோ......உதுதான் மாவீரர்களைப் பற்றி எழுதின கையே? எண்டு கேட்டு உந்தப் பெடியன்ரை கைவிரல்களை எல்லாம் ஊசியாலை குத்தியிருக்கிறாங்கள். பெடியன் துடியாய்த் துடித்திருக்கிறான்......"

வாத்தியாருக்குக் கண்கள் கலங்கிற்று......

" புலியள் போராட்டத்திலை துன்பங்களைத் தாங்குகினம்......சிலர் அவர்களுக்குத் துணையாக இருந்து - வாற துன்பங்களை ஏற்றுக் கொள்ளுகினம்...... நெஞ்சு வெடிச்சுப் போகும் போலை இருக்கு ' கிளாக்கர் '......" என்று துயரத்தை விழுங்கினார் வாத்தியார்,

' கிளாக்கர் ' சொன்னார் -

" எனக்கு உந்தக் கதைகளைச் சொன்னவன் பார்த்துக்கொண்டிருக்கைக்குள்ளையே, மூன்று முறை பெடியன் மயங்கிவிழுந்து போட்டானாம்...... அறையெல்லாம் - இரத்தமாம் ......' அசோகா கொட்டல் இறைச்சிக்கடை போலை இருக்குது - இன்னும் நாலுபெடியன்களை காலைக் கையைக் கட்டி, நிலத்திலைபோட்டு வைச்சிருக்கினம்...... எப்ப தோலுரிப்பாங்களோ தெரியாது " எண்டு சொன்னான் அந்த ஆள்......

கிளாக்கர் நிலத்தில் கிடந்த குச்சால் மணலில் கோடு கிழிக்கத் தொடங்கினார்.

ஒன்றின் மேல் ஒன்றாகக் கிழிந்து கிடந்த அந்தக் கோடுகளில் வாத்தியாருக்கு திருஞானத்தின் உடலே தெரிந்தது.

* * *

*01 - 12 - 1989.*

புத்தூரில் ஓடைக் கிராமத்தில் திருஞானம் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து கிடந்தான்.

"ஓ!" என்று எழும் ஒப்பாரி ......பறை மேளம்...... ஓலத்தோடு ஓலமாய் நாய்களின் ஊளை.

அச்சத்தோடு - மக்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள்.

ஒரு பெரியவர் பக்கத்தில் இருந்த கிழவியைப் பார்த்துச் சொன்னார்.

"நாவாந்துறையிலை பெடியன்ரை சவத்தைக் கொண்டு வந்து போட்டிருந்தான்கள். காலையிலைதான் பேச்சு அடிபட்டுப் போய்ப் பார்த்தனாங்கள். முடங்கிச் சுருண்டு கிடந்தான் பிள்ளை. ... உடம்பெல்லாம் காயம்...... உவங்களுக்குத் தலையிலை இடிவிழ!"

"உங்கினை இருந்துதான் சவத்தைக் கொண்டுவந்தவையே......?" என்று கேட்டாள் கிழவி.

"ஓம்......ஓம்...... அப்பாவி மக்களைக் கொல்லுறதும் வீதியிலை போடுறதும்தான் - இந்தியப்படையும் உந்தப் கூலிகளும் வந்து நாம கண்ட நன்மை...... உவங்கள் உருப்படுவான்களே......? கொலைகாரன்கள்."

பெரியவர் பொருமி வெடித்தார்.

அவர் பார்வை அடிக்கடி அவர் கையில் இருந்த தாள் துண்டிலேயே பதிந்திருந்தது.

மாவீரர் நாள் பற்றி திருஞானம் வெளியிட இருந்த புத்தகத்தில் அவன் எழுதிவைத்திருந்த கவிதை அது.

'தொள தொள'வென்ற குரலில், கிழவர் அதைத் திரும்பத் திரும்பப் படித்தார் -

"இந்த மண்ணின்

அடிமை விலங்கை

உடைத்தெறியக்
கிளம்பிய கரங்கள்......
விடுதலைப் பயிரின்
வலுமிகு உரங்கள்......!"

○

நெருப்பு
தை 1990

